# பாகல் துளிர்



மட்/மமே/பாவற்கொடிச்சேனை

விநாயகர் வித்தியாலயம்.

உன்னிச்சை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்/மமே/பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம்

## மலர்க்குழு
## மட்/மமே/பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம்
## 09.04.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

வாழ்த்திடுவோமே வான் புகழ் பெறவே
தாழ்த்தி எம் தலைதான் பணிந்தே நாம்
[வாழ்த்திடு.......]

மாவலி வளம்போல் மட்டுநகர் தனிலே
மாபெரும் திட்ட உன்னிச்சைப்பதியில்
பாவற்கொடிச்சேனை தனில் நின்றிலங்கும்
பாலரெம் கல்விக் கூடமாம் இதனை
[வாழ்த்திடு.......]

முல்லையும் மருதமும் முருகனின் குறிஞ்சியும்
மூன்றுமே இணைந்தது முழுமைச் சூழலில்
எல்லையில் விளங்கும் எம் வித்தியாலயம்
என்றும் உயர்ந்து ஓங்கி வளர்ந்திட
[வாழ்த்திடு.......]

பாங்குடைக்கல்வி பலதுறை ஈர்ந்தான்
பண்புடையாசான் பரிந்தெமக் கனித்தான்
ஓங்கிய ஞானம் உத்தம சீலம்
ஒன்றாய்த் தந்தெமை உயர்த்திய தாயை
[வாழ்த்திடு.......]

இயற்றியவர்
ஆ. பொன்னுத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட் /மமே/பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம்

## மகுட வாசகம்

“கற்க கசடற”

## பணிக்கூற்று

“கலைத்திட்டச் செயற்பாடுகளின் ஊடாகவும்
மனித மாண்புகளின் மேம்பாட்டை
கண்டமைடயும் ஒழுக்க விழுமிய
நெறிகள் ஊடாகவும் எதிர்கால சவால்களை
எளிதாக எதிர் கொள்ளும் ஆளுமை
மிக்கதோர் சமூகத்தை உருவாக்கல்”

## தூரநோக்கு

“ஆளுமை, ஆற்றல், தேர்ச்சி மிக்க
மனிதநேய மாண்புகளுடனான சமூகம்”

## MOTTO

Learn to be Absolved

## VISION

A Community of Prowess, Ability and Eminence in Proficient Humanism

## MISSION

To Create, through Curricular Activities and Training in Code of Conduct to Attain Excellence in Humanism, a Community that Could Easily Tackle the Challenges that Will Confront in Future.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே !
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே !

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே !

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே !

வாழ்க தமிழ் மொழி ! வாழ்க தமிழ் மொழி !!
வாழ்க தமிழ் மொழி !!
வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே-நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே-நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

1. ஆலயங்களில் புதைந்துள்ள அறிவியல் உண்மைகள்
2. நடிகனுக்குரிய பயிற்சிகள்
3. பாவற் கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம்
4. விவசாய நவீன மயமாக்கமும், சூழல் சார் பிரச்சனைகளும்
5. மருத்தவக் குறிப்புகள்
6. விலகி நிற்பவர்கள் வெல்லுவதில்லை வெல்ல நினைப்பவர்கள் விலகுவது இல்லை
7. Parents' Role in Child Development
8. உடல் எழுத்து - கவிதை
9. மாணவன் - கவிதை
10. பாவற்கொடிச்சேனைக் கிராமமும் பாடசாலையும் ஓர் நோக்கு
11. எனது பாடசாலையின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு கற்றலில் ஏற்படும் இடர்பாடுகள்
12. கவிதை
13. மலரும் நினைவுகள்
14. சிந்தனைத்துளிகள்
15. கல்விச்சாலை நினைவலைகள்
16. வினையாகும் விவசாயம்
17. எனது பாடசாலை
18. வெளிச்சம்
19. இளைஞர் அபிவிருத்தி ஊடகங்களினால் ஏற்படும் தாக்கங்கள்
20. இடர்பாடுகளும் இடைவிலகளும்
21. டெங்குவை ஒழிப்போம்
22. எம் கல்விச் சலையின் ஒளி தீபங்கள்
23. நன்றிப் பால் உயர்வதறிவு
24. விடக்கல்லின் மகிமை
25. எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்களிப்பு
26. சிறுவர் உரிமைகளும் எமது பிரதேச மாணவர்களும்
27. Bried History of the school
28. என்றும் மனதை விட்டு மறவாத பள்ளிப்பருவ நாட்கள்
29. ஆசிரியர் - கவிதை
30. கல்வியின் அவசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவாமியின் ஆசிச்செய்தி

மட் /மமே /பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயமானது 18.01.1954 ஆரம்பிக்கபட்டு 60 வருடங்களை கடந்த நிலையில் "பாகல் துளிர்" என்னும் பாடசாலையின் சிறப்புமலரினை வெளியிட உள்ள நிலையில் இவ்விதழக்கு ஆசியுரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் மலர் குழுவினரையும் மனதார வாழ்த்துகின்றேன்.

"கல்வியின் சாரம் மன ஒருமைப்பாடே தவிர வெறும் தகவல்களைச் சேகரிப்பதல்ல சிறந்த குணத்தை உருவாக்கும், மனவலிமையை வளர்க்கும், அறிவை விரியச் செய்யும் ஒருவனை சொந்தக்காலில் நிற்கச் செய்யும் கல்வியே தேவை" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

தேசபக்திக்கும், தெய்வபக்திக்கும் உறுதியான அத்திவாரம் நல்லொழுக்கமும், நற்பண்புமே, பண்பை உருவாக்குவதுதான் கல்வியின் இலட்சியம் அதற்கு குறைந்த வேறு எந்த இலட்சியமும் கல்வியை உயிரற்றதாக்கிவிடும். என்று நம்பினார் சுவாமி விவேகானந்தரின் சிஷ்யையும் பாரதியாரின் குருவுமான சகோதரி நிவேதிதை.

இப்படியான கல்வியைப் பெற, அன்பான மாணவர்களே நீங்கள் எவ்வாறு இருக்கவேண்டும்மென விதுர நீதியில் சொல்லப்பட்ட விதுரரின் கூற்று மிகவும் சிந்தனைக்குரியது. இன்பத்தை நிடுபவனுக்கு கல்வி எப்படி வரும்? கற்க விரும்புபவனுக்கு சுகம் எப்படிக் கிடைக்கும்? கல்வியை நாடுபவன் சுகத்தை துறக்க வேண்டும் சுகத்தை அனுபவித்துக்கொண்டு கல்வி கற்பதென்பது இயலாததொன்று என்கிறது. எனவே மாணவர்கள் காக்கையைப் போல் சுறுசுறுப்பு, கொக்கை போன்ற தீவிர கவனம் நாய் போன்ற தூக்கம் மிதமாக உண்பது, வீட்டுச் சுகத்திற்கு அடிமையாகாதிருப்பது போன்ற குணங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என இவ்வாசிச் செய்தியின் ஊடாக நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

"பாகல் துளிர்" இதழ் கல்வி பற்றிய மேற்சொன்ன விடயங்களை எம் ஆசிரியர், மாணவர், அறிஞர், கல்விமான்கள் ஆகியோரின் ஆக்கங்கள் ஊடாக தாங்கிவரும் என நினைக்கின்றேன். இம்மலர் வெளியீட்டில் ஆர்வத்துடன் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் இறைவன் அருளை வேண்டுவதுடன் தெய்வத் திருமூலரின் நல்லாசிகளைய் வேண்டி எனது நல்லாசிகளையும் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்றும் இறைபணியில்

**சுவாமி பிரபுபிரேமானந்தா**

SWAMI - IN - CHARGE
RAMAKRISHNA MISSION
RAMAKRISHNAPURAM
BATTICALOA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

கிராமங்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட இயற்கை எழில் கொஞ்சும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் மண்முனை மேற்கு கோட்டத்திலே அமைந்திருக்கின்ற பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலத்தில் "பாகல்துளிர்" எனும் நாமம் கொண்டு வெளிவருகின்ற இச் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ்கின்றேன்.

பாவற்கோடிச்சேனை விநாயகர் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு மணிவிழாவினையும் கடந்து செல்கின்ற வேளையில் முதன் முறையாக கன்னிமுயற்சியாக "பாகல்துளிர்" என்ற நாமங் கொண்ட இச்சஞ்சிகை வெளியீடலானது பாராட்டிற்குரியது இருப்பினும் இச்சஞ்சிகை ஒன்று உதயமாகவேண்டும் என சிந்தித்திருக்கின்ற தற்போதுள்ள பாடசாலை சமூகத்தினரை பாராட்டுகின்றேன் வாழ்த்துகின்றேன்.

எனது வலயத்திலுள்ள ஒவ்வொரு பாடசாலையும் பல சவால்களை கடந்து வீறுநடைபோட்டுக் கொண்டிருக்கிறது தடைகளை உடைத்தெறிந்து சரித்திரம் படைக்க முயற்சிக்கும் செயற்பாடுகளில் நூல்வெளியீடு சார்ந்த அழகிய நிகழ்வுகளும் அவசிமாகும். ஒரு நிறுவனம் சஞ்சிகை ஒன்றை வெளியிடுகின்ற தெனில் அது அந்நிறுவனத்தின் உயர்வையும் அங்கு கடமைபுரியும் ஊழியர்களது ஆற்றல்களையும் அச்சமூகத்தினரின் நிலைப்பாட்டினையும் வெளிக்கொண்டு வருவதுடன் ஆவணம் பரிவாகவும் காட்சிப்படுதப்படுகின்றது.

பல்வேறு வகையான எதித்தாக்கங்களுக்கும் ஒவ்வாத சூழலுக்கும் செங்சொளித்து பலம் குன்றிப்போயுள்ள எமது சமூகத்தினை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும் இதை முன்னெடுப்பதற்கான இவ்வாறான வெளியீடுகள் பல மட்டங்களிலும் தொடர வேண்டும். இதுவே என் அவா பாடசாலை வரலாறு, சாதனைகள், பாடசாலை சமூக ஆக்கங்கள் என்பவற்றை தாங்கிவரும் இச் சஞ்சிகை பிரசவிப்பு பாராட்டிற்குரியது இது காத்திரமானதாக சரியானதாக முன்மாதிரியானதாக சிறக்க வேண்டும்.

இவ்வாறான சிறந்த பணியினை செய்ய முன்வந்திருக்கும் சஞ்சிகைக்குழுவினரைப் பாராட்டுவதுடன் 'பாகல் துளிர்' சஞ்சிகையின் பிரசவிப்பானது தொடர்ந்தும் இப்பாடசாலையில் காலங்காலமாக மலர வேண்டும் என இறைவனிடம் வேண்டி மனப்பூர்வமாக வாழ்த்திக்கொள்கின்றேன்.

**அகிலா கனகசூரியம்**
வலயக்கல்விப் பணிப்பாளர்
மட்டக்களப்பு மேற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



வயலும் வயல் சார்ந்த மருதநிலம் ஒருபுறமும், மலையும் மலை சார்ந்த குறிஞ்சிநிலம் மறுபுறமும், காடும் காடுசார்ந்த முல்லை நிலம் நாற்றிசையும் சூழ தென்றலின் தாலாட்டும் சிறு புள்ளினங்களின் இனிமையான ஓசையும் இயல்பாக மெருகூட்டும் இனிமையான கிராமம். பாகல் கொடி தன்னை பகருகின்ற காரணமாய் நாமமதை பெற்றுவிட்ட நற்கிராமம் "பாகல்கொடிச்சேனை" விக்கினங்கள் தொலைத்துவிடும் விநாயகர் நாமம் பற்றி பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலம் என அறிவச்சேலையாகி அகவை அறுபத்து நான்கை அடைந்த நிலையை எண்ணிப்பார்க்கையில் என்மனம் மகிழ்கிறது. மலையென ஓங்கி மனிதனை வளமூட்டும் பாடசாலை "பாகல் துளிர்" தன்னை பனுவலாய் பகிர்வதில் பல கோடிபெருமை துளிருக்கு ஆசி கூறுவது அதனிலும் பெருமை பாகல் துளிர் விட்டு பற்றிப் படர்ந்து பயன்கொடுக்கவேண்டும் பலருக்கும் வரலாற்றை தானேந்தி, மற்றவரின் சாதனையை பறை சாற்றி அறிவாலயத்தின் அனைவரது ஆக்கங்களையும் அழகாக தான் சுமந்து தரணியில் தவழ்ந்து வர நல்லாசியுடன் நலமான வாழ்த்துக்கள்.

**திரு.தி. சோமசுந்தரம்**
கோட்டக்கல்விப்பணிப்பாளர்
மண்முனை மேற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்ற உறுப்பினரின் வாழ்த்துச்செய்தி

**பாகல் துளிரை**

**வாழ்த்துகிறேன், வரவேற்கிறேன்.........**

மட்/மமே/பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயமானது 18.01.1954 இல் ஆரம்பிக்கப்பட்டது என்ற வகையில், இன்றைய நிலையில் 63வது அகவையினை தாண்டியுள்ளது. எனவே, இந்தப் பாடசாலையின் சான்றுகள், சாதனைகளை ஆவணப்படுத்த வேண்டியுள்ளது அவசியமானதாகும் அதனைக் கருத்தில் கொண்டு முதலாவது சஞ்சிகையாக 'பாகல்துளிர்' பிரவசிப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

பாடசாலையில் சாதனைகள், சோதனைகள் யாவும் ஆக்க வடிவில் பதிவு செய்யப்படும் போது பாடசாலையினைப் பற்றி மாணவர்களாலும் எதிர்காலச் சந்ததியினராலும் விளங்கிக் கொள்ளக்கூடியதாக அமையும். அதன் மூலமாக பல அனுகூலங்களையும் பெறக்கூடியதாக அமையும். வருடாவருடம் இப் 'பாகல்துளிர்' துளிர் விட்டு தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பதே எனது அவாவாகும்.

இப்பாடாலையின் வளர்ச்சியிற்கு, ஆக்க சிந்தனையுடன் ஊக்கமாக உழைக்கின்ற அனைவரையும் வாழ்த்துகிறேன். வரவேற்க்கிறேன். நல்லவற்றை சிந்திப்போம் நல்லவற்றை செய்வோம் நல்லவற்றை படைப்போம். அவ்வாறு செய்தால், நாளைய சமூகம் நன்றி மறவாமல் எம்மை ஞாபகத்தில் வைத்திருக்கும். பாடசாலையின் சரித்திரத்தையும் மறக்காமல் பதிவு செய்யுங்கள்.

**ஞா. ஸ்ரீநேசன்**
பாராளுமன்றஉறுப்பினரும்,மாவட்ட
அபிவிருத்திக்குழு இணைத்தலைவரும்.
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி

மண்முனை மேற்குப்பிரதேசசெயலகப் பிரிவில் அமைந்துள்ள மட்/மமே /பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலய. பாடசாலை யானது இம்முறை வெளியிடுகின்ற பாகல்துளிர் என்ற சஞ்சிகை வெளியீட்டிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இம் முறை இப்பாடசாலைச் சமூகம் எடுத்து இருக்கின்ற முன்னோக்கிய முயற்சிக்கு எமது பாராட்டுக்கள் இம் மலரில் வெளிவர இருக்கின்ற வரலாறு மற்றும் பாடசாலைச் சமூகத்தினுடைய இருப்புக்களை ஆவணப்படுத்தி அதனை பின்வரும் சந்ததியினருக்கும் அறிக்கை செய்கின்ற முயற்சிகளுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பண்பாட்டு என்பது வெறுமென இலக்கியம், கலை என்பனவற்றை உள்ளடக்காது மக்களின் நடத்தை, தொழில் போன்ற இன்னோரன்ன வாழ்வியல் அம்சங்களைக் கொண்டதே பண்பாடு ஆகும் எனவே மட்/மமே /பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம். தற்போது வெளியிடுகின்ற "பாகல் துளிர்" என்ற சஞ்சிகையானது மரவு வழியாக அப்பாடசாலையில் பின்பற்றப்பட்டு வந்த வழக்காறுகளை ஆவணமாக்குகின்ற முயற்சி பாராட்டத்தக்கது.

எமது பண்பாட்டு அம்சங்கள் இன்றைய காலகட்டத்தில், உலகமயமாதல், அரசியல், பொருளாதார நெருக்கடிகள் போன்ற காரணங்களினால் நிலை குலைந்து காணப்பட்டாலும் அவற்றினை நிலை நிறுத்தி அவற்றினை பாதுகாத்து ஆவணப்படுத்த வேண்டிய, பொறுப்பு ஒவ்வொரு பாடசாலை சமூகத்திற்கும் இன்றியமையாதது எனவே இப்பாரிய பொறுப்பினை இப்பாடசாலைச் சமூகம் எடுத்திருக்கின்றது. இது முக்கியமானது என்று கருதுகின்றேன்.

உண்மையில் வரலாற்றுப்பதிவுகள் ஒரு பாடசாலைச் சமூகத்தின் இருப்பு நிலையை வெளிக்கொணருகின்ற விடயமாக அமைந்து விடுகின்றது அந்த வகையில் இந் நூலானது வரலாறு மற்றும் அவ் பாடசாலையில் கற்ற மாணவர்களின் சாதனைகள் அச் சமுகத்தினுடைய பல்வேறு ஓட்டு மொத்தமான பண்பாட்டுக் கூறுகளை தாங்கி வர இருக்கின்றது அந்தவகையில் இந்நூலானது ஒரு பெறுமானம் உள்ள நூலாக அமையுமென நான் நினைக்கின்றேன்.

இந்நூல் சிறந்த முறையில் வெளிவரவும் இந்நூல் விழா சிறப்புற அமையவும் இவ்முயற்சியில் ஈடுபடுகின்ற பாடசாலை சமுகம் சார்ந்த குழாமிற்கு எனது நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**S.சுதாகர்**
பிரதேச செயலாளர்
மண்முனை மேற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபரின் கருத்து

மீன்பாட
தேனிசைக்கும்

மட்டுமா நகரில் கரவையினம் பால் சொரிய கதிரினம் தலை சாயும் படுவான் கரையின் பதியே இலங்கை திருநாடு கண்ட ஈழப்போராட்டத்தால் இழந்து போன கல்வியை புத்துயிர் பெற வைக்கும் நிலை பேறான எண்ணத்தோடு மாவட்டத்தின் ஐந்தாவது வலயமாக குறிஞ்சாமுனையில் மட்டக்களப்பு மேற்கு வலயம் 2011 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது இவ்வலயத்தின் கீழ் இயங்கிவரும் அறுபத்தேழு பாடசாலைகளில் வலயத்தில் இருந்து மேற்கே எல்லைப்புறமான சுமார் பன்னிரெட்டு கிலோ மீற்றர் தொலைவில் பாவற்கொடிச்சேனை எனும் அழகுறு கிராமத்தில் 1954.1.18 அன்று உன்னிச்சை வலதுகரை அ.த.க பாடசாலை எனும் நாமத்தோடு ஆரம்பிக்கப்பட்டு இன்று பாவற் கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம் என இன்று முன்னூற்று ஐம்பத்தைந்து மாணவர்களுடனும் பதினெட்டு ஆசிரியர்களுடனும் பரிணமித்து உள்ளது.

அறுபத்துநான்கு அகவைகளை கடந்த நிலையில் உள்ள இப்பாடசாலையானது அரிய பல சாதனைகளை படைத்துள்ள போதிலும் அதற்கென அழியாத நினைவுச்சுவடிகளால் எதனையும் ஆதாரங்காட்ட முடியாதுள்ளது இந்நிலையில் பாடசாலையினதும், சமூகத்தினதும், கிராமத்தினதும் வரலாற்று உண்மைகளை காலத்தால் அழியாத நினைவுச் சுடிவகளாக்க குழாமிடம் இருந்து வெளிப்பட்டு "பாகல் துளிர்" என்ற நாமத் தோடு வெளிவருவதனை இட்டு பாடசாலையின் முதல்வர் என்ற ரீதியில் நான் மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாகல் துளிர் வெளியீட்டின் பிரதான பங்காக பணி புரிந்த மலர்க் குழுவினருக்கும் மன நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளும் அதே வேளை இந்த மலரில் தங்களது கருத்துகளையும் வழங்கி இடம் பிடித்துக் கொண்டிருக்கும் மதிப்பு மிக்க முன்னாள் அதிபர்கள், பழைய மாணவர்கள், எழுத்தாளர்கள் அனைவருக்கும் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டு இதில் உள்ள தகவல்கள் காலத்தை காட்டும் கண்ணாடியாகவும் வாசிப்போர் மத்தியில் சிறிதேனும் அறிவொளியை ஊட்டும் என்ற மன நிறைவோடும் மலர்க்குழுவினருக்கு மீண்டும் ஒரு முறை வாழ்த்துக்களை கூறி விடை பெறுகின்றேன்.

நன்றி

**தி.வ. புஷ்பாகரன்** (அதிபர்)
மட்/ மமே/ பாவற்கொடிச்சேனை
விநாயகர் வித்தியாலயம்
உன்னிச்சை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதி அதிபரின் கருத்து

கிழக்கிலங்கையின் கண் மீனிசைக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கதிரவன் மறையும் மண்முனை மேற்கில் மகிமை பெறுமருதமும் மன்ங்கவரும் முல்லையும், வளங்கொளிக்கும் பாவற் கொடிச்சேனையையும், அதன் அயல் கிராமங்களையும் அறிவொளியால் செழுமையூட்டிக் கொண்டிருப்பதே மட் / மமே / பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம் இக்கலை கூடம் படைத்த சாதனைகள்.மற்றும் பாராட்டுக்கள், ஆசிரியர்களின் அர்ப்பணிப்புக்களால் கிடைத்த கௌரவங்கள் என்பவற்றி னை பதிவு செய்து அவற்றினைப் பாராட்டி எடுக்கப்படும் பரிசளிப்பு விழாவின் போது மாணவர்களின் சிந்தனைகள் சிதறல்கள், அறிவுத்தேடல்கள், ஆசிரியர்களினதும், பழைய மாணவர்களினதும் படைப்பாற்றல்கள் என்பனவற்றினை உள்ளடக்கி "பாகல்துளிர்" எனும் நாமத்துடன் இந்நூல் வெளிவருவதையிட்டு பெருமிதமடைகின்றேன்.

"நனவு நல்லது வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்" எனும் மகாகவி பாரதியின் கூற்றிற்கு ஒப்பாக இவ்வாறான தொரு படைப்பு வெளிவர வேண்டும் எனும் எமது பலநாள் கனவு தற்போது நனவாகியுள்ளமையினையிட்டு அகமகிழ்பவர்கள் அடியேனும் ஒருவன் இச்சாலை தற்போது அதன் 64வது அகவையில் பயணித்துக்கொண்டிருக்கும் இப்பரிணாம வளர்ச்சியில் அது கடந்துவந்த பாதையில் பதித்த சுவடுகள், தடையங்கள் என்பனவற்றினை உள்ளடக்கிய இவ்எழுத்தாவணம் கன்னி வெளியீடாக அமைவது இக்கல்லூரியின் மையில்கல்லாக அமையும் என்பதில் ஐயம் இல்லை. உள்ளங்கை நெல்லிக்கனி போல் திகழ்ந்து எமது எதிர்கால சமுதாயத்தின் அறிவொளியினைப் பெருக்கி புற அழுக்கினை நீக்கிக் கொண்டிருக்கும் இக்கல்விச்சாலை மென்மேலும் பலசாதனைகளைப்படைத்து இவ்வாறான வெளியீடு வருடா வருடம் வெளிவர வேண்டும் எனும் எனது அவாவினைப் பதிவு செய்து இவ்வாறான தொரு கைங்கரியத்தினை ஆற்றுவதற்கு எமக்கு சகலவழிகளிலும் ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து ஆலோசனைகளையும் வழங்கி அயராது உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது இதய சுத்தியுடனான நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்....

நன்றி.

**திரு.க.சௌந்தராஜன்** (பிரதி அதிபர்)
மட்/ மமே/ பாவற்கொடிச்சேனை
விநாயகர் வித்தியாலயம்
உன்னிச்சை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளரின் கருத்து

மீனினம் பாடகன்னலும் செந்நெல்லும் கலந்து ஆடுகின்ற வாவி சூழ் மட்டுமாநகரிலே மையமாக மண்முனை மேற்கினிலே தொல் வரலாறு கண்டு சிறப்புற்று விளங்குகின்ற பாவற்கொடிச்சேனையிலே முதலாவது வருடமாக கல்வியின் பயிருக்குவித்திட்டு விருட்சமாக்கும் செயன்முறைக்கு முலமாய் விளங்கும் மட்/ மமே/ பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலத்தின் "பாகல் துளிர்" இதழானது 1வது முறை மலராய் வெளிவரும் ஜனனப் பாதையையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

ஆழியின் விளியாம் மலராக தன்னிடம் முழுவதும் வெற்றொளி பரப்புவது போல் வளர்ந்து வரும் மழலைச்செல்வங்கள் தம் அறிவினையும் செயற்றிறனையும் பாடசாலையின் உள்ளக வெளியக சூழலுக்குள் பிரதிபலித்திட வெளியாகும் இவ்வேடு வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை இந் நோக்கிற்கமை வாகவே இம்மலர் வெளிவருகின்றது.

மாணவர்களின் ஆக்கங்களைச் சுமந்து வரும் இவ்விதழ் மாத்திரமல்லாமல் ஆசிரியர்கள், அதிதிகள் பெரியோர்களின் சிறப்புக்கட்டுரைகளும் "பாகல் துளிர்" மலரினை மேலும் சிறப்பித்துள்ளது. ஆக்கங்களை எழுதியுள்ள பெரியோர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள் மற்றும் இம் மலர்வெளியீட்டுக்கான நிதி உதவி நல்கிய உறவுகளுக்கும் என் உள்ளம் கனிந்த நன்றிகளுடன் இதனை ஊக்குவித்த அதிபர் அவர்களுக்கும் நன்றிகூறி எனது கருத்துரையினை நிறைவு செய்கின்றேன்.

நன்றி.

**திரு. சி. கிருஸ்ணகுமார்**
பாடசாலை அபிவிருத்திக்குழு செயலாளர்
மட்/ மமே/ பாவற்கொடிச்சேனை
விநாயகர் வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின் வாழ்த்துச்செய்தி

மீன்பாடும் தேனாடாம் மட்டு நகரிலே தேனினும் இனிய செங்கமல மணம் வீசும் பாவற்கொடிச்சேனை என்னும் ஊரிலே கல்வி என்னும் வித்தினை விதைத்துக் கொண்டிருக்கும் பாடசாலையாம் பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயமாகும். 1954.01.18 அன்று இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டும் மணிவிழாவைக் கடந்தநிலையில் உள்ளது. இதுவரை காலமும் மாணவச்செல்வங்களின் ஆற்றல், திறமைகள், சாதனைகள் வெளிவராத வண்ணம் காணப்படுகிறது.

இம்மாணவச் செல்வங்களின் திறமைகள் ஆற்றல்கள் சாதனைகள், கலைப்படைப்புகள், சிந்தனைதுளிகள், ஆற்றல் கொண்ட கவிதைகள் அறிவுக்குவியல்கள், பாடவிதான, இணைப்பாடவிதான சாதனைகளை தாங்கியதாக "பாகல் துளிர்" என்னும் சஞ்சிகையானது துளிர் விட இருப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இச் சஞ்சிகை வெளியீட்டிக்கு முன்னோடியாக இருந்த பாடசாலை அதிபர் அவர்கட்கு நன்றியை தெரிவித்து கொள்வதுடன் பல்வேறு வேலைப்பழுவிற்கு மத்தியில் ஆசிச் செய்திகளையும் வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய கல்வி மான்களுக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்ளுவதுடன் குறிப்பிட்ட காலத்தினுள் இச் சஞ்சிகையினை வெளியிட ஒத்துழைப்பு வழங்கிய மலர்குழுவிற்கும், பழைய மாணவர்களுக்கும், பாடசாலை அபிவிருத்திச்சங்கத்திருக்கும் நன்றியை தெரிவிப்பதுடன் சஞ்சிகை வெளியீடுவதற்கு நிதி உதவியை வழங்கிய நலன் விரும்பிகளுக்கும் மனதார நன்றியைத் தெரிவிப்பதுடன் சஞ்சிகையானது அழகாகவும் விரைவாகவும் சிறப்பாக வடிவமைத்து அச்சிட்டு கையளித்த துர்க்கா அச்சகத்தினருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்வதுடன் இச்சஞ்சிகையானது நெஞ்சை மகிழவைப்பதுடன் எல்லோருக்கும் முன்மாதிரியாக அமைந்து வரும் எனவும், வாசிப்போருக்கு பயனளிக்கும் விதாமாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை. இதழாசிரியர் என்றவகையில் அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

**பூ. சுகீதரன்**
இதழாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அதிபரின் நினைவலைகள்



கல்விக்காக அரசொன்றினால் அல்லது தனி நபர் ஒருவரால் செலவழிக்கப்படும் காலம், உழைப்பு, வளங்கள் போன்றன அந்த சமூகத்தினுடைய நீண்ட கால பயனைப் பெற்றுத் தருகின்ற ஒரு முதலீடாகும். எந்த ஒரு நாட்டினதும் சமூ கத்தினுடைய நடத்தைப் பண்புகள் அந் நாட்டின் கல்வியின் பண்புத் தரத்தின் ஓர் அளவு கோலாகும். தரமான வாழ்க்கை முறைமை ஒன்றுடன் கூடிய பண்பான சமூகமொன்றை உருவாக்க முடிவது சிறப்பான கல்விச் செயற்பாட்டினூடாக மாத்திரமேயாகும். மேற் கூறிய விடயத்தின் பால் கவனம்கொண்டு 1998.07.15ம் திகதி மட்/மமே/பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயத்தில் நிறைவேற்று அதிபராக கடமையைப் பொறுப்பேற்றேன். தரம் ஒன்று தொடக்கம் தரம் எட்டு வரை இருந்த இப்பாடசாலையில் 05 ஆசிரியர்கள் மாத்திரமே கடமை புரிந்தார்கள்.

பாவற்கொடிச்சேனை, காந்திநகர், சிப்பிமடு, கண்ணகி நகர், மாவிலங்கடிச்சேனை, ஊத்துமடு, நெடுஞ்சேனை போன்ற கிராமங்களில் இருந்து பிள்ளைகள் இப்பாடசாலைக்கு வந்த நிலையில் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய நிலையை உணர்ந்தவர்களாக இப் பெற்றோர்கள் அன்றும் உணர்ந்தார்கள் இன்றும் உணர்கின்றார்கள் ஏனெனில் பாடசாலையில் நடைபெறும் கூட்டங்களாயினும் சரி, நிகழ்வுகளாயினும் சரி, விழாக்களாயினும் சரி ஆண், பெண் இரு பாலாரும் கலந்து கொண்டு பங்களிப்புச் செய்தது இன்றும் என்கண்முன்னே தெரிகின்றது.

உரிய ஆசிரியர் வளம் போதாமையை உணர்ந்த இக்கிராமத்தைச் சேர்ந்த மற்றும் அயல்கிராமங்களைச் சேர்ந்த பெயர் குறிப்பிடப்படும் திருமதி அல்லி பிரபாகரன் திரு.கு.பிரபாகரன் , திரு.க. சௌந்தராஜன், திருமதி.சி. உதயகலாஜோதி, திரு.சி. சசிவரதன் போன்றோர்கள் தாமாகவே முன்வந்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இலவசமாக கல்வி புகட்டினார்கள் கிராம மக்களின் பூரண ஒத்துழைப்போடு சகல ஆசிரியர்களும் அர்ப்பணிப்பான முறையில் சேவை புரிந்தார்கள் ஆரம்பத்தில் இருந்த கல்வி நிலை மாறி முன்னேற்றமான நிலை படிப்படியாக மாறிக் கொண்டு வந்ததை நாம் உணர்ந்து கொண்டோம். இவ் வேளையில் தரம் 08 இல் இருந்து தரம் 09 ஆக வகுப்பு உயர்த்தப்பட்டது.

பாடவிதானத்தில் மாத்திரமன்றி இணைப்பாடவிதானத்திலும் இப்பாடசாலை மாணவர்கள் சிறந்து விளங்கினார்கள். 2000,2001 காலப்பகுதியில் அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டியில் திறந்த போட்டி பிரிவில் தென்மோடிக் கூத்து, விசேடகூத்து என்பன திரு.கு.பிரபாகரன் ஆசிரியரின் நெறியாழ்கையில் மாகாணமட்டம் வரை சென்று முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றது. இதில் வெற்றிபெற்ற மாணவர்களையும், வழிப்படுத்திய ஆசிரியர்களையும் அன்றைய வலயக்கல்விப்பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.S. மாணிக்கராஜா அவர்களின் தலைமையில் வரவேற்பும், பாராட்டுக்கூட்டமும் இடம் பெற்றது. 2002ம் ஆண்டு பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தது இதுவே முதல் தடவை என்று கூறலாம். இதே வருடம் கல்விச் சுற்றுலா சென்ற பல அனுபவங்களையும் அறிவு சார்ந்த விடயங்களையும் பெறுவதற்குரிய வாய்ப்பும் முதன் முறையாக இடம் பெற்றது. அரச ஆசிரியர் நியமனத்திற்கேற்ப புதிய ஆசிரியர்களும் பிற்பட்ட காலத்தில் எம்மோடு இணைந்து கொண்டார்கள். மேற்குறிப்பிட்ட ஆசிரியர்களில் கணிசமானோருக்கு நிரந்தர நியமனம் கிடைக்கப்பெற்றது. எல்லாம் கைகூடிவரும் வேளை 2013.10.01ம் திகதி எனது விருப்புக்கு மாறான இடமாற்றம் எனக்குக்கிடைக்கப்பெற்றது.

ஆசிரியராக இருந்த நான் இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டதில் இருந்து நிறைவேற்று அதிபராகி பின் அதிபர் தரம் - 2 - II கிடைக்கப்பெற்று இப்பாடசாலையையும், இப்பாடசாலை கிராமமக்களையும், என்னோடு பணிபுரிந்த ஆசிரியர்களையும் என் வாழ் நாளில் மறக்க முடியாது. இன்றும் கூட இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் உதவ அவாக் கொண்டுள்ளேன். இம்மலருக்கு இப்பாடசாலை பற்றிய எனது மனப் பதிவுகளை சுருக்கமாக வேண்டி நின்ற திருமதி அல்லி பிரபாகரனுக்கும், நூலாக்கக் குழுவினருக்கும், பாடசாலை நிர்வாகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் கூறிக் கொள்கின்றேன்.

திரு.தி. புலேந்திரகுமார்
அதிபர்
மட்/மமே/ கன்னன்குடா மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அதிபரின் நினைவலைகள்



ஒவ்வொரு மனிதர் வாழ்விலும் கடந்த காலம் என்பது மறக்க முடியாத பல இனிப்பான, கசப்பான நிகழ்வுகளை கொண்டதாகவே இருக்கும். அந்த வகையில் 1977ம் ஆண்டு ஆசிரியாக நியமனம் பெற்று ஆசிரியர், அதிபர் எனப்பல பாடசாலைகளில் கடமையாற்றினாலும் 30.09.2003 - 30.09.2007 வரையான காலப்பகுதியில் தரம் - 1 அதிபராக கடமையாற்றிய மட்/மமே/ பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம் சேவைக் காலங்களை மீட்டுப்பார்ப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததை இட்டு பெருமிதம் கொள்கிறேன்.

இக்காலப் பகுதியானது மிகவும் பயங்கரமான கெடுபிடியான ஒரு காலகட்டமாக இருந்தாலும் என்னுடன் இணைந்து இப்பாடசாலையில் கடமையாற்றிய திரு. ஆ. நவரத்தினம், திரு. S. ரவிச்சந்திரன் தட்சணாமூர்த்தி வேள் ம. சிவரூபன், S. சுதாகரன், S. ரவிசங்கர், ம. பிரபாகரன், அல்லிபிரபாகரன், மாதவன், சண்முநாதன் ஆகிய ஆசிரியர் குழாத்தினரை என்னால் மறக்க முடியாது. இவர்களுடன் இணைந்து இன்பமாக கடமையாற்றிய நாட்கள் அவை.

எனக்கு முன்பு கடமையாற்றிய அதிபர் திரு.தி. புலேந்திரகுமார் அவர்கள் இப்பாடசாலையின் வகுப்புக்களை தரம் 8ல் இருந்து தரம் 9ஆக தரம் உயர்த்தினார் அவர் விட்டுச் சென்ற பணியின் தொடராக தரம் 10,11 ற்கு சாதாரண தரத்தை இப்பாடசாலையில் ஆரம்பித்து வைத்த பெருமைக்குரியவன் எனக் கூறிக் கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

அவ்வேளையில் க.பொ.த சாதாரண தரம் கற்ற மாணவர்களுக்கு இப்பாடசாலையில் சில வசதியின்மை காரணமாக எம் இனப்பற்றாளர் சிலர் இரு மாணவர்களை வேறு ஒரு பாடசாலையில் இணைத்து கற்பித்ததன் பயனாக அவர்கள் இருவரும் (தி.பிரதீபா - சித்த மருத்துவத்துறை ந.தமயந்தி - கணிதத்துறை) தமது பட்டப்படிப்பை முடித்துள்ளனர் இதையிட்டும் நான் பெருமிதம் கொள்கின்றேன்.

மேலும் எனது பெற்றோர் இக்கிராமத்தில் வசித்து வந்தாலும் என்னை இக்கிராமத்திற்கு அறிமுகப்படுத்தியவர் திரு.மா.சின்னத்தம்பி மாமா அவர்கள் அவரையும் இக்கிராம மக்களையும் என்னால் மறக்க முடியாது அவர்களின் நற்பண்புகள், பழக்க வழக்கங்கள் என்பவையும் என்னும் என்னால் மறக்க முடியாத பசுமையான அந்த நாள் ஞாபகங்களே!

என்னை இந்த ஞாபங்களை மீட்டிப்பார்க்க வைத்த திரு மு. பிரபாகரன், திருமதி. பிரபாகரன் ஆகிய இருவருக்கும் என் நன்றிகள்

என்றும் அன்புடன்
மா. அருளம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது பார்வையில் மட்/மமே/பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம்



கிழக்கிலங்கையின் கண் மட்டுநகரின் மேற்கே அமைந்துள்ள பழம்பெரும் கிராமமே பாவற்கொடிச் சேனை கிராமமாகும். இக்கிராமமானது மட்டக்களப்பு நகரின் மத்தியில் இருந்து 22km தூரத்திற்கப்பால் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் ஆரம்பத்தில் பாகற் கொடிகள் இயற்கையாகவே உருவாகிக் காணப்பட்டமையினால் இதற்கு "பாவற் கொடிச் சேனை" எனும் காரணப் பெயர் வந்ததாக கிராமத்துவாழ் மக்கள், மூத்தோர்கள் கூறுகின்றனர். இவ்வாறு அமையப் பெற்ற கிராமத்தில் விநாயகர் ஆலயத்திற்கருகாமையில் அமையப் பெற்ற கல்விச் சாலையே மட்/ மமே/ பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம் ஆகும் மேற்படி கிராமத்தில் வசித்து வந்த அமரர். கதிர்காமப்போடி இராசையா எனும் சமூகநோக்கமும், தூரநோக்கமும் உடைய சிந்தனையாளரினால் 1954.01.18 அன்று தனது குடிசை வீட்டு முற்றத்தில் 20 மாணவர்களைக் கொண்டு ஒரு குருகுலப்பாங்கில் அமையப் பெற்ற தனியார் பாடசாலையே இப்பாடசாலையாகும்.

1959ம் ஆண்டில் இப்பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டு 30 மாணவர்களுடன். "வலதுகரை வாய்க்கால் அ.த.க.பாடசாலை" எனும் பெயரோடு திரு.எஸ்.சாமித்தம்பி ஆசிரியரிடம். இப்பாடசாலை ஒப்படைக்கப்பட்டது. தனிமையில். பல சிரமங்களுக்கு மத்தியில் பாடசாலையை நடத்திக் கொண்டிருந்தார் 5 ஆண்டுகளின் பின் திருமதி. இரா.அஞ்சலீனா அம்மையார் பாடசாலையைப் பொறுப்பேற்றார். அவருடைய இடையறாத உழைப்பினால் பாடசாலை முன்னேற்றப்பாதையில் செல்லலாயின. மேற்படி திருமதி. இரா அஞ்சலீனா அவர்களின் 16 வருட உழைப்பின் பின் 1976இல் பாடசாலையைப் பொறுப்பேற்ற திரு.ஆ.பொன்னுத்துரை அதிபரின் சிந்தனையினால். அமைக்கப்பட்ட 20x100 புதிய கட்டடத்திற்கு **மட்/பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம்** என 1987ல் பெயர் மாற்றப்பட்டு தரம் - 05 வரை வகுப்புக்கள் நிறுவப்பட்டன. 1988ல் 8ம் வகுப்புவரை உயர்த்தப்பட்டது. இக்காலப்பகுதியில் அதிபர் மாத்திரமே அனைத்து வகுப்புக்களையும் கற்பித்த நிலை காணப்பட்டது. 1994இல் தரம் 09ற்கு உயர்த்தப்பட்டு. பின்னர் 1999ல் முன்னாள் அதிபர் திரு.தி. புலேந்திரகுமார் அவர்களால் தரம் - 10 வகுப்பு நிறுவப்பட்டது.

இவ்வாறு காலம் காலமாக பல்வேறு அதிபர்கள், மற்றும் ஆசிரியர்களின் உழைப்பு, ஊக்கம், முயற்சி என்பவற்றினால் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு பாடசாலை வளர்ச்சிப்படிகளில் நடைபோட்டுக் கொண்டு வந்துள்ளது. அவ்வாறான காலப்பகுதியில் 09.09.2005ஆம் ஆண்டு இப்பாடசாலைக்கான எனது முதல் நியமன நாளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தது. அக்காலப்பகுதியிலேயே அதாவது 2005ம் ஆண்டு க.பொ.த.(சா/த) ஆரம்பிக்கப்பட்டது. அக்காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் 2010ம் ஆண்டிலேயே க.பொ.த (உ/த)ற்கு மாணவர்களை அனுப்பக் கூடிய நிலைமை உருவானது. காரணம் நாட்டில் இடம் பெற்ற அசாதாரண சூழல், ஆசிரியர் பற்றாக் குறை என்பனவாகும். இப்பாடசாலை பாவற்கொடிச்சேனை, காந்திநகர், கண்ணகிநகர், இருநூறுவில், மாவிலங்கடிச்சேனை, ஊத்துமடு, கற்பகக்கேணி, பழங்குடியிருப்புமடு, பத்தரக்கட்டை, நெடுஞ்சேனை போன்ற 10 கிராமங்களின் கல்வித் தேவையினைப் பூர்த்தி செய்த வண்ணம் உள்ளது. இங்கு வாழும் மக்களது பிரதான தொழிலாக விவசாயம் மற்றும் கூலித்தொழில் போன்றவற்றை மேற்கொள்ளுகின்றனர்.

2010ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பல மாணவர்கள் க.பொ.த (சா.தர)ப் பரீட்சை எழுதும் மாணவர்களின் நன்மை கருதி பரீட்சை நிலையமாக தெரிவு செய்யப்பட்டு மாணவர்கள் இப்பாடசாலையிலேயே பரீட்சைக்கு தோற்றினர். எதிர் காலத்தில் இப்பாடசாலை ஒரு க.பொ.த (உ.தர)ப் பாடசாலையாக உயர்வடைய வாழ்த்துகின்றேன்.

இவ்வாறான பாடசாலையின் சாதனைகள், சவால்கள் கீழ் குறிப்பிடப்படுகின்றது.

**பாடசாலையின் சாதனைகள்**

2001ம் ஆண்டில் தமிழ்மொழித்தினப் போட்டியில் மாகாண மட்டத்தில் நடைபெற்ற கூத்துப்போட்டியில் 1ம் இடத்தை பெற்றுக் கொண்டமை.

2009ம் ஆண்டு விளையாட்டுத் துறையில் 5000m, 1500m, 800m ஆகிய போட்டிகளில் மாகாணமட்டத்தில் முதல்நிலைபெற்று அகில இலங்கை போட்டியில் கலந்து கொண்டமை.

2010ம் ஆண்டு விளையாட்டுத் துறையில் 5000m, 1500m, 800m ஆகிய போட்டிகளில் மாகாணமட்டத்தில் முதல்நிலைபெற்று அகில இலங்கை போட்டியில் கலந்து அனைத்து போட்டிகளிலும் 2ம் இடம் பெற்றுக் கொண்டமை.

2010ம் ஆண்டு தமிழ்மொழித்தினப் போட்டியில் குறுநாடக போட்டியில் மாவட்டத்தில் வெற்றிபெற்று மாகாணத்திற்கு தெரிவாகியமை.

2011ம் ஆண்டு விளையாட்டுத் துறையில் ஈட்டி எறிதல் போட்டியில் மாகாணமட்டத்தில் 2ம் இடம் பெற்றுக் கொண்டமை.

2011ம் ஆண்டு பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக 172 புள்ளிகளை பெற்று ஒரு மாணவன் தரம் - 05 புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தார்.

2015ம் ஆண்டு விளையாட்டுத் துறையில் 1500m போட்டியில் மாகாணமட்டத்தில் 2ம் இடத்தை பெற்று அகில இலங்கை போட்டியில் கலந்து கொண்டமை.

கடந்த 2010ம் ஆண்டு தொடக்கம் 5 மாணவர்வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்த க.பொ.த.சா.தரப் பரீட்சையின் சித்தி நிலை கடந்த 2014ம் ஆண்டு 10 மாணவர்களாகவும், 2015ம் ஆண்டு 17 மாணவர்களாகவும் வளர்ச்சியடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012ம் ஆண்டு தொடக்கம் 2014 வரை சமூக விஞ்ஞானப் போட்டியில் தலா 02 பேர் மாகாணத்திற்கு தெரிவாகி இருந்தனர். 2015, 2016 காலப்பகுதியில் தலா 03 பேர் மாகாணத்திற்கு தெரிவாகி இருந்தனர்.

அதேபோல் 2013இல் 01 மாணவனும், 2014இல் 03 மாணவர்களும், 2015இல் 4 மாணவர்களும் அனர்த்த முகாமைத்துவப் போட்டிகளில் மாகாணத்திற்கு தெரிவாகி இருந்தனர்.

2013ம் ஆண்டு பாடசாலையில் வலயமட்ட வருடாந்த சாரணர் பாசறை சிறப்பாக இடம் பெற்றது.

2014இல் பாடசாலை வரலாற்றில் அதுவரை காலமும் இடம்பெறாத பாரியளவிலான பரிசளிப்பு விழா ஒன்றினை நடாத்தியமை.

பாடசாலையில் கல்வி கற்று உயர்தரத்திற்காக வேறுபாடசாலைகளுக்கு சென்றவர்களில் இதுவரை 07 மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் தமது கல்வியை தொடருகின்றனர்.

**சவால்கள்**

- தற்காலத்தில் வேலைவாய்ப்பிற்காக அதிகமான பெற்றோர் வெளிநாடுகளுக்கு செல்வதனால் பிள்ளைகளின் கல்வியில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.
- மாணவர்கள் கற்கக்கூடிய நூலக வசதியின்மை.
- 10 கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் இப் பாடசாலையில் கல்வி கற்பதனால் இவர்களில் பெரும்பாலானோர் தூர இடங்களில் இருந்து பாடசாலைக்கு வருகின்றமை.
- பிரதான வீதிகள் திருத்தப்படாமல் வயல்வெளிகளாக காணப்படுகின்றமை ஆசிரியர். மாணவர் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது.
- இன்றும் பல்வேறு விடயங்களில் பெற்றோர் விழிப்படையாமல் காணப்படுகின்றமை.
- நீர்ப் பற்றாக்குறை
- பெற்றாருக்கு தொடர்ச்சியான தொழில் இன்மை
- மாணவர்களது இளவயது திருமணம்
- மாணவர்களது இடைவிலகல்
- மாணவர் கல்வியில் பெற்றாரின் அக்கறையின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலைக்கான விஞ்ஞான ஆய்வு கூடம் இல்லாமை.
- பாடசாலைக்கான போதிய கணணி, மற்றும் கணணி வளநிலையம் இல்லாமை.
- பாடசாலைக்கான பல்லூடக இயந்திரம் இல்லாமை.
- பாடசாலைக்கான நிரந்தரமான விளையாட்டு மைதானம் புனரமைக்கப்படாமை.
- ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான சிறுவர் பூங்கா இல்லாமை.
- மாணவர்களுக்கான செயற்பாட்டறை இல்லாமை.
- அழகியல் மற்றும் ஆலோசனை வழிப்படுத்தலுக்கான அறைகள் இல்லாமை.
- பாடசாலைக்கான சுற்று மதில் பூரணப்படுத்தப்படாமை.
- மாணவர்களுக்கான முதலுதவிப் பொருட்கள் இல்லாமை.
- மாணவர்களுக்கான தளபாட பற்றாக்குறை (ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான Cவகை தளபாடத்தினையே இடைநிலை வகுப்பு மாணவர்கள் பயன்படுத்துகின்றனர்).
- வகுப்பறைகளுக்கான அலுமாரி, புத்தக றாக்கை இல்லாமை.
- ஆசிரியர் கதிரை, மேசை இல்லாமை.

**இவ்வாறான பல்வேறு விடயங்களை கொண்டு இப்பாடசாலை காணப்படுகின்றது**

**சேவைக் காலம்**

1. ஆசிரியராக 2005.09.09 தொடக்கம் 2014.01.07
2. அதிபராக 2014.01.08 தொடக்கம் 2017.10.06

**தற்கால கல்வி தொடர்பான தகவல்கள் - 2017**

1. மொத்தப் பாடசாலைகள் - 10162
2. மொத்த மாணவர்கள் - 41.43.330
3. மொத்த ஆசிரியர்கள் - 2.32.555
4. ஆண் பாடசாலைகள் - 150
5. பெண் பாடசாலைகள் - 240
6. கலவன் பாடசாலைகள் - 9772
7. தனியார் பாடசாலைகள் - 105
8. தேசிய பாடசாலைகள் - 353
9. கல்விக் கல்லூரிகள் - 19
10. ஆசிரிய கலாசாலைகள் - 08
11. மொத்த வலயக்கல்வி அலுவலகங்கள் - 98
12. மொத்த கோட்டக்கல்வி அலுவலகங்கள் - 311

**சேவைக் காலம்**

1. ஆசிரியராக 2005.09.09 தொடக்கம் 2014. 01.07
2. அதிபராக 2014.01.08 தொடக்கம் 2017.10.06

முன்னாள் அதிபர்
**திரு. சு. ரவிசங்கர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அதிபரின் நினைவலைகள்



மட்டக்களப்பு மேற்குப் பிரதேசத்தின் குடியேற்றப் பகுதியான பாவற்கொடிச்சேனை ஊரின் கண்ணே கம்பீரமாய் அமைந்த இவ்வித்தியாலயத்தில் (2008 - 2014 காலப் பகுதியில்) அதிபராகக் கடமையாற்றிய நாட்களை பசுமையாய் நினைவு கூறுகின்றேன்.

கல்வி, விளையாட்டு, கலைகள் என எல்லாவகையிலும் சிறந்த மாணவர்களைத் தன்னகத்தே கொண்டமைந்த இவ்வித்தியாலயம் தன்னலமற்ற ஆசிரிய பெருந்தகைகளினாலும், கடமை உணர்வுகொண்ட அதிபர் செம்மல்களாலும் வளப்படுத்தப்பட்ட நிலையிலேயே இப்பாடசாலையைப் பொறுப்பேற்றேன்.

போக்குவரத்துச் சீரின்மை, ஆசிரிய வளப்பற்றாக்குறை கட்டிட தளபாடப்பற்றாக்குறை என்பனவற்றிற்கும் மத்தியில் எமது மாணவர்கள் பல சாதனைகளைப் பதிவு செய்தனர். தரம் 5 பரீட்சையில் 170 புள்ளிகளுடன் நிமிர்ந்து நின்ற ஆசிரியர்கள், மாணவருடன் 2011ம் வருடம் க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின் படி கோட்டமட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டமையும், விளையாட்டில் தேசிய மட்டத்தில் 3 வெள்ளிப் பதக்கங்களையும் எமது பாடசாலை பெற்று மட்டக்களப்பு மாவட்டத்தையே எம்பால் திரும்பிப்பார்க்க வைத்த காலங்கள் அவை இவ்வேளையில் அப்போதைய கிழக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் கேட்போர் கூடத்துடன் கூடிய 4 வகுப்பறைகளைக் கொண்டதுமான ஒரு மாடிக்கட்டிடமும் எமது பாடசாலைக்கு வழங்கப்பட்டமையும் பெரும் வரப்பிரசாதமாகும். என்பதோடு அதை நன்றியோடு நினைவு கூறுகின்றேன்.

மேலும் சில துன்பியல் நிகழ்வுகளும் பதிவாகின பாடசாலைக்கு வரும் வழியில் எமது ஆசான் அமரர் பாலசிங்கம் ரவீந்திரராஜா இனந்தெரியாத விசமிகளால் சுடப்பட்டு இறந்தமையும், தரம் 8ல் பயின்ற மாவிலங்கடிச்சேனையைச் சேர்ந்த மாணவி பாம்புக் கடியினால் இறந்தமையும் இதயத்தை கனக்க வைத்த சம்பவங்கள்.

இன்று பாடசாலைக் சமூகத்தினால் "பாகல் துளிர்" நூல் வெளியீடு செய்யும் பொருட்டு எனக்கும் ஒரு வாழ்த்துச் செய்திக்கு வாய்ப்பளித்த உள்ளங்களை மனமார வாழ்த்தி இப்பிரதேசமும் பாடசாலையும் அதனோடு தொடர்புடைய அனைவரும் நலமேபெற்று நற்புகழுடைய இறைவனின் ஆசிவேண்டி நிறைவு செய்கின்றேன்.

நன்றி.
**திரு.தி.கிருபாகரன்** (முன்னாள் அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அதிபர்கள்

திரு.க.இராசையா (பாடசாலை ஸ்தாபகர்)



18.01.1954

திருமதி.இராசையா அஞ்சலீனா (அதிபர்)



சேவைக்காலம் -1954 -1959
1964 -1968 .1972 -1979

திரு.K.கேசகபிள்ளை (அதிபர்)



சேவைக்காலம் -1963 -1764

திரு.A.யோசப் (அதிபர்)



சேவைக்காலம் -1968 -1972

திரு.A.பொன்னுத்துரை (அதிபர்)



சேவைக்காலம் -1979 -1991

திரு.ப.பஞ்சாட்சரம் (அதிபர்)



சேவைக்காலம் -1991 -1994

திரு.C.M.குமாரசாமி (அதிபர்)



சேவைக்காலம் -1994 -1998

திரு.தி.புலேந்திரகுமார் (அதிபர்)



சேவைக்காலம் -15.07.1998 -30.09.2003

திரு.மா.அருளம்பலம் (அதிபர்)



சேவைக்காலம் -01.10.2003. -30.09.2007

திரு.மு.உதயகுமாரன் (அதிபர்)



சேவைக்காலம் -21.11.2007 -28.05.2008

திரு.தி.கிருபாகரன் (அதிபர்)



சேவைக்காலம் -07.11.2008 -2014வரை

திரு.ரவிசங்கர் (அதிபர்)



சேவைக்காலம் - 2014.0.08 - 2017.10.06 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் குழாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களில்

## புதைந்துள்ள அறிவியல் உண்மைகள்



இந்து ஆலயங்களின் மூலமாக பல அறிவியல் உண்மைகளை எமது முன்னோர்கள் எமக்கு வழிகாட்டிச் சென்றுள்ளனர் அந்த அறிவியல் உண்மைகளை நம் வாழ்வில் கடைப்பிடிப்பதன் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

கோயிலும் உடலும் ஒன்று இரண்டுமே ஆத்மசக்தியின் உறைவிடம் ஆலயமானது மனித உடலின் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்படுகின்றது. ஒரு மனிதன் படுத்திருக்கும் தோற்றமே ஆலய அமைப்பாகும்.ஆலயத்தின் மூலஸ்தானம், கருவறை - மனிதனின் சிரசையும் அர்த்தமண்டபம் கழுத்தையும் , மகாமண்டபம் மார்பையும், நிருத்த மண்டபம் வயிற்றையும் அடுத்து அமையும் மண்டபங்கள் கால்களையும் குறிக்கின்றன.

ஆலயம் என்றால் என்ன? ஆலய அமைப்பு நமது அகத்தை பிரதிபலிக்க வைக்கும் கண்ணாடியைப் போன்றது. நமக்குள்ளே பார்க்கும் திறன் நமக்கில்லாத படியால், ஆலய அமைப்பின் மூலமாக நமது உள்ளமைப்புக்களை நாம் அறியும் வகையில் சான்றோர் அமைத்துள்ளனர் பிரசாத வடிவில் உடற்பயிற்சியினையும் வகுத்துத் தந்துள்ளனர் மருந்தையும் பிரார்த்தனை வடிவில் உடற்பயிற்சியினால் உடலை மட்டுமன்றி உள்ளத்தையும் அதனூடாக ஆன்மாவையும் ஆரோக்கியம் செய்யலாம். நமது உடலையும் மனதையும் சுத்தம் செய்யும் மருத்துவ மனைபோல ஆலயம் அமைகின்றது. வரையறுக்கப்பட்ட முறைகளைப் பின்பற்றி ஆலயத்தில் இறைவழிபாடு செய்தால் நாம் ஆரோக்கியமாக வாழலாம். ஆலயம் என்பது மிகவும் சக்தி வாய்ந்த மருத்துமனை ஆலயம் உடல் நிலையையும் மனநிலையையும் சமப்படுத்தி அழுக்குகளை வெளியேற்றி சக்தி கொடுக்கும் இடமாக தலமாக இருக்கின்றது. நாம் வீட்டில் இருந்தபடியே வழிபாடு செய்தால் பலன் பெருமளவில் கிடைக்கும் எனக்கூறமுடியாது.
ஏனெனில் நாம் ஒருவர் என்பதால் நமக்குள் இருக்கும் சக்தி சிறியதே ஆனால் ஆலயத்தில் கூட்டமாக மக்கள் பக்தர்களாக சேரும்போது ஆலயத்தில் உள்ள பல சக்திக்கலங்களின் மூலமாக சக்தியை உள்வாங்கி அதை வெளியிடும் பொழுது அந்த சக்தி அலை நம்மை சமன் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதிகாலத்தில் வீடுகளில் மின்னலை எதிர்க்கும் சாதனம் இல்லாத காரணத்தினால் (earth) மழை காலங்களில் இடி மின்னலில் இருந்து பாதுகாக்க கோயில்களில் தங்குவது வழக்கம் இதன் காரணமாகத்தான் போலும் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்.

கோயிலின் பிரதான வாசலாகிய கோபுர வாசலானது ஊடுருவிக்கதிர் ஆய்வுக் கருவிபோல் அமைக்கப்பட்டிருக்கின்றது இதனால் நாம் கோபுர வாயிலினூடாக செல்லும் போது கண்ணுக்குப் புலப்படாத ஊடுருவிக்கதிரானது காந்த அலைகளாக

நம் உடல் மீது செல்கின்றது இதனால்தான் நாம் கோயிலுக்குள் நுழையும் முன்பாக கைகால்களை சுத்தம் செய்கின்றோம். குதிகால்களை மேலிருந்து கழுவுவதால் ஏற்படும் விஞ்ஞான பூர்வமான காரணம் என்னவென்றால் குதிகாலில் தான் நமது

மூளையில் அமைந்துள்ள "பிட் யூட்டரி" சுரப்பியுடன் தொடர்புள்ள முக்கிய நரம்பு அமைந்துள்ளது நாம் உட்பிரகாரத்தால் செல்லும் பொழுது வேகத்தைக் குறைத்து நிதானமாக நடுவில் வைக்கப்பட்டிருக்கும் வாயில் படிகளை ஈரக்கால்களுடன் குனிந்து தொட்டுச் செல்லுதல் வேண்டும் அவ்வாறு குனிந்து தொடும் பொழுது ஏற்கனவே கோபுரக்கலசங்கள் ஊடாக சேர்க்கப்பட்ட மின்கதிர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுப்பயனையும் அடைய முடியும். நாம் அண்டசராசரத்துடன் இணைய வேண்டும் என்பதற்காகவே விஞ்ஞான பூர்வமாக இந்து சமய வழிபாடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

முதலில் நமது தலையின் அமைப்பைப் பார்ப்போம் தலைப்பகுதியானது வலது மூளை இடது மூளை என்று இரண்டு பகுதிகளாகப்பிரிக்கப்பட்டுள்ளது. நமது வலது மூளைப்பகுதியே பிள்ளையாருக்கு உரிய இடமாகும் பிள்ளையார் சிவன் கோயில்களில் வலது பக்கத்தில் வைக்கப்பட்டுள்ளார். நாம் பிறந்தவுடன் இயல்பாக இயங்கும் பகுதி மூளையின் வலது பகுதியாகும் இயல்பாக நடக்கும்

நாம் கைகளை எதிரான பக்கங்களில் வைத்து காதுப்பக்கமாக குட்டும் பொழுது நமது மூளைக்குச் செல்லும் நரம்புகள் விளிப்படைகின்றன. அத்தோடு தோப்புக்கரணம் போடும் பொழுது எமது மூளைக்கு செல்லும் நரம்புகள் அத்தனையும் நன்றாகச் செயல்பட ஏதுவாக இருக்கின்றது. அமெரிக்காவில் நடத்திய ஆராய்ச்சியில் இதை நிரூபித்துள்ளது ஆராய்ச்சியின் படி இந்த விதமான உடற்பயிற்சியானது நரம்பு சம்பந்தமான வியாதிகளைக் குணப்படுத்தவதற்கு பயன்படுகின்றது. உதாரணமாக "ADHD AUTISM" போன்றவற்றை மட்டுமல்லாது நினைவாற்றலைக் கூட்டுவதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அங்கே பள்ளிக்கூடங்களில் பயிற்சி முறைகளில் ஒன்றாகக் கொடுக்கின்றார்கள் எனவே ஆலயங்கள் ஆன்மீகத்தை வெளிப்படுத்துவதோடு அறிவியல் உண்மைகளையும் வெளிப்படுத்துகின்றது.

அது மட்டுமன்றி ஆலயத்தில் கடவுளின் சிலைகளைக் கற்பூரம், துளசி மற்றும் பிறபொருட்களைச் சேர்த்துக் கழுவி தீர்த்தம் தருவார்கள் அதில் அதிக காந்த சக்தியுள்ளது. அத் தீர்த்தத்தை தாமிரப்பாத்திரத்தில் விட்டுத்தருவார்கள் இது பற்சொத்தை மற்றும் சளி, இருமல் மற்றும் வாய் துர்நாற்றத்தைப் போக்க வல்லது இதன் மூலம் தான் எம்முன்னோர்கள் பல நோய்களைத் குணப்படுத்தியுள்ளனர்

மேலும் தீபாராதனை காட்டும் பொழுது மிக அதிகமான சக்தி வெளிப்படும் எனவே தான் ஆண்களை சட்டையில்லாமலும் பெண்கள் அதிக அணிகலங்களோடும் கோயிலுக்கு வரச் சொன்னார்கள்

எனவே எமது முன்னோர்கள் ஆலயங்கள் மூலமாக பல அறிவியல் உண்மைகளை எமக்கு வழிகாட்டியுள்ளதை அறிய முடிகின்றது.

திருமதி. கோ. சதீஸ்குமார்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகனுக்குரிய பயிற்சிகள்

நடிகன் சிறந்த ஒரு கலைஞனாக இருக்க வேண்டியது அவசியம் அவனது கலைத்துவம், கற்பனை, ஆக்கத்திறன், அறிவு, அவதானம் ஆகிய பண்புகளே நடிகன் என்றவகையில் அவனது ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதற்கு உதவும் பலவற்றை அவன் பயிற்சி மூலம் பெற்றுக்கொள்கிறான். இந்த நோக்கத்திற்காகவே நாடகக்கலைஞர்கள் அனைவருக்கும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

நாடக நடிகனது பொருள்களாக அமைகின்றமை அவனது உடலும் குரலும் ஆகும் இவ்விரண்டு அடிப்படை மூலகங்களைக் கருத்திற் கொண்டு நாடகத்திற்கான அனைத்துப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. நடிகனுக்குரிய பயிற்சிகள் பல காணப்பட்ட போதிலும் பின்வரும் மூன்று பயிற்சியுமே முக்கியமாகின்றது அவையாவன.

1. உடல் சார்ந்த பயிற்சி
2. குரல் சார்ந்த பயிற்சி
3. உளம் சார்ந்த பயிற்சி என்பனவாகும்

## உடல் சார்ந்த பயிற்சி



நடிகனுக்கு உடல் அவசியம் நாட்டம் கட்புலக்கலை யாகக் காணப்படுவதால் அதைப்பூர்த்தி செய்வது நடிகளின் உடலாகும் நடிகன் உடலைத் தளர்வாக வைத்துக் கொள்ள உடல் பயிற்சி அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல்சார்ந்த பயிற்சி சாதாரணமாக தேகப்பயிற்சியில் இருந்து தொடங்குகின்றது தலைமுதல் பாதம் வரையிலான சங்கிலித் தொடராக தளர்நிலைப்பயிற்சி இடம் பெறுகின்றது நடிகன் தனது திறமைகளை வெளிப்படுத்த பல பயிற்சிகள் உண்டு அவையாவன சாதாரண தேகப்பயிற்சி, ஜிம், கராத்தே, அரங்கவிளையாட்டுக்கள் ஊமச் செயற்பாடுகள், ஆட்டங்கள் அசைவுகள் மூலம் பெறலாம்.

- ***நடிகனுக்கு உடல் சார்ந்த பயிற்சிகள் அவசியம்***

1. உடலை தளர்வாக வைத்திருக்க
2. உடலின் உள்ளார்ந்த லயத்தை கண்டுபிடிக்க
3. உடலை உணர்வுகளின் தொகுதியாக வைத்திருக்க
4. இயல்பானதாக இருப்பதற்கு
5. நடிப்பை இலகுவாக்க
6. மகிழ்ச்சியான மனநிலையை உருவாக்க
7. மனத்தடைகளைத் தாண்ட
8. உருமேற் கொள்ள
9. கொடுக்கும் பாத்திரத்தை படைத்துக்காட்ட
10. வெட்கம், பயம், கூச்சத்தை அகற்ற



# குரல் சார்ந்த பயிற்சி

உடலும் குரலும் நடிகனுக்கு பிரதான சாதனமாகும் அவற்றை நடிகன் தளர்வாக வைத்திருக்க வேண்டும் இது நாடகத்தில் நடிகர் நடிப்புத்திறனை வெளிப்படுத்த அவசியமாகின்றது குரல் பயிற்சி மூச்சுப் பயிற்சியினூடாக ஆரம்பிமாகின்றது இது உட்சுவாசம், வெளிச்சுவாசம் அமையும்.

உட்சுவாசத்தின் போது நுரையீரலும் நெஞ்சும் விரிவடைந்ததுடன் வெளிச்சுவாசத்தின் போது அவை சுருங்குவதும் இடம் பெறும். உடலில் இருந்து குரலானது ஐந்து இடங்களில் இருந்து பிறக்கிறது அவை உச்சந்தலை, மூக்கு, தொண்டை, நெஞ்சு, அடிவயிறு என்பவைகளாகும். குரல்ப்பயிற்சியினை அரங்க விளையாட்டு, மூச்சுப்பயிற்சி, குரலுக்கான பேச்சுப்பயிற்சி பல நாடகங்களில் குறிப்பாக எடுக்கப்பட்ட பகுதியினையும் கவிதைகள், மரபுவழி அரங்கப் பாடல்களைப்பாடுதல், துணுக்குகள் போன்றவற்றையும் உணர்வுடன் வாசிப்பதன் மூலம் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **இதற்கான சில பயிற்சிகளை இங்கு நோக்கலாம்**

  - ஓடுற நரியில் ஒரு நரி கிழ நரி
    கிழ நரி முதுகிலை ஒரு பிடி நரை முடி

  - எங்கட தச்சன் சுத்தத் தச்சன்
    செத்தைச் சத்தகம் குத்திச் செத்துப் போனான்

  - புட்டும் புதுப்புட்டும் தட்டும் புதுத்தட்டு
    புட்டக் கொட்டிற்றுத் தட்டத்தா

  - இது யார் தச்ச சட்டை இது
    தாத்தா தச்ச சட்டை

  - ஆடு கறுப்பு ஏறு கடப்பு

  - கடலோரத்தில் அலை உருளுது பிரளுது
    தத்தளிக்குது தாளம் போடுது

  - கொக்கு நெட்ட கொக்கு
    நெட்ட கொக்கு இட்ட முட்டை கட்டமுட்டை

  - விட்டுக்கிட்ட கோரை
    வீட்டுக்கு மேலே கூரை
    கூரை மேல் நாரை

  - ஏழைக்கிழவன் வாழைப்பழத்தோல் வழுக்கி
    சறுசறுக்கி வழுவழுக்கிக் கிழே விருந்தான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- மெய்த்தும் பொய்க்கும்
  பொய்த்தும் மெய்க்கும்
  பெய்யா மெய்யா மழை

- கருகும் சருகும்
  உருகும் துகிரும்
  தீயில் சட்டால்

- குலை குலையாய்
  வாழைப்பழம் முழையில் அழுகி
  கீழே விழுந்தது

- கரடி கருங்கரடி
  கரடி பொடரி
  கரும் பொடரி

- கும்ப கோணக் குளக்கரையில் குந்தியிருக்கும்
  குரங்கை கும்பன் குச்சியால் குத்தியதால் குரங்கு
  குளத்தில் குதித்தது

- துப்பார்கருத் துப்பாய துப்பாக்கி துப்பார்க்குத்
  துப்பாய் தூஉம் மழை

- ஆடுற கிளையில் ஒரு கிளை தனிக்கிளை
  தனிக்கிளை தனில் வந்த கனிகளும் இனிக்கல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கிழட்டுக்கிழவன் வியாழக்கிழமை சடுகுடு விளையாட குடு குடுவென ஓடி
  வாழைப்பழத்தோலில் வழுக்கி விழுந்தான்

- குலை குலையாய் வாழைப்பழம் மழையில் அழுகி கிழே விழுந்தது

- திருவாரூர்ல் தென் தெருவுல தெற்கு வடக்குமுக்குல இருக்கும்
  செக்கடி வக்குருடா நீ என்ன நெருகுடு

- சிகர வடவரை குனிய நிமிர்தரு
  செவிலொரு பொருவில்லெனக் கோட்டினர்

- தத்துங்கரட விகடதடத்தந்திப் பிறைக்கூன் மருப்பில் விளை
  தரளந்தனக்கு விலையுண்டு

- மீனேதுங் கொடிமுல்லை விடு கொலலைக் கடிமுல்லை வெள்ளைப் பள்ளை ஆனேறு
  முத் தமிழ் உத்தியில் வரு மொரு திருமகள்

- காக்கா காக்கான்னு கத்திறதினால
  காக்கான்னு பேரு வந்ததா
  காக்கான்று பேரு வந்ததினால
  காக்கா காக்கான்று கத்துதா?

- பைத்தியகார ஆஸ்பத்திரியில பைத்தியத்துக்கு
  வைத்தியம் பாக்கிற வைத்தியருக்கு பைத்தியம் பிடிச்சா
  எந்த பைத்தியகார ஆஸ்பத்திரியில் பைத்தியத்துக்கு வைத்தியம் வைத்தியர்
  வந்து அந்த பைத்தியத்துக்கு வைத்தியம் பார்ப்பாரு

- தக தக தக தக திகு திகு திகு திகு திகு
  தளாங்கு தித்தக தக ததிங்கிணதோம்

- சோள வந்தான் மாப்பிள்ளைக்கும்
  வாழ வந்த பெண்ணுக்கும்
  ஆளவந்தான் தலைமையில்
  அட்டகாச கல்யாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *குரல் பயிற்சியினால் நடிகனுக்கு ஏற்படும் நன்மைகள்*

1. தெளிவாக பேசுவதற்கு
2. குரலைப்புறத்தெரிதல்
3. உணர்ச்சிகரமாகப் பேசுதல்
4. குரலை தளர்வாக்குவதற்கு
5. உணர்வோடு பேசுவதற்கு மென்மைமாகப் பேசுவதற்கு
6. பலவித ஒலிகளை உருவாக்க
7. பாடுவதற்கு
8. உச்சரிப்புடன் பேசுவதற்கு
9. நீண்ட வசனங்களை இலகுவாகப் பேசுவதற்கு
10. தேவைக் கேற்ப குரலை கட்டுப்படுத்தவதற்கு

# *உளம் சார்ந்த பயிற்சி*

உடல் பயிற்சி, குரல் பயிற்சி நாடகத்திற்கு எவ்வளவு அவசியமோ அதே போல் உளம் சார்ந்த பயிற்சியும் அவசியம் உள்ளத்தை நடிகர் தளர்வாக வைத்திருத்தல் வேண்டும். இதற்கு உளப்பயிற்சி தேவையானது. உளம் சார்ந்த பயிற்சியினை தியானம். ஒன்றை நினைத்தல், எல்லா நினைவுகளையும் விளக்குதல் அதாவது சூழலில் உள்ள ஒலிகளைக் கூர்ந்து பட்டியற்படுத்தல் அவதானம் கருத்தூன்றல், அரங்க விளையாட்டுக்கள் போன்றவற்றின் மூலம் பெறலாம் உளப் பயிற்சியின் நோக்கம் கவனக்குறிப்பாகும்.

எல்லோரையும் ஒரு இடத்தில் இருக்க விட்டு கண்களை மூடவைத்து பூபால அல்லது மோகன இராகத்துடனான இசையினை ஒலிக்க விட்டு கேட்க வழிப்படுத்தலாம் ஒரு அழகிய இடத்துக்கு அழைத்துச் சென்று மகிழ்வுடன் உலாவவிடலாம் பின்னர் மீண்டும் உரிய இடத்திற்கு வரவிடுதல் கண்களை மெதுவாகத் திறக்க வழுழிப்படுத்துதல் அனுபவத்தையும் கண்டவற்றையும் பகிர்ந்து கொள்ள வழிப்படுத்தல் அவசியம்.

**இவ்வாறான பயிற்சிகள் மூலம் உள ஒருமைப்பாட்டிற்கான நிலையை அடையலாம்**

1. பௌதீக ரீதியான கவனக்குறிப்பு
2. அகரீதியான கவனக் குறிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உளம் சார்ந்த பயிற்சியால் நடிகனுக்கு ஏற்படும் நன்மை

1. வசனங்களை மனப்பாடமாக வைத்திருக்க
2. மனதை ஒரு நிலைப்படுத்த
3. செயல்களை ஒழுங்கு நிலையில் வைத்திருக்க
4. பாத்திரத்தினுள் வாழ
5. உடல் அசைவை கட்டுப்படுத்தவதற்கு
6. நடிக்க நல்ல மனநிலையை உருவாக்க
7. மகிழ்ச்சியாக இருப்பதற்கு

நடிகன் ஒருவன் தனது ஆள்மேற்கொள்ளலை மேற்கொள்வதற்கு உடல், குரல், உளப்பயிற்சி அவசியமானது இப்பயிற்சியினை நடிகன் சிறப்பாக பெறும் போது நாடகத்தை வெற்றிகரமாக நடிக்க முடியும் நடிப்பினை வளர்த்துக் கொள்ள புதிதளிப்பு, புத்தளிப்பு பயிற்சியும் நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை அபிவிருத்திக்குழு



மாணவர் பாராளுமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம்

மட்டக்களப்பு மேற்கு வலயத்தின் மண்முனை மேற்கு வவுணதீவுக் கோட்டத்தின் மிகவும் தூரத்திலுள்ள பாடசாலைகளுள் இப்பாடசாலையும் ஒன்றாகும். நானறிந்தவரை 5 வருடங்களுக்கு முன் நான் பார்த்த பாவற்கொடிச்சேனை இல்லை இப்போது நான் பார்ப்பது கொங்றீட் இடப்பட்ட வீதி அழகான புதிய கட்டங்கள் ஆசிரியர் வளம் கற்றல்வளநிலையம் முன்பக்க சுற்றுமதில் புதிய நிருவாகம் சிறப்பான பயிற்சிகள் (Best prachices) கணனி அறை சரஸ்வதி சிலை கம்பீரமாக எழுந்து நின்று வரவேற்கும் நுழைவாயில் க.பொ.த (சா/த) பரீட்சை நிலையம் என மாற்றங்கள் பல நேர்கணியமாக இவையனைத்து அதன் தற்போதைய பலமாக நான் வியந்து பார்க்கின்றேன் இவ்வாறான சாதகமான காரணங்கள் அனைத்திற்கும் இப்பாடசாலையில் இதற்கு முன்பு சேவையாற்றிச் சென்ற அதிபர் ஆசிரியர்களும் தற்போதைய அதிபர் ஆசிரியர்கள் பாடசாலைச் சமூகத்தின் அர்ப்பணிப்பான தன்மையே காரணம் ஆகும்.

எங்கள் பிரதேசத்தின் அத்தனை சவால்களிலும் பலவற்றை இக்கிராமமும் பாடசாலையும் கடந்து செல்வது இன்றுவரை ஒரு மறுக்கமுடியாத உண்மையாகும் என்னைப்பொறுத்தவரை காலையில் ஒருவர் நித்திரை விட்டு எழும் போது அனைவருக்கும் சமமாக வழங்கப்பட்டிருப்பது 24 மணிநேரம் மட்டுமேயாகும் இதன்படி அதனை சரியான முறையில் எவர் எப்படிப் பயன்படுத்துகிறாரோ அதனைப்பொறுத்துத்தான் ஒரு மனிதனின் உயர்ச்சியும் வீழ்ச்சியும் அமையும்

சவால்களாக நான் பின்வரும் விடயங்களை அவதானித்ததன் பின்னர் அவற்றை இயன்றளவு சமாளித்து அதனை வெற்றிகொள்வதில்தான் எது பாடசாலையின் விளைதிறன் தங்கியுள்ளது.

1. எழுத வாசிக்க சிரமப்படும் மாணவர் எண்ணிக்கை : இங்கு தொடர்ச்சியாக ஆரம்பக்கல்வி ஆசிரியர் பற்றாக்குறை முன்பள்ளிகள் இல்லாத அல்லது தொடராத நிலை கல்விச்சமூகத்திலை எழுத வாசிக்க தெரியாமல் ஆக்கப்பட்ட மாணவர்கள் அனைவராலும் புறக்கணிக்கப்பட்டு வரவு ஒழுங்கீனமான மாணவர் என ஒவ்வொரு வகுப்பிலும் சில மாணவர்கள் உள்ளனர்.

2. சமமான வளப்பகிர்வின்மை (கட்டிடம், கணனி, மின்சாரம், தளபாடம்) போன்றவை.

3. இளவயது திருமணம் : கல்வி கற்கும் காலத்திலேயே அடுத்த கட்ட வாழ்க்கைக்கான நகர்வு. இது பெற்றோரால் நிச்சயிக்கப்படுவதும் சூழ்நிலைகளும் காரணமாக அமைகின்றன ஆனால் இவ்விடயம் எதிர்காலத்தில் அம்மாணவர்களின் கல்வியை மட்டுமல்லாமல் அவர்களது கலாசாரம், குழந்தைகளின் கல்விவரை பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு நச்சு வளையமாகும்.

மாணவர்கள் பருவகால தொழில்களில் ஈடுபடல் : பாடசாலைக்கு செல்லாது மாணவர்கள் நெல்வேளாண்மை, மரக்கறித்தோட்டம், கல்அறுத்தல், கால்நடைவளர்ப்பு, கூலிவேலைகளில் ஈடுபடுவதால் பாடசாலையில் அவர்கள் வரவு ஒழுங்கீனமாகி கற்றல் பாதிக்கப்படுவதுடன் மாணவர்கள் தாம் சுயாதீனமாக காசு சம்பாதிப்பதால் ஊக்கத்துடன் கற்காது முறையான பாடசாலைக் கல்வியில் தோல்வியடைகின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வீட்டில் முறையான கற்றல் சூழல் இல்லாமை : பெற்றோருக்கு எதிர்கால கல்வி இலக்கு தொடர்பான தெளிவின்மை, இலக்கற்ற பயணம், முன்மாதிரிகள் இல்லாமை பெற்றோர் வெளிநாட்டில் இருப்பதால் ஒற்றைப் பெற்றோருடன் அல்லது உறவினர் பராமரிப்பில் உள்ள மாணவர் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்குறைவு

2. ஆலயங்கள், மதரீயான ஸ்தலங்களில் பாடசாலை பரீட்சை நேரங்களில் அதிகநேரங்களை செலவிடும் மாணவர்கள் பாடசாலைகளில் உற்சாகமின்றி இருப்பதும் பாடசாலைக்கு சமூகமளிக்காதிருப்பதும் அவதானிக்க முடிகிறது.

3. குடும்ப பொருளாதார நிலை,வறுமை

4. ஆசிரியர் பற்றாக்குறை, ஆசிரியரின்மையினால் கற்பதில் சிரமத்தினை எதிர்நோக்கும் மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடைவிலகிவிடுகின்றனர்

5. காட்டுயானைகளின் அட்டகாசம்

6. பெற்றோர், மாணவர்கள் போதை மதுவுக்கு அடிமையாதல்

இவைபோன்ற பல சவாலகள் இருப்பினும் முறையான பொதுப்போக்குவரத்து இல்லாத சீரற்ற இடங்களிலுள்ள பாடசாலைகளிலும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் கல்வி கற்கும் மாணவர்களும் நிறையவே இருக்கின்றனர் எனவே அனைத்து தரப்பினரும் தத்தம் கடமையை உணர்ந்து செவ்வனே சரிவர செய்யும்போது மேற்கூறப்பட்ட அத்தனை சவால்களினையும் வெற்றிகரமாக முறியடித்து கல்வி அபிவிருத்தியை நோக்கி சிறப்பாக பயணிக்க முடியும் ஏனெனில் எங்களைப்போன்று யுத்தத்தினால் மிகமோசமாக பாதிக்கப்பட்டு மீண்டெழுந்த சமூகங்கள் தமது நாட்டிலும் வெளிநாட்டிலும் நிறையவே உண்டு.

நமது அரசாங்கமும், கல்வி அமைச்சும் குழந்தை பிறந்தது முதல் குழந்தை பிறப்பு, தடுப்பூசி, பால்மா, வைத்திய சேவை, பாடசாலையில் இலவச சத்துணவு, இலவசக்கல்வி, இலவசபாடநூல், இலவசபாதணி மாணவர் காப்புறுதி, இலவச சீருடை போன்ற இன்னும் பல விடயங்களை மாணவர், பொதுமக்கள் நலனுக்காக தொடர்ந்து வழங்கி வருகின்றன ஆனால் பெற்றோருக்கு இது நமது பாடசாலை எனும் உணர்வு வரவேண்டும் சுமார் 63 ஆண்டுகளுக்கு முன் உருவாகிய இப்பாடசாலை இன்னும் வளர்ச்சியடைய வேண்டும்.

அனைவரும் நமது மனப்பாங்கினை பாடசாலை, கிராம, அபிவிருத்திக்காக நேரான விதத்தில் பயன்படுத்தும்போது இவைபோன்ற சவால்கள் இலகுவில் வெற்றிகொள்ளப்படும். நேரமுகாமைத்துவம் எப்போதும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும் நேரத்தினை கடவுளுக்கும் மேலாக மதிக்க வேண்டும் மாணவர்கள், பிள்ளைகள் அவர்களின் எதிர்காலம் பற்றிய கனவை அவர்களது பெற்றோரினை விட உரிய மாணவர்களே காணவேண்டும் அக்கனவே அவர்களை தூங்கவிடாமல் இயங்கச்செய்யும் நீரைக்கூட சல்லடையில் அள்ளிச் செல்லலாம் அது பனிக்கட்டியாகும்வரை நமக்குப் பொறுமையிருந்தால் சிலந்தி,தேனி, கறையான, தூக்கணாங்குருவி என ஒவ்வொரு பிராணிக்கும் ஒவ்வொரு திறமையுண்டு எனவே எந்த ஒரு பெறறோரும் எந்த ஒரு பிள்ளையையும் இன்னொரு பிள்ளையோடு ஒருநாளும் ஒப்பிட்டு பேசுவதை தவிர்க்க வேண்டும் மாணவர்களுக்கு எந்த விடயத்தில் திறமையுள்ளதோ அதிலேயே அவர்கள் கூடியகவனம் நேரத்தை செலவிட வாய்ப்பளியுங்கள். உங்கள்குழந்தைகளே உங்களுக்கு கிடைத்த மிகச்சிறந்த பரிசாக நினைத்து பெறறோர்கள் அவர்களிடம் அதிக நேரத்தை செலவிடுங்கள்.

எனவே உலகில் மாறறத்தினை நவீனமாக ஏற்படுத்த மிக சக்திவாய்ந்த ஆயுதம் கல்வியாகும் நமது பிரதேச பாடசாலை மாணவர்களின் திறமையை வளர்த்து எதிர்கால உலகை வெல்லும் நற்பிரஜைகளாகவும் கல்விமான்களாகவும் உருவாக்க அனைத்து தரப்பினரும் திடசங்கற்பம் பூண்டு செயற்பட வேண்டும் சாதனைகள் பலவற்றை நல்லவிதமாக படைத்து இப்பாடசாலையும் எதிர்கால கல்வி உலகில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்து சரித்திரம் படைக்க என் வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு, கிழக்கு பாடசாலைப் பொதுப்பரீட்சையின் போக்குகளும், பொறுப்பேற்றலும்

இலங்கையில் பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மூன்று நாடளாவிய ரீதியான பொதுப் பரீட்சைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். முதலாவது பரீட்சை தரம்-5 இல் இடம்பெறும் பரீட்சை ஆகும். இப்பரீட்சையானது 1948 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட மத்திய கல்லூரிகளுக்கு அல்லது மத்திய மகா வித்தியாலயங்களுக்கு (Central colleges) இனங்காணப்பட்ட "கெட்டிக்கார" (Bright Students) மாணவர்களுக்கு கற்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டதாகும். எனினும் இப்பரீட்சை தற்போது தகைமையுள்ள மாணவர்களுக்கு தேசியப் பாடசாலைகளில் கற்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்வதற்கும், வறுமையான மாணவர்களுக்கு மாதாந்தம் குறிப்பிட்ட நிதி வழங்குவதற்கும் சந்தர்ப்பம் ஏற்படத்திக்கொடுக்கிறது. இப்பரீட்சையில் 1995 ஆம் ஆண்டு தொடக்கம் பத்திரம்-I, பத்திரம்-II என இரு பரீட்சை வினாத்தாட்களுக்கு மாணவர்கள் விடையளிக்க வேண்டியுள்ளது.

இப்பரீட்சைப் பெறுபேறுகளைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு வினாத்தாளிலும் சராசரி 35 புள்ளிகளுக்கு மேல் அதாவது மொத்தமாக 70 புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்கள் குறித்த பரீட்சையில் சித்தி (Pass) அடைந்தவர்களாகக் கணிக்கப்படுகின்றனர். அதேவேளை மாவட்டரீதியில் தீர்மானிக்கப்படும் வெட்டுப் புள்ளிகளுக்கு (Cut off marks) மேல் பெறுபவர்கள் தகைமை (ஞரயடகைநைன) உள்ளவர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். இதனடிப்படையில் வறிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதியுடன் கூடிய தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் கற்பதற்கான வாய்ப்பு வழங்கப்படும் அதேவேளை, ஏனைய தகைமையுள்ள மாணவர்களுக்கு வசதியான பாடசாலைகளில் கற்பதற்கான வாய்ப்பும் கிடைக்கப்பெறுகிறது.

இப்பரீட்சையில் ஒரு மாணவன் சித்தி (Pass) பெற முடியாது அல்லது தகைமை (Qualified) பெற முடியாது போனாலும் அவன் தொடர்ந்து பாடசாலைகளில் கற்பது எவ்விதத்திலும் பாதிக்கப்பமாட்டாது. ஆக புலமைப்பரிசில் பெறமுடியாது அல்லது தெரிவு செய்யப்பட்ட பாடசாலையில் சேர முடியாது மட்டுமே போகும். எனவே ஏனைய பொதுப் பரீட்சைகளுடன் ஒப்பிடும் போது ஒப்பீட்டு ரீதியில் இழப்புகள் குறைந்த பரீட்சையாகும். அதாவது இப்பரீட்சைப் பெறுபேற்றால் மாணவன் தொடர்ந்து கற்பதற்கான வாய்ப்பு எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டாது. அத்துடன் இப்பரீட்சை தொடர்பான மாணவர்களின் ஆர்வம், எதிர்பார்ப்பு, ஈடுபாடு போன்றனவும் அவர்களின் வயதின் அடிப்படையில் குறைவாகவே காணப்படுகிறது மாறாக இப்பரீட்சை தொடர்பாக பெற்றோரின் ஆர்வம், எதிர்பார்ப்பு, ஈடுபாடு போன்றன உயரிய மட்டத்தில் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக கிராமிய மட்டத்தில் இந்நிலைமை பெற்றோரிடையே மிகமிக உயர்ந்து காணப்படுகிறது. இதனால் இப்பரீட்சை "பெற்றோர்களின் பரீட்சை" எனப் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஏனெனில் இப்பரீட்சையில் ஒரு மாணவன் தகைமை அடைய முடியாது போகும்போது அவனை விட அவனது பெற்றோரே அதிகம் கலங்கி நிற்கின்றனர். (இதனால் பெருமளவு பெறறோர் தாம் "அவமானம்" அடைந்து விட்டதாக எண்ணி தம் பிள்ளைகளுக்கு கடுமையான தண்டனை வழங்குவதும் நடந்துவருகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்துடன் இப்பரீட்சைக்கான தகைமை வெட்டுப்புள்ளியும் உயரிய மட்டத்தில் காணப்படுவதும் மறுக்க முடியாத உண்மையாகும். இது மாணவர்களின் வயதுக்கும் அவர்கள் உளநிலைக்கும் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தி வருவதாக பல உளவியலாளர்களும், உளவைத்திய நிபுணர்களும் கூறி வருகின்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இப்பரீட்சை தொடர்பாகவே இலங்கையில் அதிகளவான பிரத்தியேக (Tuition) வகுப்புக்களும், கருத்தரங்ககளும் (Seminar) அதிகளவான மாதிரி வினாத்தாட்களும் (Modal papers) வெளிவருகின்றன என்பதுடன், ஊடகங்களின் (Medias) பார்வையும் அதிகமுள்ள பரீட்சை இது என்பதும் மறைக்க முடியாததும், மறுக்க முடியாததுமான உண்மையாகும்

.இப்பரீட்சையின் கடந்த காலப் பெறுபேறுகள் கீழ்வருமாறு காணப்படுகின்றன.

**பின்னிணைப்பு - 1**

இப்பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்து பார்க்கும் போது தகைமை பெறும் வீதாசாரத்தில் "கிராமியம் சார்" வலயங்கள் முன்னிலை வகிப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. இப்பரீட்சையில் தகைமை பெறும் சதவீதத்தில் மட்டக்களப்பு கல்வி வலயம் 2008 ஆம் ஆண்டில் தீவக வலயங்கள் ரீதியில் 31 ஆம் இடத்திலும் வடக்கு, கிழக்கு மாகாண வலயங்கள் மட்டத்தில் ஒன்பதாவது இடத்திலும் காணப்பட்டு 2015 ஆம் ஆண்டு பெறுபேற்று முடிவின் படி தீவக வலயங்கள் ரீதியில் 25 ஆம் இடத்திலும் வடக்கு, கிழக்கு மாகாண வலயங்கள் மட்டத்தில் ஏழாவதுவது இடத்திலும் காணப்படுகிறது. துகைமை வீதத்தைப் பொறுத்தமட்டில் 2008 இல் 12:19 ஆகக் காணப்பட்டு அது 2015 இல் 11:18 ஆக 1.1 வீதத்தால் குறைவடைந்ததுள்ளது. ஆனால் வெட்டுப்புள்ளியானது அதிகரித்துள்ளது என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இப்பரீட்சைத் தகைமை வீதத்தினையும், சித்தி வீதத்தினையும் அதிகரிக்கும் நோக்குடன் மாகாண, வலய, கோட்ட மற்றும் பாடசாலை மட்டத்தில் பல்வேறு ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எடுக்கப்பட்டன, எடுக்கப்பட்டுவருகின்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்த பொதுப் பரீட்சை பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை ஆகும். இப்பரீட்சையானது தரம் - 6 தொடக்கம தரம் - 11 வரையான 6 ஆண்டுகள் தொடர்ச்சியாகக் கற்றபின் இடம்பெறும் ஒரு பரீட்சையாகும். இலங்கைப் பாடசாலைக் கல்வியைப் பொறுத்த மட்டில் பாடசாலை மட்டக் கற்றல், கணிப்பீடுகள், மதிப்பீடுகள் அடிப்படையில் தொடர்ந்து வகுப்பேற்றப்பட்டு வரும் மாணவர்கள் தரம் - 11 இன் இறுதியில் இப்பரீட்சைக்கு முகங்கொடுக்கின்றனர். இப்பரீட்சை 6 கட்டாய பாடங்களையும், 3 தொகுதிகளிலிருந்து மாணவர்கள் தெரிவு செய்து கற்ற 3 பாடங்களையும் கொண்டு 9 பாடங்களுக்கு பரீட்சை எழுதத்தக்கதாக இடம்பெறுகிறது. இப் பரீட்சை பெறுபேறுகளின் படி ஆகக்குறைந்தது தாய்மொழி, கணிதம் உட்பட 3 பாடங்களில் திறமைச் சித்திகளையும், 3 பாடங்களில் சாதாரண சித்திகளையும் என மொத்தம் 6 பாடங்களில் சித்திகளைப் பெறும் எல்லா மாணவர்களும் கல்விப் பொதுத் தராதர உயர்தரம் கற்பதற்கு வாய்ப்பளிக்கும் ஒரு பரீட்சையாகக் காணப்படுகிறது. இது தொடர்பில் மாணவர் நலன் சார்பாக பாடசாலை மட்டத்திலும் சில வாய்ப்புகள், சந்தர்ப்பங்கள், சலுகைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றமையையும் காணலாம். அத்துடன் இது ஒரு போட்டிப் பரீட்சையும் அல்ல. எனினும் தொடர்ந்து 6 ஆண்டுகள் (தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குப் பின்) எந்தவொரு பொதுப் பரீட்சைக்கும் தோற்றாத நிலையிலுள்ள மாணவர்கள் நீண்ட நாட்களுக்குப் பின் தோற்றும் ஒரு பொதுப் பரீட்சை இதுவாகும்.

இப்பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்துவதிலும், மாணவர் பெறுபேறுகள் தொடர்பாகப் பொறுப்புக்கூறுவதிலும் (Responsibility) ஆசிரியர்கள் பங்கு அளப்பரியது. அதனால் இப்பரீட்சை "ஆசிரியர்கள் பரீட்சை" என அழைக்கப்படுகிறது. இப்பரீட்சைக்காக 6-9 வரையான வகுப்புகளில் 12 பாடங்களையும் 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளில் 9 பாடங்களையும் மாணவர்கள் கற்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது 6 - 9 வரையான மாணவர்களுக்கு ஒரு கடின சுமையாகும். இதனால் அவர்கள் இவ்வகுப்புகளில் குறிப்பிடத்தக்க சில பாடங்களில் மட்டும் அதிக கரிசனை கொண்ட கற்று வருகின்றமையையும், சில பாடங்களை ஏனோதானோவெனக் கற்று வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது. அத்துடன் பொதுப் பரீட்சைக்குத் தோற்ற நீண்டகாலம் இருப்பதனால் மந்தகதியிலேயே கற்றலில் ஈடுபட்டும் வருகின்றமையையும் அவதானிக்கலாம். அத்துடன் பெரும்பாலும் பொறுப்புக்கூறல் தரம் - 10 மற்றும் தரம் - 11 இல் பாடங்கள் கற்பித்தவர்களுக்கே வருவதனால் தரம் 6 - 9 வரையான வகுப்புகளில் பாடங்கள் கற்பிப்பிக்கும் ஆசிரியர்களின் ஈடுபாடும் குறைவாகவே காணப்படுகின்றமையும் மறுப்பதற்கில்லை. அத்துடன் இப்பரீட்சைக்காக மாணவர்கள் பெரும்பாலும் தரம் - 11 இலேயே அதிக கரிசனையுடன் ஆசிரியர்களால் தயார்படுத்தப்படுகின்றனர். இதனால் மாணவர்கள் திடீரென அதீத கற்றலில் ஈடுபட வேண்டிய துர்பாக்கிய நிலைக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். உதாரணமாக மேலதிக வகுப்புக்கள், அதிகளாவான மாதிரி வினாத்தாட்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

1. க.பொ.த. சாதாரண தரத் தகைமைகளை அதிகரிப்பதற்கான செயற்பாடுகள் பெரும்பாலும் தரம் - 11 இலேயே தொடங்கிச் செயற்படுத்தப்படுகின்றன. இந்நிலை மாற்றப்பட்டு செயற்பாடுகள் தரம் - 6 இல் இருந்தே முறையாகத் திட்டமிட்டுச் செயற்படுத்தப்படல் வேண்டும். (குறிப்பாக கணிதம், தாய்மொழி, ஆங்கிலம் சார்பாக)

2. தேவையான தரவுகள், புள்ளிவிபரங்கள், தகவல்கள் தேசிய, மாகாண, வலய, கோட்ட, பாடசாலை, வகுப்பு மட்டத்தில் சேகரிக்கப்படல் வேண்டும்.

3. ஆவை முறையாகப் பகுப்பாய்வு (Analysis) செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்டு தகைமையை அதிகரிப்பதற்கான பொறிமுறை திட்டமிடப்படல் வேண்டும்.

4. பாடங்களிலும், பாட அலகுகளிலும் மாணவர் - ஆசிரியர் சார்பாக SWOC பகுப்பாய்வு செய்யப்பட்டு அவை கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

5. துகைமையை அதிகரிப்பதற்காக முறையான திட்டங்கள் (Plan) செயற்றிட்டங்கள் (சுழுதநஉவ), நிகழ்ச்சித்திட்டங்கள் (Program) வகுக்கப்படல் வேண்டும்.

6 இதற்காக அதிகாரிகள் மட்டத்திலிருந்து மட்டுமன்றி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகளின் ஆலோசனைகளும், கருத்துக்களும் கருத்திலெடுக்கப்படல் வேண்டும். (முக்கியமாக பின்தங்கியுள்ள பாடசாலைகளிலிருந்து)

7. வழிகாட்டல் - ஆலோசனை அல்லது இதற்காக பொருத்தமான ஆசிரியர்களும் இனங்காணப்பட்டு அவர்கள் பணிகளும் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

8 செயற்பாடுகளுக்காக நிலைத்திருக்கக்கூடிய (Sustainable) மூலோபாயங்கள் (Strategies) பின்பற்றப்படல் வேண்டும்.

9 புாடசாலை மட்டத்தில் தரவட்டம் (Quality Circle)> செயல்நிலை ஆய்வுகள் (Action Research) காத்திரமாக இடம்பெறல் வேண்டும்.

10 செயற்பாடுகள் முறையாகச் செயற்படுத்தப்பட்டுவருதல் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 மேற்பார்வை (Supervision) நெறிகைசெய்தல் (Monitoring) முகாமைத்துவம் (ஆயயெபபைெ) போன்றன சிநேகபூர்வமாக இடம்பெறல் வேண்டும்.

12 **"மேற்பார்வை என்பது குறைகான அல்ல துணை செய்யவே"** என்ற மனநிலை சம்பந்தப்பட்டவர்களிடம் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

13. பொறுப்புக்கூறல் (Responsibility) அர்ப்பணிப்பு (Dedication) மனப்பாங்கு (Attitude) பற்றி யாவரும் உறுதிப்பாட்டுக்கு வருதல் வேண்டும்.

14. உயசன றுழசம என்பதற்குப் பதிலாக SMART Work முன்னெடுக்கப்படல் வேண்டும்.

15. ஞரயவெவைல என்பதுடன் ஞரயவெவைல உம் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

16 "தவறு என்பது தவறிச் செய்வது தப்பு என்பது தெரிந்து செய்வது" எனபதனால் தவறுக்காகத் திருந்தவும். தப்புக்காக வருந்தவும் பழகிக்கொள்ளச் செய்ய வேண்டும். (இங்கு வருந்துதல் என்பது தனது தப்பை தானே ஏற்றுக்கொள்ளுதலும். பரிகாரம் செய்ாலுமாகும்.)

17 "செய்ய முடியாமைக்கான காரணங்களைக் கண்டறிவதை விடவும் செய்வதற்கான வாய்ப்புகளை கண்டு செய்வதை அதிகரிக்க வேண்டும்".

18 பிரத்தியேக வகுப்புகளை (Tuitions) விடவும் "பாடசாலை" சிறந்த கற்றலை வழங்க **முடியும்** என்ற மனநிலையை ஏற்படுத்தல் வேண்டும்.

19 சுயகற்றல் (Self Study) அதற்கான நேரம். வாய்ப்புக்களை அதிகரித்தல் பற்றி தெளிவுபடுத்தி புத்துணர்வூட்டல் வேண்டும்.

20 மாணவர்களுக்கு ஆசிரியர்களாலும். ஆசிரியர்களுக்கு மாணவர்களாலும் கற்றல் கறபித்தல் தொடர்பாக பாடரீதியாக சவால்கள் (Challenges) ஏற்படுத்திப்படல் வேண்டும்.

21 பாட அலகுகளை முடிப்பதை (Complete) விடவும் பூர்த்தி (Finish) செய்தலில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

22. Output, Outcome, Impact போன்றன காலத்துக்குக் காலம் திட்டமிடப்பட்டு காத்திரமாக கண்டறியப்படல் வேண்டும்

23 பிரதிபலிப்பு (Reflect) பின்னூட்டல் (Feedback) போன்றன முறையாகச் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு (யுயெடலளளை) செய்து நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

24 யாவரும் கடமையை கடமைக்குச் செய்யாமல் பணியாக உணர்ந்து செய்ய வேண்டும்.

25 சரியான விடையளிப்பதை விடவும் பிழையான விடையாவது சொல்லுவதற்கு பழக்கப்படுத்தல் வேண்டும்.

26 புதிய புதிய வினாக்களை உருவாக்குவதற்கும். கேட்பதற்கும் முயற்சிக்கச் செய்ய வேண்டும்.

27. ஆசிரியர்.மாணவர் ஆரோக்கியம் கவனத்தில் கொள்ளப்படல் அவசியம்.

28. கடமை நேரத்துக்கு அப்பாலும் பணியாற்ற விருப்பப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29 சுயகணிப்பும் (Self Esteem) தன்னம்பிக்கையும் (Self Confidence) வளர்த்தெடுக்கப்படல் வேண்டும்.

30. தேடிக்கற்கும் ஆற்றல், வாசிக்கும் ஆற்றில் முடிக்கி விடப்படல் வேண்டும்.

31. குழுமுறைக் கற்றல் - கற்பித்தல், ஆரோக்கியமான போட்டியிட்டுக் கற்றல் - கற்பித்தல் மேம்படுத்தப்படல் வேண்டும்.

32 ஆசிரியர் - மாணவர்கள் மத்தியில் Grt to gather காலத்துக்கு காலம் திட்டமிட்டு இடம்பெறல் வேண்டும். (உதாரணமாக சாதித்தவர்களை அழைத்து கலந்துரையாடல்.)

33. சிறிய முன்னேற்றமும், சிறிய வெற்றிகளும் கூடப் பாராட்டப்படல் வேண்டும்.

3. புல்கலைக்கழகம் செல்வதற்கு அப்பால் ஏனைய கற்கைகள், கல்விக் கல்லூரி அனுமதி பெறல், சுயதொழில் போன்றன தொடர்பாகவும் ஆசிரியர்களும், மாணவர்களும் விளிப்பூட்டப்படல் வேண்டும்.

34. பாடத் தெரிவு தொடர்பாக தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.

35 கிராமங்கள் தோறும் மேற்படி விடயங்கள் தொடர்பாக மக்கள் தெளிவூட்டப்படுவதுடன் (Awareness) , புத்துணர்வூட்டல் (Empowerment) குழுக்களை அமைத்து இடம்பெறுவதுடன் சகலரதும் ஒத்துழைப்பும் பெறப்படல் வேண்டும்.

திரு. க. ஹரிகரராஜ்
பாடசாலை மேம்பாட்டு உத்தியோகஸ்தர்
மட்டக்களப்பு, மேற்கு வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவசாய நவீன மயமாக்கமும் சூழல்சார் பிரச்சனைகளும்

**விவசாயமானது** ஆதிகாலம் தொட்டு இன்றுவரை இடம்பெற்று வருகின்ற ஒரு முதல் தரமான மனித நடவடிக்கையாக காணப்படுகின்றது பெருகிவரும் சனத்தொகையினது உணவுத்தேவையை பூர்த்தி செய்வதற்கு விவசாய உற்பத்திகளை அதிகரிப்பது அவசியமாகும் குறிப்பிட்ட துறையில் மனிதனது அறிவு, திறன் என்பவற்றை பயன்படுத்தி கண்டுபிடிக்கப்பட்ட இயந்திர தொழிநுட்ப சாதனங்களின் துணையுடன் குறிப்பிட்ட துறையில் வினைத்திறன் பெறுவது" நவீனமயமாக்கம் ஆகும். 1960 களில் ஏற்பட்ட பசுமைப் புரட்சியே விவசாயத்தில் நவீனமயமாக்கம் ஏற்பட மூல காரணமாகும்.

ஆரம்ப காலத்தில் விவசாய நிலப்பரப்பினை அதிகரிப்பதன் மூலம் உற்பத்தி பெருக்கத்தினை அதிகரிக்க முடிந்தது ஆனால் 1960களில் ஏற்பட்ட தொழிற்புரட்சி, பசுமைப்புரட்சி தொழிநுட்ப முன்னேற்றம் காரணமாக இந்நிலை மாற்றமடைந்தது நில விஸ்தரிப்பு கொள்கைக்கு பதிலாக குறைந்தளவு நிலபரப்பில் செறிவான பயிர்ச்செய்கையை மேற்கொள்வதன் மூலம் கூடிய விளைச்சலைப் பெறும் முறை கண்டறியப்பட்டது. எனவே விவசாயத்தில் நவினமயமாக்கமானது அதிகரித்த உணவுத் தேவையை பூர்த்தி செய்தல், வளமற்ற நிலத்தை வளமாக்கல், குறைந்த காலத்தில் அதிகரித்த விளைச்சலைப்பெறல், உற்பத்தி திறனை அதிகரித்தல் போக்குவரத்து வசதிகளை துரிதப்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்ளுதல் அவசியமானதாக காணப்படுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மேற்கூறியவற்றை செய்து முடிப்பதற்காக அதிகரித்த இயந்திரமயமாக்கம் செயற்கைமுறை இனப்பெருக்கம், செயற்கை மழையை பொழிவித்தல், நவீன இரசாயன களஞ்சியப்படுத்தல் முறைகள் இரசாயன பீடை மற்றும் கிருமி நாசினிகளை பயன்படுத்தல், போன்ற யுதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

மேற்கூறியவாறு விவசாயத்தின் நவீனமயமாக்கம் மூலம் நன்மைகள் காணப்பட்டாலும், சூழலுக்கும் மனிதனுக்கும் நேரடியான மறைமுகமான சீர்கேடுகள் பலவும் ஏற்படுகின்றன. மனிதனை இயற்கைக்கு எதிராக கூட செயற்பட வைக்கின்றது. விளைவை அதிகரிக்கும் நோக்கில் விவசாயிகளால் பீடைகளின் தொல்லையை களைவதற்காக கிருமி நாசினிகளும் நச்சு மருந்துகளும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான மிகவும் மோசமான கிருமி நாசினிகளால் சூழலுக்கு பல்வேறு விதமான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. கிருமி நாசினி போன்றவற்றின் வெற்றுப்போத்தல்கள் எண்ணெய் தாங்கிகள் போன்றவை நீர் நிலைகளில் விழும்போது நீர் மாசடைவதோடு நீர் வாழ் அங்கிகளும் பேராபத்தை சந்திப்பதோடு அவற்றை உண்பவர்களின் உணவுச்சங்கிலியில் படிப்படியாக நச்சுகளும் சென்றடைந்து பல வியாதிகள் ஏற்படுவதோடு, ஆயுட்காலத்தினையும் குறைத்து விடுகின்றது.



அத்துடன் சூழலுக்கு இசைவான இயற்கையான இரை கௌவிகளாக காணப்படும் விலங்கினங்கள் அழிவடைந்து போகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. மேலும் விவசாய உற்பத்தியினை அதிகரிக்க பயன்படும் இயந்திரங்கள் வெளியிடும் எரிபொருள் புகையினால் வளிச்சூழலில் மாற்றத்தினை ஏற்பத்துகின்றது. இயந்திரங்களின் அதிகரித்த புகை மற்றும் வெப்பம் போன்றவற்றினால் $Co_2$ அதிகரித்து புவியினுடைய வெப்பமும் அதிகரிக்கின்றது.

இரசாயன உரங்களின் அதிகரித்த பாவனையினால் பல்வேறுபட்ட சூழல் பிரச்சனைகள் தலைதூக்கியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறிவான பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் யாழ்ப்பாணம், அநுராதபுரம், நுவரெலியா போன்ற மாவட்டங்களில் மண்ணிலும் நீரிலும் பல பிரச்சனைகள் தோன்றி வருகின்றன. அதாவது சில பொசுபேற்று உரங்களுடன் செம்பு கட்மியம் புரோனியம் போன்றவை காணப்படுகின்றன. நீண்ட காலம் தொடர்ச்சியாக பாவிப்பதனால் மண்ணில் இது நச்சுத்தன்மையை தோற்றுவிக்கின்றது. நைதரசன் உரங்களில் இருந்து வெளியிடப்படும் நைதரசனொட்சைட் ஒரு பச்சைவீட்டு வாயுவாகும். இது வளிமண்டலத்தின் மேல் உள்ள ஓசோன் மண்டலத்தை பலமிழக்கச் செய்கின்றது. இதனால் ஓசோன் துவாரம் ஏற்பட்டு அபாயகரமான செவ்வூதாக் கதிர்கள் புவியை அடைவதால் புவியில் உள்ள மனிதனுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் கதிரியக்க நோய்கள் ஏற்படுவதுடன் பூகோள வெப்பம் உயர்வடைந்து அதன்மூலம் பல சமூக பிரச்சனைகள் உருவாகின்றது.



மண்ணின் உயிராக காணப்படும் சேதனப்பொருள் அயன மண்டல பிரதேசங்களில் வெப்பம் காரணமாக விரைவாக சிதைவுக்கு உள்ளாகின்றது. இப்பிரதேசங்களில் பெருமளவு இரசாயன உரங்களை பயன்படுத்தும் போது சிதைவடைதல் துரிதமடைகின்றது. இதனால் மண்ணில் உள்ள முக்கிய உறுப்பாகிய சேதனப்பொருள் துரித கதியில் இழக்கப்படுகின்றது. சேதனப்பொருள் குறைவினால் மண் கட்டமைப்பு (Soil Stuture) பாதிக்கப்படுவதுடன் மண்ணில் பல சீர்குலைவுகளும் ஏற்படுகின்றது. அதிகளவு இரசாயன உரங்கள் மண்ணில் உள்ள நுண்ணங்கிகளினதும் ஏனைய உயிரினங்களினதும் வளர்ச்சியில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. மண்ணின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளத்தினை ஊக்குவிக்கும் மண்புழுக்கள் பக்டீரியாக்கள், பங்கசுகள் என்பன இரசாயன உரங்களின் தாக்கங்களினால் பாதிக்கப்படுகின்றன. இதனால் மண்ணின் உயிரியல் வளம் சீர்குலைவுக்கு உட்படுகின்றது.

இரசாயன உரமும், பாசனநீரும் விளைநிலத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பாசனம் அதிகரிப்பதனால் நிலங்களின் வளம் மற்றும் உவர்த்தன்மையும் மாற்றமடைகின்றது. இது மட்டுமன்றி நிலம், நீர், வளி என்பன மாசடைகின்றது விவசாய விளைநிலங்கள் பாலை நிலங்களாக மாறி வருகின்றது. காடழிப்பும் பொருத்தமற்ற விவசாய முயற்சிகளும் எதிர்கால விவசாயத்திற்கும், சூழலுக்கும் அச்சுறுத்தலாக மாறி வருகின்றது.

எனவே சூழலுக்கு தீங்கு ஏற்படாத வகையில் மண்ணின் பௌதீக இரசாயன உயிரியல் பண்புகளை பேணிக்காக்கும் வழிமுறைகள், பொருத்தமான நீர் முகாமைத்துவத்துடன் கூடிய நீர்ப்பாசனம், உயிரியல் முறை தொழிநுட்பம், ஒருங்கிணைந்த பயிருணவு வழங்கல் திட்டம், பீடை முகாமைத்துவம், பயிர்வகைகளையும், காட்டு மரங்களையும் பண்ணைவிலங்குகளையும் ஒன்றிணைத்ததான விவசாய முயற்சிபொருத்தமான பயிராக்க முறைகள் என்பவற்றை கையாள்வதன் மூலம் விவசாயத்தினை நிலைத்து நிற்க கூடியதாகவும் (பேண்தகு முறை) சூழலுக்கு சீர்கேடுகளை ஏற்படுத்தாத வகையிலும் மாற்றமடையச் செய்ய முடியும்.

திருமதி.தீபா பிரதீபன்

(ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ குறிப்புகள்

1) நெல்லிக்காய் சாறு, எலுமிச்சைச்சாறுடன் தேன் கலந்த சாப்பிட்டால் இரும்பு சத்து கிடைக்கும்) **இதன் முக்கிய பயன்** - ஆஸ்துமா விலகும், இரத்தச்சோகை மாறும் முகம் பொலிவுறும், நரம்பு சக்தி பெறும்.

2) சுண்ணாம்பு - தேனீ, குளவி கடித்த இடத்தில் தடவுதல்
**இதன் பயன்** - வீக்கம் குறைந்து வலிகுறைவடையும்

3) துளசி இலை - இதனைச் கசக்கி சாற்றை விச வண்டு கடித்த இடத்தில் பூசுதல்
**இதன் பயன்** - விசம் முறிந்து வலிகுறையும்

4) செம்பருத்திப் பூ சாப்பிட்டால்
**இதன் பயன்** - உடல் சூடு தணியும், முடி உதிர்வு நீங்கும்

5) முள்ளங்கிச் சாற்றுடன் தயிர் சேர்த்து முகத்தில் தடவினால்
**இதன் பயன்** - முகம் அழகுடன் பொலிவாகத் காட்சி தரும்

6) ஆவாரம்பூவை அரைத்துப் பூசுதல் (சர்க்கரை வியாதி உள்ளவர்கள்)
**இதன் பயன்** - புண் ஏற்பட்ட இடத்தில் தடவினால் விரைவில் புண் ஆறும்

7) நிலவேம்பு இலை வெறும் வயிற்றில் மென்று சாப்பிட்டால்
**இதன் பயன்** - சர்க்கரை வியாதி படிப்படியாகக் குறையும்

8) மாதுளம் பழம் தினமும் சாப்பிட்டால்
**இதன் பயன்** - குடற்புண் விரைவில் குணமடையும் உடல் பொலிவுறும்

9) வெள்ளைப்பூண்டு, வெந்தயம் தினமும் உணவில்சேர்த்தால்
**இதன் பயன்** - இரத்த அழுத்தம் குறையும், கொழுப்புபடிவு குறையும்

10) வேப்பிலைச்சாறு குடித்தல், பூசுதல்
**இதன் பயன்** - சொறி, சிரங்கு ஏற்படாது, சிறுநீரக நோய் குணமடையும முகப்பருக்கள் குறையும்

11) தினமும் தண்ணீரைக் கண்களில் தெளித்துச் கழுவினால்
**இதன் பயன்** - கண்பார்வை தெளிவாக இருக்கும், நித்திரை விரைவாக வரும்

திருமதி.சி.கேந்திரதாசன் (ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலகி நிற்பவர்கள் வெல்லுவதில்லை வெல்ல நினைப்பவர்கள் விலகுவது இல்லை




திரு.பூ.சுகிதரன்
ஆசிரியர்

நீல் அரம்ஸ்ரோங் - இவர்தான் நிலவில் முதன்முதலில் கால் வைத்தவர் ஆனால் முதன் முதலில் கால் வைத்திருக்க வேண்டியவர் யார் தெரியுமா? பல பேருக்குத் தெரியாது அவர்தான் எட்வின் சி. ஆல்ட்ரின் இவர் தான் நிலவுக்குச் சென்ற அப்ளோ விண் கலத்தின் (பையிலட்) அதாவது விமானி ஆல்ட்ரின் அமெரிக்காவின் விமானப்படையில் பணிபுரிந்தவர். மேலும் விண்நடை அனுபவம் உள்ளவர் அதனால் அவர் பையிலட்டாக நியமிக்கப்பட்டார்.

நீல் ஆம் ஸ்ரோங் அமெரிக்காவின் கப்பல் படையில் வேலை பார்த்தவர். மிகுந்த தைரியசாலி அதனால் இந்த பயணத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் கோ - பயிலட் அதாவது இணை விமானி இவர்கள் சென்ற அப்பலோ விண் கலம் நிலவை அடைந்ததும் நாசாவிலிருந்து பயிலட் பஸ்ட் என்று கட்டளை பிறப்பிக்கப் பட்டது ஆனால் ஆல் ரின்னுக்கோ மனதில் சின்ன தயக்கம் இடது காலை எடுத்து வைப்பதா? அல்லது வலது காலை எடுத்து வைப்பதா? என்றல்ல

நிலவில் முதன் முதலில் கால் எடுத்து வைக்கிறோம். புவியீர்ப்பு விசையற்ற இடத்திலிருக்கிறோம். கால் வைக்கும் போது இடம் எப்படி இருக்கும் என்று தெரியாது. புதை மணலாக இருந்து உள்ளே இழுத்து விட்டால் எரி மணலாக இருந்து என்று மணிக்கணக்காக தாமதிக்க வில்லை சில நொடிகளே தாமதித்து இருப்பார். அதற்குள் நாசாவிலிருந்து 2வது கட்டளை பிறப்பிக்கப்பட்டது நீல் ஆம் ஸ்ரோங் கட்டளை வந்தும் அடுத்த நொடி காலடி எடுத்து வைத்தார். உலக வரலாறு ஆனார் உலக வரலாறு சில நொடி தயக்கத்தில் மாற்றி எழுதப்பட்டது. திறமையும். தகுதியும் இருந்தும் கூட தயக்கத்தின் காரணமாக தாமதித்ததினால் இன்று ஆல் ரினை யாருக்கும் தெரிய வில்லை.

1வது வருபவரைத்தான் இந்த உலகம் நினைவில் வைத்திருக்கும் என்பது மட்டுமல்ல தயக்கம். பயம் இவை எந்தளவுக்கு நம் வெற்றியை பாதிக்கும் என்பதற்கு இதுவே உதாரணம். இனி நிலவை பார்க்கும் போதெல்லாம் இந்த சம்பவத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஒரு நிமிட தயக்கம் நம்முடைய மிகப்பெரிய வெற்றிகளை தடுத்து விடுகிறது. நாம் எல்லோருமே மிகப் பெருஞ்சாதனைகளை படைக்கும் வல்லமை உடையவர்கள்தான். நம்முடைய தயக்கம், பயம், கூச்சம் இவைதான் முதல் எதிரி பலருக்கு தன்னுடைய தவறுகளை களைவதில் தயக்கம் தவறுகளை தட்டிச் கேட்க தயக்கம் அடுத்தவர்களை பாராட்டுதலால் தயக்கம் ஏன். சிலருக்கு இந்ததகவலை நண்பருக்கு பகிரக் கூடத்தயக்கம் சரியானதை செய்யத் தயங்கினால் தவறானதைத்தான் செய்து கொண்டிருப்போம் எனவே நல்ல விடயத்தில் தயக்கத்தை தவிர்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Parents Role in Child Development

Parents indisputably play a significant role in the upbringing of a child. They are the first teachers who taught their baby how to interact with the environment However, this interaction with the outside world is established long before the baby is born. The contact is not created by itself. It is the parents who help the child to form its attitude towards the world. It is on them what child's environment would be: hostile or helping. A little person will learn about the world with trust if its parents' lessons to him will be emotionally warm and supportive.

These are also parents who are the most responsible for the formation of the child's personality. They are their child's first teachers and educators. That is why their first and foremost task is to make the child feel confident about being loved and cared, as it is a vital necessity for a baby to feel parental love.

During the initial stage of a child's life, parental love means a guarantee of the stability and protection, later emotional support. However, the parental love is not the only condition required for a successful upbringing of a child; the parent must also be forgiving enough to accept the child's weaknesses and high points equally. It does not a matter how many children there are in a family, one or several, parents must always find a way to keep in touch to understand and eagerly observe the changes the children experience during their personal development. Parents have to play an active role in the life of their children, to be first to share the joy and console the grief.

Every parent has different style of parenting. It is precious ability for parents to see the world with their kid's eyes. You may read a lot of books on parenting, but you still have to acquire some practical knowledge that your personal experience dictates you.

The family is a child's closest environment. That is the place where the child learns to show its feelings to the closest people, following their example of the emotional interaction. Healthy children are active and curious, very attentively they perceive what is happening around them, that is why it is critical that what kind of emotional interaction they see and register. In the family where the parents interact in calm, respective manner children's character can usually be described as a balanced, kind and emotionally responsive. Every child has to be a fully fledged member of the family with its rights and duties, its right to speak up and to be heard. It allows reaching a perfect balance in the parents - child relationships. Such harmonious relations help the child to form a proper understanding of a grown personality that they can use as a role - model for their



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

development.

The relationship between children and their parents stay relevant at any period of their lives. Because it is familial love which is one of the sources of the human well- being. It is not by chance that many of us turn to their parents in the moments of need. It is very hard to lose your parents even for a grown - up person because it means losing the sense of being protected. That is why we have to cherish the love of our parents gives us while they are still there, as it is the key-gen which is handed down from generation to generation. And the whole genome is a major factor in our success.

**T. Nishanthan**

Teacher





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் எழுத்து



அதிகாலை எழு
ஆகாயம் தொழு
இதயம் துடிக்க விடு
ஈறுழுத்த பல் தேய்
உடல் வியர்வை கழி
ஊளைச்சதை ஒழி
எருது போல் உழை
ஏழை போல் உண்
ஐம்புலன் பேணு
ஒழித்துவிடு
புகை, மது
ஓட்டம் போல் நட
ஔடத பசி
அஃ தாற்றின்
எஃகாவாய்

ர.நிதர்சன்

தரம் - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒழுக்காற்றுக்குழு



சிறுவர் பாதுகாப்புக்குழு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவன்

ஆரம்பகல்வி அவசியம் அவற்றை கடவுளாகிய உன் பெற்றோர் அதில்
ஆறுதல் புரிதல் அவசியம் இதை எல்லாம் கண்டு மகிழும் உன் ஆசானுக்கு
எவரும் நிகரில்லை படித்தால் பண்புள்ளவனாய் ஆவாய்
என்பது சான்று பொழுது போகும் என்று
போகாதே புகையிடம் தாகம் தீரும் என்று போகாதே கைபேசி இடம் சுகம் தரும் என்று
போகாதே தண்ணீரிடம் (மது) போகாதே வழியில்
போகாதே பெண்மையிடம்
படிப்பை தேடிச் செல் உன் பெற்றோருக்கு ஆனந்தம்

அறிவை தேடிச் செல் உன்
ஆசானுக்கு ஆனந்தம்
பண்புள்ளவனாய் மாறு
உன்னைக் கண்டு கொள்ளும்
உன்நாடு ஒருபோதும்
கலங்க



வைத்துவிடாதே
உன்னை
கண்டறிந்த
கடவுளை
புறப்படு எழுந்தால்
மரம் விழுந்தால்
உரம் காலத்தை
வென்றால்
கதிரவனும்
வணங்கவான்

இ. ரஜீத்
தரம் - 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பல** மலைச்சிகரங்களில் ஊற்றெடுத்து கல்லும் மலையும் காடும் மேடும் ஊர்ந்து வந்து கடலைச் சேரும் நதிகள் போல பல திசைகளில் தம் வாழ்வாதாரத்தைத் தேடி நாள் தோறும் ஓடி வாழ்ந்துதான் ஆக வேண்டும். என்பதற்காக தம் வாழ்வைக் தேடி கடத்திச் செல்லும் பரிதாபத்திற்குரிய எமது மக்கள் வாழும் பாவற் கொடிச்சேனை கிராமத்தின் தோற்றம் பற்றியும் அதன் வளர்ச்சியு பற்றியும் நாம் அறிய வேண்டியது அவசியம்.

1953ம் ஆண்டு காலனித்துவ குடியேற்றத்திட்டத்தின் கீழ் சிப்பிமடு இருணூறுவில் பாவற்கொடிச்சேனை ஆகிய மூன்று கிராமங்களை உள்ளடக்கியதாக தமிழர் சிங்களவர் முஸ்லீம்கள் என 03 இன மக்களும் இங்கு குடியேற்றம் செய்யப்பட்டனர். காலனித்துவம் என்பதன் மருவிய பதமாகவே இப்பகுதி மக்களால் இது கொளனித்திட்டம் என அழைக்கப்பட்டது. இவ்வாறு குடியேற்றம் செய்யப்பட்ட மூவின மக்களில், சில காரணங்களின் நிமிர்த்தம் சிங்களவர் தமது இருப்பிடங்களை விட்டு மெல்ல மெல்ல அகன்று சென்று விட முஸ்லீம்களும், தமிழர்களும் 1985ம் ஆண்டு வரை மிகவும் ஒற்றுமையுடன் வாழ்ங்து வந்தனர்.

1985ல் ஏற்பட்ட இனக்கலவரத்தில் காரணமாக முஸ்லீம்கள் இவ்விடங்களை விட்டுச் சென்று விட தற்போது தமிழர்கள் மட்டும் தனித்து வாழ்ந்து வரும் அதே வேளை இன்று ஏற்பட்டுள்ள சாதாரண சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்த முஸ்லீம்கள் மீண்டும் தாம் வாழ்ந்த இடங்களில் வந்து குடியேறுகின்றமை குறிப்பிடத்தக்கவொரு விடயமாகும்.

இதுஅரசாங்கத்தினால் அங்கிகரிக்கப்பட்ட சட்டபூர்வமான குடியேற்றத்திட்டமாகக் காணப்பட்ட போதிலும் இதற்குப்பல ஆண்டுகளுக்கு முன்பே (1935ம் ஆண்டு முதல்) இப்பகுதிக்கு நீலாவணைப் பகுதியில்லிருந்து சிலர் தமது கால் நடைகளை வளர்ப்பதற்காக வந்து குடியமர்து, தாம் குடியமர்ந்த இடங்களை அண்டிய பகுதிகளிலுள்ள காடுகளை வெட்டி வயல் நிலங்களாக்கி விவசாயம் செய்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் மேலும் சிலரை தமக்கு உதவியாக அழைத்து வந்து இங்கு குடியமர்த்தினர். இவ்வாறு இங்கு ஆரம்பத்தில் மக்கள் குடியமர்ந்த இடமே "தும்பாலை" என அளைக்கப்படும் இடமாகும். இத்தகைய வரலாற்றைக் கொண்ட எமது கிராமத்திற்கு பாவற்கொடிச்சேனை எனும் பெயர் எவ்வாறு வந்தது? என ஆராய்ந்த போது.......... ஆரம்ப காலங்களில் பெரும் காடாக இருந்த இப்பகுதியில் காட்டுப்பாகற் கொடிகள் ஆங்காங்கே அடர்தியாக படர்ந்து காணப்பட்டமையினால் எமது பாமர மக்களின் பேச்சு வழக்கில் "பாகற் கொடி" என்பது "பாவற்கொடி" என்று அழைக்கப்பட்டது.

படர்ந்து காணப்படும் இடம் "சேனை" என்பதாலும் "பாகற்கொடிச்சேனை" எனப் பெயரிட்டனர். பிற்காலத்தில் சற்று திருத்தமான வடிவம் பெற்று "பாவற்கொடிச்சேனை" என அளைக்கப்பட்டது. இக் கிராமம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர் இவர்களில் பெரும்பாலானவர்கள் கூலித் தொழில் செய்தே வாழ்கினறனர். மாணவர்கள் தமது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை கற்றதன் பின்பு பல இடர்பாடுகள் காரணமாக அதாவது உயர்கல்வி கற்கும் வாய்ப்பு இங்கு இன்மை, போக்கு வரத்துப் பிரச்சனை போன்ற காரணங்களால் கல்வியை இடை நிறுத்த வேண்டிய நிற்பந்தத்திற்கு உள்ளாகின்றனர் இதன் காரணமாக இதுவரை காலமும் இங்கு கல்வி கற்று உயர் கல்வியைத் தொடர்ந்து அரசபதவியில் உள்ளவர்கள் ஓரிருவர், விவசாயம் செய்வோர் என மிகக் குறைவானவர்களே காணப்படுகின்றன்.

இவ்வாறான நிலையில் காணப்படும் எமது கிராமத்தின் ஒரு சிகரமாகவும் சிறப்பிடமாகவும் விளங்குவது எமது மட்/ மமே/ பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம் ஆகும் பல கிராமங்களின் மத்தியில் ஓர் கல்விக்கூடமாகத் திகழும் இப் பாடசாலையில் 12 கிராமங்களை சேர்ந்த சுமார் 400 மாணவர்கள் கல்வி கற்கின்றனர் தற்போது மட்/ மமே/ பாவற்கெடிச்சேனை விநாயகர் வித்தியாலயம் எனும் நாமத்துடன் மிளிரும் எமது பாடசாலையின் ஆரம்பகாலப் பெயர் மட்/ வலது கரை வாய்க்கால் அ.த.க பாடசாலை என்பதாகும் இதன் தோற்றத்திற்கு காரணமாக இருந்தவர். அமரர் திரு க. இராசையா அவர்கள் ஆவர். இவர் கொக்கட்டிச் சோலையில் இருந்து 1953ம் ஆண்டு இங்கு வந்து குடியேறியவர் இவரின் மனைவி திருமதி அஞ்சலினா இராசையா இவர் ஒரு ஆசிரியை ஆவார்.

இவர்கள் இங்கு குடியேறிய காலத்தில் திருமதி அஞ்சலினா அவர்கள் மட்/ காயான் கேணி பாடசாலையில் கடைமையாற்றிக் கொண்டிருந்தார். இராசையா அவர்கள் இக்கிராம மக்கள் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக இங்கு ஓர் பாடசாலை ஆரம்பிக்க வேண்டும் எனும் நோக்கில் சில பெற்றோரை அழைத்து வைக்கோல், களிமண் என்பவற்றைக் கொண்டு (1954ம் ஆண்டு) ஒரு சிறிய கொட்டில் அமைத்து அதில் முஸ்லிம், தமிழ் மாணவர்கள் என 25 பேரை வீடு வீடாகச் சென்று அழைத்து வந்து எழுத்தறிவித்தார்.

அதே வேளை இங்கு கற்பிக்க ஆசிரியர் இல்லாத நிலையில் தனது மனைவி அஞ்சலினா அவர்களை இப் பாடசாலைக்கு மாற்றம் தருமாறு கல்வி நிருவாகிகளை வேண்டினார். அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவிக்கவும் திருமதி அஞ்சலினா அவர்கள் வேதனத்துடனான தமது ஆசிரியர் தொழிலை இடைநிறுத்திவிட்டு எமது கிராம மக்களுக்காக சேவை செய்யவென இங்கு வந்து எவ்வித வேதனமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்ப்புக்களோ இன்றி சுமார் ஒரு வருட காலம் இவ் ஓலைக் கொட்டிலில்கற்பித்தார். இவரின் சேவை மனப் பான்மையைக் கண்ட மிஸநெறி அமைப்பினர். இவரை மீண்டும் ஆசிரியர் பணியில் அமர்த்தி இப்பாடசாலையிலே கற்ப்பிக்க வழி செய்தனர். இந் நிலையில் இவர்கள் இருவரதும் முயற்சியால் 1956ம் ஆண்டு 60 20 பரப்பளவைக் கொண்ட ஓர் நிரந்தரக்கட்டிடம் கிடைக்கப் பெற்றது. அதேவேளை பெரும் காடாகக் கிடந்த இடத்தை சில பெற்றோரின் உதவியுடன் வெட்டித் துப்பரவு செய்து 05 ஏக்கர் காணி பாடசாலைக்கென எல்லை இடப்பட்டது.

இவ்வாறு பெறப்பட்ட கட்டடத்தில் தரம் 1-5 வரையான வகுப்புக்கள் நடத்தப்பட்டன 1959ம் ஆண்டு பாடசாலை பதிவு செய்யப்பட்டு மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த திரு.க. சாமித்தம்பி வாத்தியார் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டதன் பின் அஞ்சலினா அவர்கள் வேறு பாடசாலைக்கு மாற்றம் பெற்றுச் சென்றார்.

இவ்வாறு சென்ற அவர் மீண்டும் தமதுமுயற்சியினால் இரு வேறுபட்ட காலங்களில் இப் பாடசாலை அதிபராகக் கடைமையாற்றியமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும் இவ்விதமாக திரு திருமதி இராசையா அஞ்சலினா அவர்களால் உருவாக்கப்பட்ட பாடசாலை அவர்களின் பின் பல காலம் (1979-1991) அதிபராக சேவையாற்றிய திரு ஆ. பொன்னுத்துரை ஐயா அவர்களால் "மட் / பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அதுமட்டுமின்றி இப்பாடசாலைக்கான "வாழ்த்திடுவோமே வான்புகழ் பெறவே"——எனும் பாடசாலைக் கீதமும் இவரால் இயற்றப் பட்டது. மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. ஆ. பொன்னுத்துரை ஐயா, அவர்கள் இப் பாடசாலை மாணவர்களின் நலன்கருதி இக் கிராமத்திலேயே தங்கி இருந்து நீண்டகாலம் சேவையாற்றிய பெருமைக்குரியவர். அத்துடன் இவரது சேவைக்காலப் பகுதியில் தரம் 1-8 வரையான வகுப்புக்களை ஒரு ஆசிரியர்கூட இல்லாத நிலையில் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தாம் ஒருவர் மட்டுமே கற்பித்த காலங்களும் மறக்க முடியாதவை.

அதன் பின்னர் எமது பாடசாலை வளர்ச்சிக்காக பல அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விநிர்வாகிகள், அரசியல் வாதிகள், நலன் விரும்பிகள் எனப் பலரின் உதவிகிடைக்கப் பெற்றுள்ளன அந்த வகையில் கட்டட வசதிகள் போதாமையினால் நீண்டகாலமாக அல்லலுற்ற மாணவர்களுக்காக திரு. தி. கிருபாகரன் அதிபர் அவர்கள் இப்பாடசாலையில் கடையாற்றிய காலப்பகுதியில் (2012) முன்னாள் முதலமைச்சர் திரு.சி. சந்திரகாந்தன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஓர் இரண்டு மாடிக் கட்டிடம் கிடைக்கப் பெற்றது. இதற்கான முழ முயற்சியினை மேற் கொண்டவர் திரு.ரி. கிருபாகரன் ஐயா அவர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையில் 2004ம் ஆண்டு வரையான காலத்தில் தரம் 1-10 வரையான வகுப்புக்களே காணப்பட்டன அதன் பின் கற்க வேண்டுமெனில் மாணவர்கள் மிகவும் சிரமங்களுக்கு மத்தியில் நீண்ட தொலைவில் உள்ள மட்/ கன்னன்குடா மகா வித்தியாலயம் அல்லது மட்டக்களப்பு நகரை நாடிச் செல்ல வேண்டிய நிலை காணப்பட்டது. இதன் காரணமாகப் பல மாணவர்கள் தரம் 10 உடனேய தமது கல்வியை நிறுத்திக் கொண்டனர். இப் பாரிய குறைபாட்டினைக் கண்டு கொண்ட அப்போதைய அதிபராக இருந்த திரு மா. அருளம்பலம் ஐயா அவர்களின் முயற்சியின் காரணமாக கா. பொ. த சாதாரண தரம் வரையான வகுப்புக்கள் 2005ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் துரதிஸ்ட வசமாக 2010ம் ஆண்டு வரை ஒரு மாணவர்கூட முழுமையாக சித்தி பெறவில்லை முதல் தடவையாக 2010ம் ஆண்டு திரு ரி. கிருபாகரன் ஐயா அவர்களின் கலைப்பகுதியில் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 05 பெண் மாணவிகள் சித்திபெற்றனர். அதன் பின்னர் 130 ஒவ்வொரு வருடமும் கணிசமான அளவு மாணவர்கள் சித்தியடைந்து வருகின்றனர். இவர்கள் இவ்வாறு சித்தயடைவதற்கு. எமது பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் மாணவர்கள், பெற்றோர், மற்றும் சில நலன் விரும்பிகளின் கூட்டு முயற்சியால் இடம்பெறும் மாலை நேர மற்றும் இரவு நேரதங்குமிட வசதி வாய்ப்புக்களும் காரணமாகும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக எமது கிராமத்தைச் சேர்ந்த பழைய மாணவர் சிலர் எமது பாடசாலை மீது காட்டும் அக்கறையும் ஆதரவும் அளப் பெரியது. இங்கு நடைபெறும் எந்த நிகழ்வாக இருந்தாலும் அதில் பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவரின் பங்களிப்பு மிகவும் வர வேற்கத்தக்க தாக இருக்கும்.

எமது பாடசாலையின் முன்புறமுள்ள சரஸ்வதி சிலையானது இங்கு கல்வி கற்று வெளியேறித் தற்போது வெளி நாடுகளில் தொழில் புரிந்து கொண்டிருக்கும் சில பழைய மாணவர்களின் நிதியிலேயே நிர்மாணிக்கப்பட்டது. அது மட்டுமின்றி இன்று வெளிவரும் இடம் பெறும் "பாகல்த்துளிர்" எனும் இந்நூல் வெளியீட்டுக்காகவும் இவர்களாலேயே பணம் உதவி செய்யப்பட்டுள்ளது மேலும் 2007ம் ஆண்டுமுதல் இன்றுவரை ஒரு நிரந்தர அதிபர் இல்லாத நிலையிலும் 2014-2017 வரை பதில் அதிபராக எமது பாடசாலையைப் பொறுப் பேற்று சிறப்புற நிர்வகித்து வந்த திரு.சு. ரவிசசங்கர் ஐயா அவர்களின் சேவை பாராட்டத்தக்கது இவரது சேவைக் காலப் பகுதியில் எமது பாடசாலை பெருமளவு மாற்றத்தினையும் வளர்ச்சிப் போக்கினையும் கண்டுள்ளது அதன்படி எமது கிராமமக்கள் மற்றும் பழைய மாணவர்களின் உதவி பங்களிப்புடன் பாடசாலைக்கான பெயர்ப் பலகை சரஸ்வதிசிலை நிர்மானிப்பு பாடசாலைக் கீதத்திற்கான புதியதோர் இசையமைப்பு அத்துடன் தற்போது கௌரவ அமைச்சர் ஹிஸ்புல்லா அவர்களின் முன் னெடுத்தலின் கீழ் அமைக்கப்பட்டுள்ள அழகான இரண்டு மாடிக்கட்டிடம் என்பவையும் இவரது அயராத முயற்சியின் பயனாக உருப் பெற்றவையே

இவர்தமது சுகவீனம் காரணமாக கடந்த 02.06.2017ம் திகதியன்று தற்காலிக இடமாற்றம் பெற்றச் சென்றதன் பின்னர் எமது பாடசாலையை பொறுப்பேற்று நிர்வகிப்பதற்கு யாருமற்ற ஓர் இக்கட்டான சூழ்நிலையில் எம்முடன் சக ஆசிரியராகஇருந்த திரு. வ புஸ்பாகரன் ஆசிரியர் அவர்கள் முன்வந்து எமது பாடசாலையைப் பொறுப்பேற்று மிகவும் சிறப்புற நடத்திச் செல்கின்றார்.

**திரு.கு.பிரபாகரன் ( ஆசிரியர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலையின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு கற்றலில் ஏற்படும் இடர்பாடுகள்

ஒரு குழந்தையானது தாயின் கருவறையில் இருக்கும் போதே கற்க ஆரம்பிக்கின்றது இது உழவியல் ஆய்வாளர்களின் கருத்து இக் கருத்து உன்மையானவையாகும் இவ்வாறு தாயின் கருவில் இருக்கும் போதே கற்கத் தொடங்கும் குழந்தையானது இவ் உலகில் பிறந்து படிப்படியாக வளர்ந்து தனது குழந்தைப் பருவத்தின் அனைத்து செயற்பாடுகளையும் சிறப்பாக வெளிக்காட்டி துலங்குகின்றது. இக் குழந்தையானது பாடசாலைக் கல்விக்குள் நுளைந்ததும் கற்றலில் பின் நிற்பது அல்லது இடர்படுவது. ஏன்? இக் கேள்வி எமது பாடசாலைக்கு மட்டுமல்ல எமது பிரதேசமே கவலை கொள்ளும்விடயமாக காண்கின்றோம்.



**இந்த விடயத்தை நோக்கு வோமானால் ஒரு பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக நாம் பல விடயங்களைக் குறிப்பிடலாம்**

**01. பிள்ளையின் உடல் உளத்தேவைகள்**
**02. முறையான முன்பள்ளி கல்வி**
**03. கற்றலில் பிள்ளையின் விருப்பு வெறுப்பு**
**04. பெற்றோர்களின் முழுமையான பங்களிப்பு**
**05. பொருளாதாரம்**
**06. சக பாழகள்**
**07. வீட்டுச் சூழல்**
**08. வகுப்பறைச் சூழல் போன்ற பலவிடயங்கள் செல்வாக்கு செலுத்துகின்றன.**

எமது பாடசாலையைப் பொறுத்தவரையில் ஒரு பிள்ளை கற்றிலில் பின் நிற்பதற்கான முதன்மைக் காரனி அப்பிள்ளையின் முக்கிய தேவையான உடல் உளத் தேவைகள் நிறைவு செய்யப் பாடாமையாகும். எமது பிரதேசம் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக போர்ச் சூழலால் பாதிக்கப்பட்டு அடிப்படைத் தேவைகளான கல்வி பொருளாதாரம் சுகாதாரம் போன்ற பல விடயங்களில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் உள்ளனர் படிப்படியாக தற்போது தான் கற்றல் சூழ் நிலைக்கு. மாற்றமடைந்து கொண்டிருக்கின்றனர். அவ்வாறிருந்தும் பொருளாதாரம் குடும்பச்சுமை சமுகப்பிரச்சனைகள் கணவன் மனைவியரிடையே பிணக்குகள் தாய் தந்தை இளந்தவர்கள் தொழிலுக்காக வெளிநாடு சென்றவர்கள் மறுதிருமணம் முடிந்தவர்கள் போன்ற காரணிகளாலும் பிள்ளை கற்றலில் இடற்படுகின்றவனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்புத் தேவை கனிப்பு தேவை என்பன பிள்ளைக்கு பூர்த்தி செய்யப்படாது காணப்படும் பட்சத்தில் பிள்ளை பிறள்வான நடத்தைக் கோலமுள்ள பிள்ளையாக கருதப்படுவான் எனவே பிள்ளை சிறப்பாக வளர்ச்சியடைய வேண்டுமாக இருந்தால் உடல் உள வறட்சி மிக அவசியம் என உளவியாளர்களான தோமஸ் இபாஸ்லோ போன்ற அறிஞ்ஞர்கள்கூறியுள்ளனர் எனவே பிள்ளைகளுக்குரிய தேவைகளை அறிந்து முடிந்தளவு நிவர்த்தி செய்ய வேண்டும் அவ்வாறு தவறும்பட்சத்தில் பிள்ளைகள் கற்றலில் ஆர்வமின்றி இடர் படுகின்றானர்

அடுத்த காரணியாக நாம்கருதக் கூடியது முறையான முன்பள்ளிக்கல்வி இன்மை நகரத்துடனுன் இப் பிரதேசத்தை ஒப்பிடும் போது முன்பள்ளிக் கல்வியானது கூடுதலான வேறுபாடுகளை கொண்டுள்ளது நகரப் பிரதேசத்தில் முன்பள்ளிக் கூடங்கள் சகல வளங்களையும் கொண்டு தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள் அங்கு பெற்றோர்களின் பங்களிப்பும் 100% கிடைக்கின்றது எமது பிரதேசத்தை பொறுத்த வகையில் அவ்வாறு எதிர் பார்க்க முடியாது எனவே கற்பித்தல் விடையமானது பின் அடைவு ஏற்படுவதை இங்கு காண்கின்றோம் முன்பள்ளிக் கல்வியானது ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கல்வியில் பாரிய தாக்கம் செலுத்துகின்றது முன்பள்ளி கல்வி கற்ற பிள்ளையானது தரம்-01ற்கு சேரும் போது விருப்பதுடனும் ஆர்வத்துடனும் சேர்கிறது அந்தப் பிள்ளைக்கு கூச்சு சுபாபம் இன்றி எல்லோரிடமும் பழகும் தன்மையும் எதையும் ஆராய்யும் இயல்பும் எந்த செயலைச் செய்வதற்கும் முன் வரும் தன்மையும் சிறப்பான அம்சமாக காணப்படுகின்றது. இவ்வாறான மாணவர்களை நாம் நகரப்புற முன்பள்ளி கல்வி நிலையங்களில் காணலாம்

அதற்கு காரணம் மேற்கூறிய சகல-வளமும் அங்கு குவிந்து காணப்படுகின்றது அதனால் எமது பிரதேசத்தில் உள்ள முன்பள்ளி மாணவர்களுக்கு அவ்வாறு வளங்கள் இருக்கும் என முழுமையாக கூறமுடியாது இதனால் எமது மாணவர்களுக்கு நிறைவான கல்விகிடைப்பது அரிது இருக்கின்ற வளத்தைக் கொண்டே பயன் பெறவேண்டியுள்ளது இதனால் எமது முன்பள்ளி மாணவர்களிடம் 100% பயனை எதிர் பார்க்க முடியாது அதிலும் முன்பள்ளிக்கே செல்லாது நேரடியாக தரம்-01இல் சேர்ப்பதற்கு பாடசாலைக்கு அழைத்துவரும் பெற்றோர்கள் இன்னும் உள்ளனர் அதிலும் தரம்-01ற்கு வேறுபாடான வயது உடைய மாணவர்கள் காணப்படுவர் தரம்-03ல் கல்வி கற்க வேண்டிய மாணவன் தரம்-01ல் சேர்க்கப்பட்டிருப்பன் இதுமுற்று முழுதாக பெற்றோர்களின் கவனம் இன்மை இவ்வாறு முன்பள்ளி கல்வி கற்காத பிள்ளை வகுப்பில் ஒதுங்கும் நிலை உருவாகும் இவர்கள் ஏனைய மாணவர்களும் சேர்மாட்டார்கள் கற்றலில் விருப்பம் இல்லாமல் கவனம் இன்றி இருப்பர்.

எனவே கற்றலில் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் சிறப்பாக தேர்ச்சி அடைய வேண்டுமாயின் முன்பள்ளிக் கல்வி அவசியமாகும் அடுத்தபடியாக பிள்ளையின் ஆதர்வமும் கற்றலில் செல்வாக்கு செலுத்துகின்றது "விளையும்பயிரை முளையிலே தெரியும் என்பார்கள்" அதனால் எமது பிரதேசத்தை பொறுத்தவகையில் சமூக காரணிகளின் தாக்கம் காரணமாக பிள்ளைகளின் கற்றல் விடையங்களில் இடர்பாடாக காணப் படுகின்றனர் அதுமட்டும் அன்றி இயல்பாகவே ஆற்றல் இன்மை போசாக்கு குறைபாட்டால் மந்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையையும் காண்கின்றோம் எனவேதான் பிள்ளைகளின் மனதில் கற்பது கடினம் என்ற கருத்தை அல்லது எண்ணத்தை உளவியல் ரீதியாக ஏற்படுத்தி உள்ளமையும் இடர்பாடுகளுக்கு காரணமாக உள்ளது இவ் விடையம் சம்மாந்தமாக பலகேள்விகளுக்கு விடைகானும் நோக்கோடு ஆரம்பக் கல்வியை மேலும் வினைத்திறன் உடையதாக ஆக்குவதற்கு மாணவர்களின் அடைவுமட்டத்தை மேம்படுத்தவும் மட்டக்களப்பு மேற்குவலய கல்வி அதிகாரிகளின் பாரவை ஆரம்பக் கல்வி யின்பால் ஈர்துள்ளதைக் காண்கின்றோம்

ஆரம்பக் கல்வி மாணவர்களின் அடைவுமட்டத்தை கூட்டுவதற்காக தரம்-05 மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சையை மையமாகக் கொண்டு சகல மாணவர்களும் 70 புள்ளிகளை பெறுவதற்காக கல்வி அதிகாரிகள் நீண்டகாலம் குறுகியகாலம் என செயற்திட்டங்களைதீட்டி எமது பிரதேசத்தில் உள்ள சகல பாடசாலைக்கும் செயலட்டை ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதைக் காண்கின்றோம் இதனிடையே மற்றும் ஒரு அங்கமாக 27 பாடசாலையையும் ஒன்றினைத்து அதில் உள்ள தரம்-01 தொடக்கம் 05 வரையுள்ள ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் அனைவருக்கும் வான்மை விருத்தியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு. Childfund நிறுவனத்தின் அனுசரனையுடன் புதிய கற்றல் நூட்பம் என்கின்ற புதிய அனுகுமுறையைக் கொண்டு சிறந்த கல்வியலாளர்களின் புதியபுதிய அனுபங்களை பெற்றுக் கொண்டு எமது பிரதேசத்தில் உள்ள ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கு மூன்றுகட்டங்களாக பயிற்சி அளித்து ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கற்றல்நடவடிக்கையை மேம்படுத்துவதற்காகவும் அடைவுமட்டத்தை கூட்டுவதற்காகவும் எமது பிரதேசத்தில் இடர்பாட்டுக்குட்பட்ட மாணவர்களின் எழுத்தறிவு எண்அறிவு வாசிப்புப் போன்ற விடையங்களில் தேர்ச்சி அடைய வைப்பதற்கு வவுணதீவு அபிவிருத்தி நிறுவனம் (VDO) மூலமும் 2013/ 2017ம் அதற்கு காலப்பகுதியில் 26 பாடசாலையிலும் உள்ள ஆசிரியர்களுக்கு பூரணயாக பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் புதிய புதிய நுட்பமுறைகளை கையாண்டு கற்றுக்கொண்டு மாணவர்களின் இடர்பாடுகளை இனங்காண்டு மீள்த்திறன் கூடிய மாணவர்கள் குறைந்த மாணவர்கள் என்று இனங்காணப்பட்டு கற்பிக்கும் ஆற்றல் உடன் சகல ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் தங்களது பண்பை விருத்தியின் உச்சபயனை பெற்றுள்ளனர் இதன் மூலம் எமது பிரதேசத்து ஆரம்பப் பிரிவு மாணவர்களின் பல கற்றல் இடர்பாடுகளுக்கு குறுகிய காலத்திற்கு தீர்வு கிடைக்கும் என்பது உண்மை

அடுத்த விடையமாக பார்க வேண்டியது கற்றல் இடர்பாடுகளுக்கு முக்கிய காரணி பெற்றோர்களின் பங்கு எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவில் தரம்-01 தொடக்கம் 05 வரை நிரந்தர ஆசிரியர்கள் 03 பேர்கள் உள்ளனர் அடுத்த இரண்டுவகுப்புக்களை கற்பிப்பதற்கு கா.பொ.த. உயர்தர மாணவிகள் கற்பிக்கின்றனர்.

இந்த ஐந்து வகுப்புகளிலும் மொந்தமாக 170 மாணவர்கள் கற்கின்றனர் இவ்வாறான சிரமத்தின் மத்தியில் இப்பாடசாலைக்கு வரும் மாணவர்கள் பல தூர இடங்களில் இருந்தே கல்வி கற்க வரவேண்டியுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருநூறுவில் 5Km நெடுஞ்சேனை 5Km கற்பக்கேணி 4Km ஊத்து மடு 3Km 10 1/2 கட்டை 5Km பாவற்கொடிச்சேனை சுற்றி 2Km ஆகிய தூரங்களில் இருந்து கல்வி கற்க வருகின்றனா் இவா்களில் ot—11 ம் ஆண்டு வரை 370 மாணவா்கள் கற்கின்றனர் மொத்தமாக அதிபா் உட்பட 17 ஆசிரியா்கள் கற்பிக்கின்றனா்

இவ்வாறு கற்பிக்கின்ற வேளையில் தொடற்சியாக மாணவா்களின் இடை விலகல் வரவில் வீழ்ச்சி ஆலய சமய விழாக்களின் தாக்கம் அறுபடை காலங்களின் யானையின் அட்டகாசம் போன்ற பிறகாரணிகளினாலும் மாணவா்களின் வரவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது இவ்வாறான இடா்பாடுகளுக்கு மத்தியில் தான் எமது ஆசிரியா் குழாம் ஏனைய (வலயத்திற்கு அன்மையில்) பாடசாலைளுடன் அடைவ மட்டத்தை கூட்டுவதிலும் நாமும் சம பங்காளிகளாக சகல ஆசிரியா்களும் அற்பணிக்க வேண்டியுள்ளது (அற்பணிக்கின் றோம்) இதன் பெறுபேறாக அன்மைகாலங்களாக க.பொ.த (சா/த)த்தில் கற்கின்ற மாணவா்கள் உயா்தரத்தில் கல்வி கற்கின்ற வீதம் அதிகாித்துக் கொண்டு செல்கின்றதை காண்கின்றோம்.

இதே போன்று எமது பாடசாலையானது ஆரம்பப்பிரிவு மாணவா்களின் எழுத்தாறிவு எண்ணறிவு வாசிப்பு போன்ற விடயங்களை முதன்மைப்படுத்தி தரம் 3-5 வரையுள்ள மாணவா்களுக்கு தனித்தனியே செயற்றிட்டங்களை உருவாக்கி மாணவா்களை

தரம் 5ல் நடை பெறுகின்ற புலமைபாிசில் பாிட்சைக்கு சகல மாணவா்களையும் 70 புள்ளிகள் (என்ற திட்டத்தை மையமாக கொண்டு) பெறவேண்டும் என சகல ஆரம்பக்கல்வி ஆசிரியா்களும் அற்பணிப்புட -ன் செயல்படுவதை காண்கின்றோம் இவ்வாறான வேளையில் கற்றல் கற்பித்தல் விடயமானது மாணவா்களுக்கு இலகு வாக்கப்பட்டு கற்பிக்கபடும் பட்சத்தில் மாணவா்களுக்கு இடா்பாடுகள் வருவதை இனங்கண்டு அவா்களுக்குரிய நுட்பமுறைகளின் ஊடாக கற்பிக்கும் போது அவா்களின் அடைவை உயா்த்த கூடிய வாய்ப்பு உருவாகும் இவ்வாறு பாடசாலையின் பக்கம் கற்பதற்குரிய சூழலை பாடசாலை நிா்வாகம் ஏற்படுத்தும் போது மாணவா்களின் தேவைகளை பூா்த்தி செய்வதற்காக பெற்றோா்களின் ஒத்துளைப்பு பூரணமாக பாடசாலை சமுகத்துக்கு கிடைக்க வேண்டும் இவ்வாறு ஒத்துழைப்பு கிடைக்கும் பட்சத்தில் இடைவிலகலை இல்லாமல் செய்து வரவை அதிகாிக்கலாம் இவ்வாறு அதிகாிப்பதன் மூலம் அடைவு மட்டத்தை கூட்டி கற்றல் இடா்பாடுகளை நிவா்த்தி செய்யலாம்.

அது மட்டுமின்றி SDS பழைய மாணவா்களின் ஒத்துளைப்பு G.S. சமுா்த்தி போன்ற அரச சாா்பு அதிகாாிகளின் அனுசரனையையும் எமது பாடசாலை சமுகம் பூரணமாக பெறும்பட்சத்தில் மாணவா்களின் கற்றல் இலக்கை அடைய முடியும் எவ்வளவுதான் பின்புலத்திலிருந்து உந்து சக்தி எமக்கு கிடைத்தாலும் முற்றுமுழுதாக இப்பிரச்சனையை நிவர்த்தி செய்வதற்கு கிராமங்கள் தோறும் உள்ள கல்வி கற்ற இளைஞா்கள் யுவதிகள் பல்கலைக்கழக மாணவ சமுகங்கள் தனவந்தா்கள் அரசசாா் பற்ற நிறுவணங்கள் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய விழிப்பு -ணா்வை பெற்றோா்களுக்கு ஊட்டவேண்டும் அப்போதுதான் அவா்கள் மத்தியில் மனமாற்றம் ஏற்பட்டு கல்வியால் முன்னேற்றம் ஏற்படும்

திரு.ச.சண்முகநாதன்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி இருந்தோமோ இப்படியும் இக்காடு பொன்னாடாய் வருமெனவே

# கவிதை

புண்ணியங்கள்
செய்தனரோ இப்
பூமியில்
முன்வாழ்ந்தவர்கள்
கண் கொள்ளாக்
காட்சிமிகக்
காண்கிதே இப்புவியில்
தண்ணீர் மிக
ஓடுகிறதாற் பரிசினங்கள்
எண்ணித் தொலையாதோ இவ்வரிய ஊர் பெருமை
கன்னலொடு கமுகுமிக காய்த்துக்குலுங்கிற முன்னமில்லாக் காட்சிமிகமுருக்கேறிநிற்கிறம்
சென்னெல் விளைமிக சீரோங்கி நிற்கிதே இன்னமென்னகுறையுள்ளதோ ஈஸ்வரியே தீர்த்து
வைய்ப்பாய்



திரு.க.திருநாவுக்கரசு
(புலவர்)
கண்ணகிநகர்

இல்லை யென்று சொல்வதுக்கு
ஏதுமுண்டோ இவ்விடத்தில்
வல்ல கணபதியேயை வணங்கினரே இக்
சுவடலுக்கும்
கல்வி சொல்ல இங்குநல்ல கற்றறிந்த
களவான்கள்
சொல்லியடங்காது
விநாயகர் வித்தியாலயத்தை
படுவான் கரையென்று பளித்தபட்டிணத்தர்
எல்லாம்
விடுரோபி வந்த மர்ந்தால் பலவழமும்
வாய்ந் தெண்று
தடுமாறும் மாந்தர்களே தட்டுமட்டும் தானங்கே !
கெடுவாரே பேசாதீர் இங்கிருந்தே தாறார் சோறு அற்புதம்சேர் ஆசிரியர் ஆற்றுகின்ற
கல்விதனக் பொற்குடங்கள் ஈடாமோ புனிதமுள்ளகல்விதனக விற்பனர்கள் என்றென்றும்
வீற்றிருந்து கல்விஈகும் அற்புதம் சேர் அதிபருடன் அனைபருமே வாழ்கநீடு
மங்கை இடபாகமீந்த மகேஸ் பரனே உன்னருளால் சங்கத் தமிழ்வழர தந்திடுவாய் நின்
அருளை எங்கும் கலைவளர்க ஏற்றமிகு கலைஞருடன் சங்கரனார் தன்பதங்கள் தான்போற்றி
வணங்கிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், ஆசிரியர்கள்



முகாமைத்துவக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் நினைவுகள்

மாலைப் பொழுதில் தனிமையில்-நான்
சாலையைக் கடந்தபோது
இதயத்திலே இலேசான வருடல் ஒன்று-என்னை
திரும்பிப்பார் திரும்பிப்பார் என்றது
சற்றே நான் தலை திருப்பினேன்
அப்போதுதான் தெரிந்தது
நான் கடந்துசென்றது சாலை அல்ல
என் பாடசாலை என்று
நான் கடந்து வந்த பாதைகள்
என் மனத்திரையில் நிழற்படமாய் ஓடியது.

முதல் எழுத்தை அறியவைத்த ஆசான் முகத்துடன்
முதன் முதலாய் தடம் வைத்த என் பள்ளிநாள்
நினைவுகள்
புத்தகப் பையை அணிய அறியாத எனக்கு
உதவியாய் வந்த என் முதல் நட்பு
எங்கோ ஒரு மூலையில் என் இதயத்தில்
உறக்கத்தில் இருந்து விழித்திருக்கும் போல
நினைவுகள் என் மனதை முட்டிய போது
என் தலை என்னையும் அறியாமல் சுவரை
முட்டியது.

உள்ளே நுழைந்தபோது என்னை
வரவேற்பதற்கு என்றே
வளர்ந்து நின்ற நான் நட்ட தேக்கு மரம்
என்னைப் பார்த்து முகம் மலர்ந்து
எனக்காக நண்பர்களை என் அ[illegible]
நட்டுவிட்டுச் சென்ற உன் நண்பர்கள் எ[illegible]கே
என்றது
ஏக்கத்துடன் வந்த பெருமூச்சு என்ன[illegible]
நான்கற்ற வகுப்பறைக் கம்பிகளை
வருடத் தூண்டியது

பள்ளிப் பருவத்து கன்னிக் காதலனாய்
அன்றிருந்த என் பாடசாலைக் கட்டிடங்க[illegible]
ஓய்ந்து கிடக்கும் ஓர்
அவல நிலை அங்கே ஓரமாய் அடுக்கில் இருந்[illegible]
என் இருக்கை
என்னை அருகில் அழைப்ப[illegible] போல் இருந்தது
அருகே நகர்ந்தது என் க[illegible]கள்
மேசை[illegible]மீது நான் வரைந்த கி[illegible]ல்கள் என்
நண்பர்க[illegible]ளை எனக்கு ஞாபகப்படுத்தி[illegible]

நான் [illegible]டந்துவந்த பாதைகள்[illegible]
மலர்ச்சோ[illegible]கள் என்பதை உணர்[illegible] எ[illegible]
மனம்
அப் பாதைகளை நான் திரும்பிப்பார்க்கிறேன்
அ[illegible] நினைவுகள் மட்டும்
என்னை பா[illegible]லை[illegible]த்துள்
தனிமைப்படுத்[illegible]யதை உணர்ந்தது என் மனம்
முதுமைக் கால[illegible] [illegible]ரை என்
நினைவுகளை[illegible] சுமந்தபடி என் பள்ளிக் கூடம்.

**வி.தனிஸ்கா**
கிழக்குப்பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை.

# சிந்தனைத் துளிகள்



01. நீ செய்த தவறுகளை வாழ்த்து அவைகள் உன்னை அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருக்கின்றன.

02. இலட்சியம் என்னும் விதைபோடு
முயற்சி என்னும் தண்ணீர் ஊற்று
முடியும் என்ற உரமிடு
வெற்றி என்னும் கனி கிடைக்கும்.

03. எல்லாத் துன்பங்களுக்கும்
இரண்டு மருந்துதான் உண்டு
ஒன்று காலம் மற்றொன்று மௌனம்

04. நீ உன்னை நேசி- பின்னர்
பிறரால் தானாக நேசிக்கப் படுவாய்

05. ஒரு துளி கண்ணீரைத் துடைப்பது
நட்பு அல்ல.
மறு துளி கண்ணீர் வராமல் தடுப்பதுதான்
உண்மையான நட்பு.

06. புரியாததை புரிந்து கொள்ளுங்கள்
புரிந்ததை பகிர்ந்து கொள்ளுங்கள்

07. தவறுகளை மன்னித்து விடாதே
மறந்து விடு.

08. முயற்சிதான் வெற்றியின் முதற்படி என்றால்
அந்த முதற்படியை அடைய
தோற்றாலும் முயற்சியை கைவிடாதே

09. முடியாது என்ற நம்பிக்கையை
கைவிடு முடியும் என்ற முயற்சியெடு
முடியாத காரியத்தையும் முடித்து விடலாம்.

10. விதைகள் கீழ் விழும் போதுதான்
மரமாக மேல் நோக்கி வளரும்
நீ தடுக்கி விழும் போதுதான்
உயர்வடைவாய்.

11. வாழ்வில் நீ சந்திக்கும்
துன்பாங்கள் எல்லாம்
நீ கற்றுக் கொள்ளும்
அனுபவப் பாடங்கள்.

**ரவிந்திரன் வினோதினி**
(பழைய மாணவி)
பாவற்கொடிச்சேனை,உன்னிச்சை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சாலை நினைவலைகள்

செல்வி .சி. லக்ஷனா
பாவற்கொடிச்சேனை

காம்பிலே தேனெடுத்து-என்
நாவிலே "அ" வரைந்த ஆசான்
யாரென்று அறிந்ததில்லை இதுவரையில்
பாலர் வகுப்பு நான் படியேறிபார்த்ததில்லை
பாலகியாய் நான்
பார்த்ததெல்லாம்-
என்
பள்ளிக்கூடம்
ஒன்றைத்தான்.
அண்ணாவிற்கு
பக்கத்தில்
வந்திருந்து
ஏடெடுத்து
பார்க்கையிலே-
என்கரம்
பிடித்து "அ"
வரைந்த.

கண்ணா டீச்சர்
கண்ணுக்குள்
இருக்கிறார்.
அன்னைக்கு
அடுத்ததாய்
நான் கண்ட ஆலயம்-என்
விநாயகர் வித்தியாலயம்
கட்டடங்கள் கனத்து இருந்ததில்லை
துள்ளிவிளையாட சுற்றியும் மரநிழல்கள்
முன்வேலிக்கு அடையாளம் அலரிமரம்.
மரநிழலில் சென்றால்தான்
வாசிக்க முடியும் என்போம்-எம்
வார்த்தை கேட்டு கூட்டிச்செல்வார் ஆசிரியர்.



4ம்வகுப்பு வந்ததும் நரகலோகம்
தொடங்கியது
புலமைப்பரிசில் பரீட்சை என்று பிழிந்து
எடுத்தனர்.

அல்லும் பகலும்
எம்மோடு பாடுபட்ட
நவரெட்ணம் ஆசிரியர்
அப்பா என்று
சொன்னாலும்
மிகையல்ல
5ம்வகுப்பினிலே
விடுதியில்
தங்கவைத்து
"பெற்றோல்மெச்
வெளிச்சத்திலும்
பாடம் புகட்டிடுவார்.

நாட்களோ நகர்த்து
6ம்வகுப்பினிலே
புது புது ஆசிரியர் முகம்
பாரத்தோம்
பயந்து நடுங்கினோம்
ஆனாலும் பரவாயில்லை.காலை
எழுந்தவுடன்-கல்விச்
சாலையது ஞாபகமே-ஆறு
மணியானவுடன் ஓடி வந்திடுவோம்.கணிதப்
பாடமென்று கசந்துபோய் இருக்கையில்
நான்கு பாடவேளை சேர்த்தே எடுத்திடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏசி துரத்தினாலும் ஒரு பாடவேளை
வெளியில் நின்றுவிட்டு மீண்டும்
விரைந்து வந்திடுவார்-எம்
கணிதப்பாட ஆசிரியர்.
ஆசிரியருக்கு நாம் எப்போதும்
பணிந்து நடந்திடுவோம்.
அதிகாரிகளைக் கண்டால்
அப்படியோர் பயம் ஏனோதெரியவில்லை
பாடசாலையில் எங்கள் ஆட்சி
ஆசிரியர்கள் வந்து சேரும்முன்னே
அசம்பிளி தொடக்கிடுவோம்.

ஏதோ ஒரு ஆத்திரத்தில்-என்
Head Prefech batch ஐ கழற்றி
கொடுத்துவிட்டேன்
ஆனாலும் நான் ஒருபோதும் கலங்கவில்லை.
சமாதானம் பேச வந்து ஆசிரியர்-உன்னை
ஒருபோதும் இப்படி செய்வாய் என
நினைக்கவில்லை என்று-என்
முன்னே கண்கலங்கினார்
அப்போது புரிந்துகொண்டேன்-அவர்
என் மீது வைத்த நம்பிக்கையை

பிரத்தியேக வகுப்பிற்க நாம் சென்றதில்லை
எமக்கு தெரிந்ததெல்லாம்
பாடசாலைக் கல்வி ஒன்றே
ஆசிரியர்களைத் தவிர யாரிடமும்
அறிவுரை கேட்டதில்லை.
6 மணிவரை பாடசா[illegible]
பாதுகாப்பாய் நின்[illegible]
ஈடுபட வைக்கும் ஆ[illegible]
லீவுகள் நான் எடு[illegible]
ஒரு போதும் சலி[illegible]
அம்மா.அப்பா பே[illegible]
ஆசிரியர் பேச்சிற்கு[illegible]ோம்.
வளங்கள் அரிதானா[illegible]
வாழ்ந்த நாட்களோ அருமை.

சாதாரண தரம் வரை இருந்த
கலவன் பாடசாலை
ஆசிரியைகளோ மிக அரிது.
சில காலம் ஒருபெண் ஆசிரியர்
கூட இருக்கவில்லை.
பிரச்சினைகள் என்று
எதுவுமே வந்ததில்லை-அனைவரும்

ஒரே குடும்பமாய் நாட்களை கழித்தோம்.
எந்தப் போட்டிகள் வந்தாலும்
நான்பங்குபற்றாமல் இருந்ததில்லை
கட்டாயப்படுத்தி என்னை
கலந்து கொள்ளச் செய்த
ஆசான்களை என்றும் நான் மறவேன்.

கற்ற பாடம் போதவில்லை
பெற்ற நட்பும் மாறவில்லை
காலமகள் கட்டளையால்
உயர்தரம் கற்கவென்று
நகர்ப்புறம் நோக்கி புறப்பட்டவேளை-என்னை
பட்டிக்காடு என்று சுட்டிக்காட்டினரே
அப்போது எண்ணிக் கலங்கினேன்

பாவற்கொடிச்சேனையில்
வீறுந[illegible] போட்ட அந்த நாட்களை
மீண்டுமோ[illegible] பள்ளிக்காலம்
[illegible]தோ என ஏங்[illegible]ன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தமிழர் பண்பாட்டின்** பெருமைகளை வெளிப்படுத்தும் பாரம்பரியத் தொழிலே விவசாயமாகும். குறிப்பிட்ட நிலப்பரப்பில் நெல் தானியத்தினை விதைத்து அதன் பேற்றை அறுவடை செய்யும் வரையிலும் வயல் நிலத்தில் வாழ்நாளைக் கழிக்கும் விவசாயி பண்பாட்டுடன் இணைந்ததாகவே தன் பொருளாதாரத்தை வளப்படுத்துகின்றான். வயல் நிலத்தைப் பண்படுத்த ஏர் பூட்டி வயலில் நாற்று நட்டு களைகளைப் பிடுங்கி, சூடு மிதித்து கூட்டாக செயற்படும் தமிழ்ர் பண்பாட்டின் பிறப்பிடமே விவசாய நிலம் தான் என்பது எவரும் மறுப்பதற்குரியதன்று. இயந்திரப் பாவனையும் அதிகரித்த இரசாயன வளமாக்கிகள் மற்றும் பீடைகொல்லிகளின் பயன்பாடும் தமிழ்ர் தம் பண்பாட்டிற்கே சாவால் விடுத்துள்ள நூற்றாண்டின் இறுதியில் நாம் இன்று நின்றுகொண்டிருக்கின்றோம்.

எருதுகள் இரண்டைப் பிணைத்து ஏரினைப் பூட்டி சேற்று நிலத்திலே உழவர்கள் விதைகளை வீசும் போது உண்டான மனமகிழ்வும்
குதூகலமும் உடலின் ஆரோக்கியமும் இன்று இயந்திரத்தின் பிடியில் சிக்கிவிட்டது. தமிழர் தம் பாரம்பரியமான தொழில் உத்திகளில் இருந்து விடுபட்டுள்ள நிலையில் வீட்டிற்கு வீடு மாடுகளை வளர்க்கும் மக்கள் உழவு இயந்திரங்களை மாதாந்தக் கட்டணத்திற்குப் பெற்று மாதாந்தக் கட்டணத்தை செலுத்த முடியாமல் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சவால்களும் இன்று எம் பண்பாட்டின் பிரதிபலிப்பாக மாறிக்கொண்டு வருவதனைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்திலே உழவும் விதைப்பும் இடம்பெற்ற பின்னர் நாற்றினை வயலில் நடுவதும் இயந்திரத்தின் பிடியிலே இணைத்துக் கொள்ளப்படலாயிற்று. வயலிலே அதிகரிக்கும் களைகளை அகற்றுவதற்கு ஆரம்பகாலத்தில் விவசாயக் கூலிகளாக கிராமத்துப் பெண்களே பயன் படுத்தப்பட்டனர். இன்று களைகளைப் பிடுங்குவதற்கு அப்பால் அவற்றினை அழிப்பதற்காக பல்வேறு களைநாசினிகளை நெல்லினை வயலில்விதைப்பது முதற்கொண்டு பயன்படுத்துகின்றனர் இந்நிலையில் பெண்களுக்கான தொழில்வாய்ப்பு இழக்கப்பட்டு பல்வேறு நோய் நிலைகள் எம் பண்பாட்டினுள் ஊடுருவலானது. கூடி வேலை செய்தல் எனும் எம்பண்பாடும் சிதைவுறுவதைப் காணலாம்



**வி.தனிஸ்கா**
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை.

இலாபத்தை நோக்காகக் குறிப்பிடும் இன்றைய முதலாளித்துவம் விவசாயத்திலும் அதன் அவாவைத் தூண்டி விட்டதன் காரணத்தினால் மிகையாகப் பயன்படுத்தப்படும் வளமாக்கிகள் இரசாயணத்தைச் சார்ந்து அமைவதனால் இவை விளைச்சலை அதிகரித்து உணவின் ஆரோக்கியத்தையும் தரத்தையும் குறைத்து விட்டது என்றுதான் கூறவேண்டும். ஜப்பானில் கடந்த சில வருடங்களின் முன் விவசாயத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட இரசாயண உரங்களின் காரணமாக ஏற்பட்ட

( Itai – Itai ) இற்றாலய்-இற்றாய் எனும் நோய் நிலை எம் சமூகத்தை ஆட்கொள்ள மிக நீண்டகாலம் தேவையில்ல. வயலிலே ஏர்பூட்டி மாடுகளுடன் தன்வாழ்வைப் பிணைத்துக் கொண்ட ஆண்களும் நாற்று நட்டும் காலைப் பொழுது முதல் அந்திப்பொழுதுவரையிலும் தம் உடல் உழைப்பால் ஆரோக்கியமான வாழ்வினுள் உடலினைப் பலப்படுத்தி சுகதேகிகளாக வாழ்ந்த எமது சமூகத்தவர்களை சோம்பேறிகளாக மாற்றிய அவலம் விவசாயத்துறை ஏற்றுக் கொண்ட மாற்றத்தின் விளைவே விதைப் பின்போது உடன் தெளிக்கப்படும் கிருமிநாசினிகளும் பயிர் வளர்காலம் மற்றும் அறுவடைக்கு சில நாட்களின் முன்னர் தெளிக்கப்படும் நாசினிகளும் இரசாயனவளமாக்கிகளும் பயிரின் ஆரோக்கியத்தைக் குறைத்து தரமான உற்பத்தியைப் பெறத்தடை யாவதோடு குறித்த சமூகம் ஆரோக்கியமான உணவினைப் பெறுவதிலும் தடையினை ஏற்படுத்துகின்றது. இவற்றுக்கும் அப்பால் நீருடன் கலக்கும் விவசாய நச்சுப்பதார்த்தம் சூழலின் உயிரியல் பல்வகைமையைப் பாதிப்படையச் செய்கின்றது. இந்நிலையில் ஆரோக்கியமானதும் அறிவார்ந்ததுமான எதிர்கால சமூகம் ஒன்றின் எதிர்பார்ப்பு கேள்விக்குறியேயாகும்

புதுமையுடன் பழைமையுடன் இணைக்கப்படடு மனிதவளம் முதன்மைப்படுத்தப்படும் போது பொருளாதார சமூக கலாசார முன்னேற்றம் என்பது சாத்தியப்பாடானதாக அமைவதோடு எதிர்கால சந்ததியின் எதிர்பார்ப்புக்களையும் தேவைகளையும் கருத்தில் கொண்டு நீண்டுநிலைத்த அபிவிருத்தி என்பது விவசாயத்துறைசார்ந்த எம் எதிர்காலத் திட்டமிடலிலேயே தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பாடசாலை

பெற்றதைக் கொண்டு
பெருமை தேடிக்கொள்வது-கல்வி



ந.குணசிவரூபன்
கிழக்குப்
பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை.

பெருமைக்காக தேடிக்
கொள்வது அல்ல-கல்வி
பெருமை பொறுமை
இரண்டும்
தந்தது-பள்ளி.

சிறுவர்களாய் இருந்தபோது
பென்சில் பிடிக்க
பழக்கியது-பள்ளி
பெரியவர்களானதும் பேனா
பிடிக்க
கற்றுத்தந்தது எம்-கல்வி.
தவறுகளைக் களைத்து
சரிவரச்செய்ய
வழிகாட்டியது எம்-ஆசான்

நல்வழி.

அன்பு நிறைந்த சுவடம்
அது கற்றுத்தந்ததே ஒழுக்கமான பாடம்
ஆழம் அறியமுடியாத ஆசிரியர் மனம்
பாடசாலைக்கு உதவிடும் ஊரார் குணம்
ஆழமாய் நடப்பட்டது 1954 அன்று
வாகைசூடுகிறது பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம் என்று

விதைகள் கீழ் நோக்கி
எறியப்பட்டால் தான்
விருட்சங்கள் மேல் நோக்கி வளரும்.
விதையாக தூவப்பட்ட
எம் பாடசாலை பெரு விருட்சமாக மாறிய தருணம் இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்சம்

பனியை உடைத்து கொண்டு வர துடிக்கும் சூரியன் தன் குரலுக்கு நிகர் யாருமில்லை எனப் பாடும் குயில் தன் அழகை காட்டும் பூக்கள் இவைகளின் சங்கமத்துடன் பொன்னியின இருமல்இருமிக்கொண்டே எழுந்தவள் சென்று பானையில் தண்ணியை கொதிக்க விட்டு ராமுவை எழுப்ப உள்ளே போனாள்

பொன்னி கிராமத்தை சேர்ந்த ஏழைப்பெண் ராமு பிறந்து மூன்று வயதினிலே வயலுக்கு நஞ்சு எண்ணெய் அடிக்க போன அவனது அப்பாவை நச்சு பாம்பு தீண்டி பொன்னியை விட்டு சென்று விட்டார். அன்றிலிருந்து ராமுவை தான் கஷ்டப்பட்டு படிப்பித்து வருகின்றாள் ராமு தற்போது தரம்-எட்டில் கல்வி பயில்கின்றான்.

ராமு மனே ராமு எழும்படா நேரம் ஏழு ஆச்சடா எழும்படா மனே அம்மாவின் குரல் கேட்டு எழுந்த ராமு ஐயோ நேரம் போச்சே இன்றைக்கும் என்னை சேர் வாசலிலயே முட்டி போடவைப்பாரே என்று அலறிய படி பற்பொடியை கையில் எடுத்தவன் வாய்க்கால் ஒரம் ஓடினான். காலை கடமைகளை முடித்தவனாய் வீடு திரும்பியவனை மனே தண்ணி சோறு பானையில் கிடக்கடா குடித்து விட்டு செல்லடா என்றவளின் குரலை செவிமடுக்காதவனாய் சிட்டாய் பறந்தான் ராமு.

பாடசாலை அடைந்த ராமுக்கு அதிர்ச்சி அங்கு அதிபர் உரை போய்கொண்டு இருந்தது காலை பிராத்தனை முடிந்து. தயங்கியபடி மெது மெதுவாக சென்ற அவனை ஒழுக்கம் மேற்பார்வை செய்யும் ஆசிரியர் கண்டார். அருகே வந்தவர் எங்கே சப்பாத்து என்றார். கண்கள் பிதுங்கும் அவனை பார்த்து கேட்பது விளங்க வில்லையா? காலில் சப்பாத்து எங்கே என்று மூன்று கட்டை தூரம் கால் ஓட்டமாக வந்து வேர்த்து போய் நிற்கும் அவனை பார்த்து ஆசிரியர் கேட்டதும் அது வந்து சேர் என்று தயங்கியவனை நிறுத்தி இது என்ன கோலம் உமது சேட்டின் வட்டுன் எங்கே என்றார் அப்போதுதான் குனிந்து பார்த்தான். அவன் ஓடி வந்த வேகத்தில் அது பறந்து விட்டது என்று புரிந்தது முழிக்கும் அவனை கண்டித்தார் நாளைக்கு சப்பாத்து போட்டு வரனும் அதோட நேரத்திற்குவர வேண்டும் என்றும் சொல்லி தவறினால் அதிபரிடம் விடுவதாக கண்டித்து அனுப்பினார்.

வகுப்பறை சென்றவன் பாடத்தை நன்றாக உன்னிப்பாக கவனித்தவன் நன்றாக செவிமடுத்து படித்தான். ராமு வகுப்பறையில் முதலாம் இடம் வரும் மாணவன். படிப்பிற்கு சிறந்த மாணவன். படிப்பிற்கு வறுமை தடை இல்லை என்பதற்கு உதாரணமாக விளங்கும் மாணவன் படிப்பு மட்டும் இன்றி விளையாட்டு துறையிலயும் சிறந்து விளங்கும் மாணவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை முடிந்து வீடு திரும்பிய ராமு பானையில் கிடந்த சோற்றை போட்டு சாப்பிட்டு விட்டு அம்மா வேலை செய்யும் முதலாளியின் வீடு நோக்கி சென்றான். அங்கே பொன்னி பத்து பாத்திரம் தேய்த்து கொண்டிருந்தாள் கண் கலங்கிய படியே வந்த அவனை பார்த்து என்னடா மோனே ஏதும் சிக்கலாடா என்றாள் அம்மா சப்பாத்து போட வில்லை என்று வாத்தியார் திட்டுறார் அம்மா

நாளைக்கு கண்டிப்பா போடனும் என்று சொல்லிட்டார் அதோட எனக்கு பேனையும் முடிந்து விட்டது அம்மா இன்றும் இரவல் வேண்டித்தான் எழுதினன் அம்மா. கண் கலங்கிய பொன்னி தனது சேலை தலைப்பால் சிந்திய கண்ணீரை துடைத்துக்கொண்டு கொஞ்சம் பொறடா மேனே முதலாளி பணம் கொடுத்ததும் நான் வேண்டிதாறன் சரியா என்று மகனை தேற்றிய தாயை முதலாளி கண்டார்

பொன்னியை கூப்பிட்டு என்ன பிரச்சினை என்று கேட்டார் அவள் நடந்ததை சொன்னாள் அவர் தனது மகனின் பழைய சப்பாத்தை கொடுத்தார் பேனையும் கொடுத்தார் அதை வேண்டியவனுக்கு வானில் பறப்பது போல் சந்தோசம் பொங்க ஓடியே போனான் வீடு வரை...

இப்படியே நாட்கள் நகர்ந்தது ராமு அப்போ தரம்-10 இற்கு முன்னேறி இருந்தான் ஆனால் அவனால் படிப்பை தொடர முடியவில்லை காரணம் வீட்டு நிலமை தனது அம்மாவின் கஷ்டத்தை அவனால் உணர்ந்து கொள்ளும் வயது அது. அவன் அம்மா வீட்டு வேலை முடித்து அங்கு மீதியாக போட்ட சாப்பாட்டை எடுத்துக் கொண்டு வந்தாள் அதனை இரண்டு பேருமாக சாப்பிட்டார்கள் அப்போ அவன் கேட்டான் அம்மா நான் வயல் வேலைக்கு போகட்டா நமது வறுமைக்கு நாலு காசு சேமித்த போல இருக்கும் என்றான்.

வேணாமடா மோனே நீ நல்லா படிக்கிற பிள்ளை நான் வேலைசெய்து படிப்பிக்கன். என்றாள் இல்லை அம்மா நான் வேலைக்கு போறன் நீங்க இனியும் கஷ்டப்பட வேண்டாம் அம்மா.. நான் வேலைக்கு போறன் என்றவன் வேறு வார்த்தை பேசாமல் போய் தூங்கி விட்டான். அவளும் தூங்க போனாள் ஆனால் அவளாள் தூங்க முடியவில்லை வறுமை எனும் கொடிய நோய் அவளை தட்டி எழுப்பியது.

குயில்கள் கூட்டம் ஓசை காதில் விழவே எழுந்தாள் எப்போ கண்ணயர்ந்தாள் என்று அவளுக்கு தெரியவில்லை ராமுவைவை பார்த்தாள் படுக்கை காலியாக இருந்தது எங்கே போனான் இவன் ராமு சொன்னபோல செய்துட்டான் போல என்று மனதில் நினைத்தவளாய் இருமிக்கொண்டே அடுப்படி சாம்பலை அள்ள போனாள்

வீட்டு வேலையை முடித்து தேயிலை தண்ணியை குடித்து விட்டு வேலை பார்க்கும் இடத்திற்கு போனாள்இரவு வீடு திரும்பினாள் ராமு நின்றான் எங்கேயடா சென்றாய் நீ பள்ளி கூடம் போகாமல் என்று கேட்டதாயிடம் நான் சொன்னேன் தானேயம்மா நான் வேலைக்க போனேன் ஒரு நாளைக்கு ஐந்நூறு ரூபா தருவதாக என்னை கூட்டிப்போன அண்ணன் சொன்னார் என்றான். தனது வறுமை காரணமாக அவளாள் போக வேணாம் என்று இதற்கு மேல் கண்டிக்க முடியவில்லை. இப்படியே ஒரு வாரம் சென்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தான் அது ராமு படிக்கும் பாடசாலை ஆசிரியர் இருவர் அம்மா...அம்மா...ராமு எங்கே அவனை கூட்டிச் செல்லவே வந்தோம் என்றார்கள். அவன் வயலுக்க வேலைக்கு போறான் ஐயா நான் சொன்னதை அவன் கேட்கவில்லை...சரி வயல் எங்கே என்றார்கள் அவளும் வயலை காட்டினாள்.

அவர்கள் அவனை போய் கூட்டி வந்தார்கள் அவனையும் அம்மாவையும் வைத்து அறிவுரை வழங்கினார்கள். கல்வி என்பது "அழியாச் சொத்து" இப்படி நேரத்தை வீணடிக்காமல் பாடசாலை வாங்க கல்வியை தொடருங்க அதுதான் எதிர்காலத்தை நிர்ணயிக்கும். ஒவ்வொரு சிறுவரினதும் அடிப்படை உரிமை கல்வி அதை தடுக்காமல் பாடசாலை அனுப்புங்கள் என்று அறிவுரை வழங்கி சென்றார்கள்.

அடுத்த நாள் பாடசாலை சென்று தனது கல்வியை தொடர்ந்தான் ராமு நாட்கள் நகர்ந்தது. அவன் கல்வியின் முதலாவது தடை தாண்டல் இடத்தை நெருங்கினான் பொது சாதரண தர பரிட்சை தனது அம்மாவின்

கால்களில் விழுந்து ஆசிர்வாதம் வேண்டி நின்ற மகனை இரு சொட்டு கண்ணீரால் ஆசிர்வதித்தாள் பொன்னி அவன் பரிட்சைக்கு சென்று பரிடசையினை நன்றாக செய்தான். பரிட்சை செய்து விட்டு அவன் ஓய்வாக இருக்கவில்லை ஆசிரியரின் அறிவுரைப்படி பிரதேச செயலகத்தில் நடைபெறும் கணணி பயிற்றுவிப்புக்கு சென்றான். நாட்கள் நகர பரிட்சை பெறுபேறும் வந்தது

அந்த பின் தங்கிய பாடசாலையில் பதின்மூன்று பேர் சித்தியெய்து இருந்தார்கள் ராமு எல்லா பாடங்களாலும் சிறந்த பெறுபேற்றை பெற்று முதலிடத்தில் நின்றான். உயர் பெறுபேற்றை பெற்ற மாணவர்களை பாடசாலை வாழ்த்தி ஆசிர்வதித்தது. பொன்னி தனது மகனை நினைத்து ஆனந்தம் அடைந்தாள் தன் கணவன் அருகில் இல்லையே என்று வேதனைப்பட்டாள் தனது மகனை இதற்கு மேல் எப்படி படிப்பிப்பது என்று நினைத்து கண்ணீர் விட்டாள்.

திக்கற்றவனுக்கு தெய்வமே துணை என்பது போல பாடசாலை ஆசிரியர் ஒருவர் மூலம் அவனுக்கு படிக்க ஒரு இல்லம் ஏற்பாடு செய்து கொடுத்தார் அங்கு தனது உயர் கல்வியினை தொடர்ந்தான். காலம் கரைந்து ராமு உயர் தர பரிட்சை எழுதினான். விஞ்ஞான பிரிவில் கல்வி பயின்ற ராமு சிறந்த பெறுபேற்றை பெற்றான் அவனுக்கு பல்கலைகழக தெரிவு கிடைத்தது.

அவன் பல்கலைகழகம் சென்றான் தனது படிப்பிற்கு நிறைய செலவாகுகின்றது என்பதை உணர்ந்த ராமுக்கு ஒரு விளம்பரம் கிடைத்தது கணணி நிலையம் ஒன்றில் பயிற்று விப்பு ஆசிரியர் தேவை என்ற அந்த நிலையத்திற்கு நேர்முக தேர்விற்கு சென்று தெரிவாகினான் மாலை நேரத்தில் அங்கு சென்று வகுப்புகள் கொடுத்தான். அது போதாது என்று வெதுப்பகம் ஒன்றில் வேலைக்கு சேர்ந்தான் பகலில் படிப்பு மாலையில் வகுப்பு இரவில் வெதுப்பகத்தில் வேலை என்று தனது படிப்பை தொடர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொக் டொக்" சத்தம் காதில் விழுந்தது உள்ளே வரலாமா? வெளியே ஒரு பெண்ணின் குரல் யெஸ் கமீன் என்று குரல் கொடுக்க உள்ளே வந்த அவள் டொக்டர் உங்களை பார்ப்பதற்கு ஒரு வயது போன ஐயா வந்து இருக்கிறார் என்றாள் சரி வரச்சொல் என்றவன். தனது கடந்த காலத்தை விட்டு வெளியே வந்தான் ராமுவா? இது மதிக்க முடியலடா மோனே என்றார் ராமுவேதான் அந்த டொக்டர். வந்தவர் வேற யாரும் இல்லை ராமுவின் அம்மா வேலை பார்த்த முதலாளி

ராமு அவரை அழைத்து கொண்டு தனது வீட்டை நோக்கி நகர்ந்தான் அது வீடு இல்லை அரண்மனை அங்கு நிற்பவன் வேலைகாரி இல்லை எஜமானி பொன்னி அடையாளம் கண்டவளாய் ஐயா என்றாள் அவர் கண்ணீர் சிந்தினார் தனது மகன் தன்னை கைவிட்டாதாக சொல்லி கண்ணீர் சிந்தினார்.

ராமு அவரை தேற்றி நீங்கள் எங்களோடயே இருங்கள் என்று ஆறுதல் சொன்னான். ராமு படித்து பட்டம் பெற்று இன்று உலகமே பேசும் வைத்தியராக மாறி இருந்தான். ஏழைக்கு உதவி செய்து தனது நிலைமை யாருக்கும் வரக்கூடாது என்று உதவி செய்யும் நல்ல உள்ளம் அவனுக்கு வாழ்க அவனது பணி

- நன்றி -

ந.தமயந்தி
விஞ்ஞானப்பீடம் கிழக்கு பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞர் அபிவிருத்திக்கு ஊடகங்களினால் ஏற்படும் தாக்கங்கள்

உலகில் இடம்பெறும் பல்வேறு நிகழ்வுகளை செய்திகளை அறிவிப்புக்களை ஆணைகளை எச்சரிக்கைகளை வானொலி தொலைக்காட்சி இணையத்தளங்கள் திரைப்படங்கள் பத்திரிக்கைகள் அச்சு வடிவங்கள் கடிதங்கள் போன்ற பல ஊடகங்கள் இருக்கின்றன. இதன் வளர்ச்சி மேலும் மேன்மையடைந்து கொண்டு வருவதனைக் காணலாம்.



"யாதும் ஊரே யாவரும் கேளீர்.." என்ற முது மொழிக்கு இணங்க பல இடங்களுக்குச் சென்றும் பல இடங்களைப்பற்றித் தெரிந்தும் அறிந்தும் வாழ்வதே திறனுடையதும் வளர்ச்சியுடையதுமான வாழ்வாகும் என்ற சிந்தனையை வழங்குவதோடு அப்படியே வாழவேண்டும் என்றும் வலியுறுத்துகிறது. இதற்கு ஊடகங்களின் தேவை கட்டாயமானது என்பதை அறிவுறுத்துகிறது. ஆரம்பகாலங்களில் பறையடித்து அறிவித்தலும் சொற்பொழிவுகள் மூலம் விளக்கங்களும் புறா வழி செய்தி அனுப்புவதும் நாடகங்கள் வழி தகவல்களை வெளிப்படுத்துவதும் ஊடகங்களாக அமைந்தன. ஆனால் இன்றைக்கு அவை அறிவியலால் விரைவாக வளர்ச்சி பெற்று உலகமே ஒரு வீட்டிற்குள் கொண்டுவரப்பட்டு விட்டது.

" ஒருமுறை சொன்னானாம் மன்னன் ஓயாது அடித்தானாம்பறையன்" என்ற பழமொழியானது அக்காலத்தின் ஊடகத்தன்மையை விளக்குகின்றது. மன்னன் ஒரு முறை சொன்ன செய்தியை ஊரூராய் தெருத்தெருவாய் பறையன் பறையடித்து அறிவிப்பான் இது இக்காலத்திற்கும் பொருந்துகின்றது இன்றைய தொலைக்காட்சிகளில் செய்திகளை மட்டும் சொல்லும் தொலைக்காட்சியில் பார்த்தால் இந்த உண்மையை அறியலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை சொல்லப்பட்டசெய்தி ஒரு நாள் முழுக்க மீண்டும் இங்கு சொல்லப்படுவது இன்றைய யதார்த்த நிலையாகிவிட்டது பார்க்காதவர் அப்போது அச்செய்தியை பார்க்கும்போது அவருக்கு அது புதிய செய்தி எனவே ஊடகங்கள் ஒன்றை மீண்டும் மீண்டும் சொல்ல கடமைப்பட்டவை என்பதை இப்பழமொழி உணர்த்துகிறது.



நவீன ஊடகங்களின் வளர்ச்சி வளர்ந்து வரும் இளைஞர்கள் மத்தியில் எல்லோரும் விரும்ப த்தக்க ஒரு விடயமாக உள்ளது. நவீன திரைப்படம் இளைஞர்கள் விரும்பி பார்க்கும் ஒரு ஊடகமாகும் இதனூடாக பல்வேறுபட்ட நடிப்புக்கள் கதாபாத்திரங்கள் நற்கருத்துக்கள் கதை இயக்கம் இசை போன்ற விடயங்கள் இளைஞர்களுக்கு கலை உணர்வையும், ஊக்குவிப்புக்களையும் வழங்குகின்றது.

அந்த வகையில் பத்திரிகைத் துறையும் இளஞ் சமுதாயத்தினருக்கு பல்வேறுபட்ட செய்திகளையும் தகவல்களையும் நிறப்படங்களுடன் கவரும் வகையில் பிரசுரிக்கின்றன வார இதழில் வெளியாகும் கவிதைகள் கட்டுரைகள் தத்துவங்கள் போன்ற பல விடயங்கள் இலக்கிய உணர்வையும் வாசிப்புத் திறனையும் ஏற்படுத்துகின்றது. அத்தோடு வேலை தேடும் இளைஞர்கள் மற்றும் அனைவரும் பத்திரிகை வாசிப்பதனால் அதில் பிரசுரிக்கப்படும் வேலைவாய்ப்புகளில் தனக்குப் பொருத்தமான வேலைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் வசதியாக உள்ளது.

அடுத்து தொலைக்காட்சியில் பல்வேறு நன்மை தரும் நிகழ்வுகளை ஒலிபரப்பப்படுகின்றன. அந்த வகையில் பல்வேறு நாடுகளில் இடம்பெறும் நிகழ்வுகளை பார்க்கவும் அறிந்து கொள்ளவும் முடிகின்றது இதில் பொது அறிவை வளர்க்கும் விடயங்கள் ஒலிபரப்பப்படுகின்றது. உதாரணமாக : "பஞ்சதந்திரம் மகா இலட்சாதிபதி." போன்ற நிகழ்வுகளின் மூலம் இளைஞர்கள் மட்டுமல்லாது அனைவரும் அறிவை வளர்ப்பது மட்டுமல்லாது ஊக்குவிப்பும் கிடைக்கின்றது தாங்கள் விரும்பும் எந்த கலையில் ஊக்குவிப்பு தேவையானலும் தொலைக்காட்சி அந்த கலையை வளர்த்துக் கொள்ள ஒரு உந்து சக்தியாகத் திகழ்கின்றது. அதாவது இசை நடனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பம் கட்டடம் அழகுக்கலை ஓவியம் போன்றவை எதுவாயினும் அது சார்ந்த படைப்புக்கள் ஒலிபரப்பப்படுகின்றது அதுபோன்று இதிகாசபுராண கதைகளையும் கருத்துக்களையும் இந்த இளைஞ் சமுதாயத்தினர் அறிந்து கொள்ளவும் முடிகின்றது இதற்குச் சான்றாக மகாபாரதம், இராமாயணம் போன்ற தொடர் நாடகங்கள் ஒலிபரப்பப்படுவதைக் குறிப்பிடலாம்.

அதுமட்டுமல்லாது தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்படும் சாதாரண தர மற்றும் உயர் தர மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் இளஞ் சமுதாயத்தினருக்கு கல்வியில் சிறந்து விளங்க தூண்டுகோலாக உள்ளது அதேபோல் மற்றுமொரு ஊடகமான வானொலியில் இளஞ்சமுதாயத்தினருக்கு ஏற்ற பல்வேறு நல்ல விடயங்களை ஒலிபரப்புகின்றன அதாவது குறு வினா விடைப் போட்டிகள் குறுந்தகவல்கள் போன்றன இதில் செய்திகளையும் தகவல்களையும் உடனுக்குடன் ஒலிபரப்புகின்றது மற்றும் வானொலியில் ஒலிபரப்பப்படும் வேலை வாய்ப்பு தொடர்பான விளம்பரங்களின் மூலம் வேலை தேடிக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு ஊக்குவிப்பு வேலைகளும் கிடைக்கப்பெறுகின்றமை இதனுடைய சிறப்பைக் காட்டுகின்றது.

இளைஞர்களை மிகவும் கவரும் மற்றும் ஒரு ஊடகமாக இணையத்தளம் விளங்குகின்றது ஏனெனில் மனதைக் கவரும் வகையில் நிகழ்வுகளையும் செய்திகளையும் படம் மூலமாகவோ. ஒலிப்பதிவுமூலமாகவோ வெளியிடுகிறது. அத்துடன் எந்த ஒரு விடயத்தைப்பற்றி அறிய வேண்டுமானாலும் உடனுக்குடன் அறிந்து கொள்வதோடு அதனை பதிவு செய்து கொள்ளவும் முடிகின்றது.



இன்றைய இளைஞர்கள் எதைப்பற்றி அறியாமல் இருந்தாலும் இணையத்தளத்தை அறியாமலோ அல்லது பயன்படுத்தாமலோ இருக்க முடியாது என்று சொல்லுகின்ற வகையில் இளைஞர்களுக்கும் இணையத்தளத்திற்கும் இடையிலுள்ள தொடர்பாகும் நூலகம் சென்று தேவையான நூல்களை தேடிப்படிக்கத் தேவையேற்படாது. எந்த ஒரு புத்தகம் தேவையானலும் வீட்டிலிருந்தபடியே இணையத்தளத்தில் வாசிக்க முடியும. மேலும் இதன் மூலம் மின்சாரம் தொலை பேசி போன்ற பல கட்டணங்களையும் வீட்டில் இருந்தபடியே செலுத்த முடியும் இதனால் நேரமானது மீதப்படுத்தப்படுகின்றது என்பவையே இவர்களைக் கவரக் காரணம் எனக் கூறினால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போன்று முகப்புத்தகம் இளைஞர்கள் மத்தில் பெரும் வரவேற்பைப் பெற்று திகழும் ஒரு விடயமாக உள்ளது இதன் மூலம் அருகில் இருப்பவர்கள் மட்டுமல்லாது தொலைவில் இருப்பவர்களுடன் நட்பை ஏற்படுத்த முடியும் முகப்புத்தகம் மூலம் தனக்கும் பிடித்த நண்பர்களை மட்டுமல்ல காதலரையும் தேடுகின்றனர். இதில் புகைப்படங்கள் மற்றும் கவரும் வகையிலான சொற்றொடர்கள் கவிதைகள் தகவல்கள் செய்திகள் என்பன இளைஞர்கள் இதனை விரும்புவதற்கு ஏற்றதாக உள்ளது.

இளைஞர்கள் மத்தியில் உலவும் மற்றுமொரு ஊடக சாதனம் கணினி ஆகும் கணினி நாம் கொடுக்கும் தரவிற்கேற்ப பக்கம் சாராது முடிவைத்தரும் அத்துடன் தகவல்களை விரைவாகவும் விளக்கமாகவும் பெறக்கூடிய ஒரு சாதனமாகும். மேலும் எமக்கு தேவையான முக்கிய விடயங்களை சேமித்து வைக்கவும் தேவை ஏற்படும் போது பார்வையிடவும் ஏற்படும் ஏற்ற ஊடகமாகவும். கையில் கொண்டு செல்வதற்கு ஏற்றதாக கணினி உள்ளதனால் மின்னஞ்சல் மூலம் ஒரு செய்தியை அல்லது தகவல்களை எத்தனை நபருக்கு வேண்டுமானலும் ஒரே நேரத்தில் பகிர்ந்து கொள்ளவும் முடியும் என்பதனால் இளைஞர்கள் இதனைப் பெரிதும் விரும்புகின்றனர் எனலாம்.



இளைஞர்களை கவரும் வகையிலும் விரும்பத்தக்க வகையிலும். குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அமையப் பெற்ற ஒரு நவீன ஊடகசாதனமே கைத்தொலைபேசி ஆகும். இதில் மற்றைய ஊடக சாதனங்களில் உள்ள அனேகமான வசதிகள் இதில் உள்ளமையே இதன் சிறப்பம்சமாகும். உதாரணமாக மின்னஞ்சல் தகவல் பரிமாற்றம் போன்றவற்றைக் குறிப்பிடலாம் ஏனைய சில ஊடகங்கள் இதில் உள்ளடக்கப்பட்டு உள்ளதையும் காணலாம்வானொலி இணையத்தளம் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம். தொலைபேசியில் செய்திகளை உடனுக்குடன் அனுப்பவும் பெற்றுக் கொள்ளவும் முடியும் இதில் உள் நாட்டவர்களோடு மட்டுமல்லாது வெளிநாடுகளில் உள்ளவர்களோடும் குறைந்த கட்டணத்தில் நேரடியாக முகம் பார்த்து உரையாடவும் வசதி உள்ளது புகைப்படங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் தன்னைத்தானே எடுத்துக் கொள்ளவும் ஏற்ற வசதியினை கொண்டமையப் பெற்றுள்ளது இதில் உரையாடுவது மட்டுமல்லாது பாடங்களை கேட்டும் பார்த்தும் ரசிக்க முடியும்.

வளர்ந்து வரும் இளஞ்சமுதாயத்தினருக்கு நவீன ஊடகங்களினால் மேலே குறிப்பிட்டவாறு பல்வேறு நன்மைகள் கிடைக்கப் பெற்றாலும் இதற்கு மாறாக இதனால் பல தீமைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுவதைக் காணலாம் "மின்னுவது எல்லாம் பொன் அல்ல." எம் கண்களுக்கு கவர்ச்சியான ஊடகம் என்பது நவீன உலகில் கவர்ச்சிமிக்கதாக அமையப்பெற்றுள்ளது.

அந்த வகையில் நவீன திரைப்படங்கள் அநேகமாக இளஞர்களை கவரும் வகையில் உள்ளதனால் அதை விரும்பி ரசித்துப் பார்க்கின்றனர். இதில் இடம்பெறும் மது அருந்துதல் மற்றும் புகைப்பிடித்தல் போன்ற காட்சிகளினால் இளைஞர்கள் அப்பழக்கத்திற்கு ஆளாக தூண்டுகின்றது இதில் வரும் கதாநாயகிகன் அரைகுறையான ஆடையுடன் தோன்றும் காட்சிகள் மற்றும் உணர்ச்சி மிக்க காதல் காட்சிகள் என்பன தாங்களும் திரைப்படத்தில் இடம்பெறும் கதாநாயகி போலவோ கதாநாயகர் போலவோ நடந்து கொள்கின்றனர் இதனால் இளைஞர்களின் ஒழுக்கம் சீரழிந்து வருவதனைக் காணலாம்.

அத்துடன் தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளை இளைஞர்கள் அதிக நேரம் பார்வையிடுவதனால் கண் மட்டும் அல்ல அதோடு சேர்ந்து அவர்களுடைய உள்ளமும் பழுதடைவதையும் காணலாம். இளைஞர்கள் தங்களது பொழுதுபோக்கை பயனுள்ளதாக அமைக்காமல் பயனற்ற முறையில் பொழுதைக் கழிக்கின்றனர். தொலைக்காட்சியின் வருகைக்கு முன்னர் இளைஞர்கள் தங்களது பொழுதுபோக்கை பயன்தரும் வகையில் அமைத்தனர் அதாவது வீட்டுத்தோட்டம் அமைத்தல் பூந்தோட்டம் அமைத்தல் போன்ற பல செயற்பாடுகளில் ஈடுபட்டனர் ஆனால் இன்றைய இளைஞர்கள் பொழுதுபோக்கிற்காகவே தொலைக்காட்சி பார்க்கின்றனர். தொலைக்காட்சி பார்த்துக் கொண்டு கற்றல் உணவருந்துதல் சமைத்தல் போன்ற செயற்பாடுகளை செய்கின்றனர் இதனால் நேர்த்தியாக செய்வதில்லை சோம்பேறித்தனம் உள்ளவர்களாக மாறிவிட்டனர்.

இணையத்தளம் என்பது ஏனைய பிரதேசங்களில் இருந்தும் பிற நாடுகளில் இருந்தும் செய்திகளையும் தகவல்களையும் தாமதம் இன்றியும் விரைவாகவும் உடனுக்குடன் கிடைக்கக்கூடிய வகையில் செயற்படும் ஓர் ஊடக சாதனமாகும் ஆனாலும் சில சந்தர்ப்பங்களில் சில விடயங்களின் தகுந்த ஆதாரங்கள் இன்றி தவறான தகவல்கள் வெளிப்படுவதனால் இளைஞர்கள் மத்தியில் சாதிப்பாகுபாடு ஒற்றுமை இன்மை இருந்து கொண்டு வருவதனைக் காணலாம். பிற மதத்து இளைஞர்களோடு பரஸ்பர உறவை தொடர்ச்சியாக வைத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. இணையத்தளம் தன்னடக்கத்தோடு சில சமயங்களில் கடமையாற்றுவது இல்லை. சில சமயம் சமுதாயப் பொறுப்போடு நேர்மையின் பக்கம் நின்று தவறுகளை கண்டிக்கத் தவறுகின்றது. எந்த விதமான ஆதாரமும் இல்லாமல் செய்திகளை வெளியிடுகின்றது. இணையத்தின் இவ்வாறான செயற்பாடுகளினால் இளைஞர்களின் எதிர்காலம் பாதிப்படைவதைக் காணலாம்.தொலைபேசியை பயன்படுத்தாத மற்றும் விரும்பாத இளைஞர்கள் இல்லை எனலாம். ஏனெனில் மிக குறைந்த விலையில் இதை வாங்கலாம் என்பதனாலும் ஆகும். இன்றைய இளைஞர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் செல்வது அரிதாகவே உள்ளது. "வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்" என்னும் கூற்றிலிருந்து நூல்களை வாசிப்பதனால் வாசிப்புத்திறனும் அறிவும் வளரும். எனும் கருத்தை எடுத்தியம்புகிறது. நூலகத்தில் பல வகையான நூல்கள் இருப்பதனால் அதை வாசிப்பது பல அறிவுபூர்வமான விடயங்களை அறிந்து கொள்ளலாம். அதாவது தேடிப்படித்தால்தான் நிலையான அறிவு பூரணமாக கிடைக்கும். ஆனால் அதை இளைஞர்கள் செய்வதில்லை. தொலைபேசியில் அதிக நேரத்தை செலவிடுகின்றனர். அத்துடன் தொலைதூரத்தில் இருப்பவர்களோடு மிக குறைந்த கட்டணத்தில் உரையாட முடியும் என்பதனால் இளைஞர்கள் புதுப்புது உறவுகளை தேடுகின்றனர். ஆதலால் தங்களது குடும்பத்தவர்களோடும் உறவினர்களோடும் பரஸ்பர உறவை பேணுவதில்லை.



முகப்புத்தகம் மூலம் புதிய நண்பர்களை தேடுகின்றனர். "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பைத்தரும்"- எனும் குறளானது இன்பமான வாழ்க்கைக்கு காரணமாக இருக்கும் தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தைக் கொடுக்கும். எனும் கருத்தை உணர்த்துகிறது. இதைப்போல முகப்புத்தகத்தில்

அறிமுகமாகும் நண்பர்களின் உண்மையான உள்ளத்தை அறியாது பழகுவதனால் இளைஞர்களுக்கு ஆபத்தையே தரும் அவர்களது ஒழுக்கம் சீரழிக்கப்படும் "நிறை நீர நீரவர் கேண்மை பிறைமதிப்பின் நீர பேதையர் நட்பு"- எனும் திருக்குறளிலிருந்து திருவள்ளுவர் அறிவுடையவரின் நட்பு பிறை நிறைந்து வளர்தல் போன்ற தன்மையுடையன அறிவிலாரின் நட்பு முழுமதி தேய்ந்து பின் செல்லும் தன்மையுடையன அதாவது அறிவான நண்பர்களோடு சேரும் போதுதான் நமது அறிவும் வளரும் அறிவில்லாதவர்களோடு சேரும்போது சிந்திக்காது செயற்படுவர் எனக் கூறுகிறார் மறறும் இதில் பார்க்கின்ற புகைப்படங்களை தவறான முறையில் பயன்படுத்துவதால் ஒழுக்கம் என்பது முற்றாக சீரழிக்கப்படுகிறது திருமணம் என்பது எம் ஆயுள் முடியும்வரை நாம் வாழப்போகும் வாழ்க்கை புகைப்படத்தினை பார்த்து முற்றிலும் அழகிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர் இப்படியான செயற்பாடுகளினால்தான் அநேகமாக காதல் திருமணம் செய்தவர்கள் நீதிமன்றங்களில் விடுதலைப் பத்திரம் கேட்டு நிற்கின்றனர் அதேபோல் திருமணமானவரைக்கூட பொழுதுபோக்கிற்காக காதலிக்கின்றனர் இதனை திருவள்ளுவர் பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றார். "பகை பாவம் அச்சம் பழியென நான்கும் இகவாவாம் இல்இறப்பான் கண்"- பகை பாவம், அச்சம், பழி என்னும் இந்நான்கு குற்றங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் மனைவியை நெறி தவறி நடப்பவனிலிருந்து நீங்காது எனக் கூறுகிறார். இதனை நன்கு தெரிந்திருந்தும் கண்மூடித்தனமாக செயற்படுகின்றனர்.

இளைஞர்கள் கணினியில் கவர்ச்சியான முறையில் அமைக்கப்பெற்ற விளையாட்டுக்களை விளையாட அதிக நேரத்தை செலவிடுகின்றனர். இதனால் அவர்கள் சோம்பேறித்தனம் உள்ளவர்களாக மாறி வருவதனைக் காணலாம்.

நவீன ஊடகங்களினால் இளைஞர்களுக்கு பல நன்மைகள் கிடைக்கப் பெற்றாலும் இதனால் விளைந்த சீர்கேடுகளும் அதிகம். எனவே இதனை மாற்ற ஊடகங்கள் மெல்ல மெல்ல செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். "கரைப்பான் கரைத்தால் கல்லும் கரையும்" எனும் பழமொழியின் ஊடாக இதனை அறியலாம். ஊடகங்களில் எது வந்தாலும் அது சமுதாயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். காரணம் ஊடகங்கள் பலராலும் பார்க்கப்படுகின்றன. எனவே ஊடகங்கள் சமுதாயப் பொறுப்போடு நேர்மையின் பக்கம் நின்று தவறை கண்டிக்க வேண்டும். சமுதாயம் தூய்மையடைய வேண்டும் மாறாக ஊடகங்கள் மக்கள் கெடவும் சமுதாயம் மாசடையவும் காரணமானால் அது மிகவும் கேவலமானது.

"வெளுத்த தெல்லாம் பாலல்ல" வெண்மையாக இருப்பதெல்லாம் பால் அல்ல அது போலவே கவர்ச்சியான எதுவும் எமக்கு நன்மை தருவதாக அமையாது. அது போல ஒழுக்கம் என்பது நவீன ஊடகங்களின் வருகையின் பின் இளைஞர்கள் மத்தியில் மறைந்து கொண்டிருக்கும் ஒரு விடயமாகும். ஒழுக்கம் பற்றி திருவள்ளுவர் பின்வருமாறு கூறியுள்ளார். "ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" எமக்கு ஒழுக்கமே மேன்மையைத் தருவதாகவும் சிறந்ததாகவும் போற்றப்படுகின்றது. ஆகவே இளைஞர்கள் உயிருக்கு நிகராக ஒழுக்கத்தை மனதில் கொண்டு நடக்க வேண்டும். பாலையும் தண்ணீரையும் கலந்து வைத்தால் அன்னமானது

பாலை வேறாக பிரித்தெடுத்து அருந்துகிறது. அதைப்போல இளைஞர்களும் ஊடகங்களில் கிடைக்கப்பெறும் தீமையான விடயங்களை விட்டு விட்டு நல்ல விடயங்களை மட்டும் பொருட்படுத்தி செயற்பட்டால் வாழ்க்கையை வெற்றிகரமாகவும் நிரந்தரமான இன்பத்தோடும் வாழலாம்.




நன்றி

**கந்தசாமி நிறோஜினி**
பழைய மாணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆங்கில மன்றம்



சுகாதாரக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர்பாடுகளும் இடைவிலகலும்

**எமது** நாட்டினைப் பொறுத்தவரை பிள்ளைகளுக்கான கட்டாயக் கல்வியின் வயதெல்லையாக 5 – 16 எனக் கணிக்கப்பட்டிருந்தது. அது தற்போது 5 – 18 ஆக மாற்றமடைந்துள்ளது. இவ்வயதெல்லைக் காலப்பகுதியில் தமது கற்றல் நடவடிக்கைகளை பாரியளவிலான பிரச்சனைகளின்றி கற்பதற்கான உரிமை மாணவர்களுக்கு உண்டு.

ஆனால் எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை மாணவர்கள் கல்வி கற்பதில் பல இடையூறுகளைச் சந்திக்க வேண்டி ஏற்படுகிறது. இதனால் ஏற்படும் மாணவர் இடைவிலகல் என்பது மாணவர்களுக்கு மட்டுமன்றி பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள், பெற்றோர்கள் என அனைவரையுமே இது கவலை கொள்ள வைக்கும் ஒரு விடயமாகக் காணப்படுகிறது.



இவ்விடயம் தொடர்பாக இவர்கள் அனைவருமே பல கோணங்களில் சிந்தித்து இடைவிலகலைக் குறைப்பதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் முழுமையாகத் திருப்திகரமான ஒரு தீர்வினைப் பெறமுடியாமலே உள்ளது. இந்நிலைமை இவ்வாறிருப்பதற்கு இப்பிரதேச ஆசிரியை என்ற வகையில் நான் சில காரணங்களை முன் மொழிகின்றேன். அதாவது தனிப்பட்ட ரீதியில் எனது பாடசாலையை ஆதாரமாகக் கொண்டே இவ்விடயங்களை ஆராய முனைகின்றேன். இருந்தும் இவ்விடயங்களை இப்பிரதேசத்தின் பெரும்பாலான பாடசாலைகளுக்கும் பொருந்தும் என நினைக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1.வரவு ஒழுங்கீனம்**

இவ்விடயமே மாணவர் இடைவிலகலின் மூல காரணமாகவுள்ளது. வரவு ஒழுங்கீனம் எனும் போது இதில் பல விடயங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன எமது பாடசாலையைப் பொறுத்தவரை பாவற்கொடிச்சேனை இருநூறுவில், கரவெட்டியாறு, சிப்பிமடு, ஊத்துமடு, பழங்குடியிருப்பு மடு, பத்தரைக்கட்டை, மாவிலங்கண்டடிச்சேனை ஆகிய பன்னிரண்டு கிராமங்களில் இருந்து மாணவர்கள் வருகை தருகின்றனர் இவற்றில் கற்பக்கேணி, நெடுஞ்சேனை, பத்தரைக்கட்டை, கரவெட்டியாறு, சிப்பிமடு ஆகிய இடங்களைச் சேர்ந்த மாணவர்களே பெருபாலும் இடைவிலகலில் உள்ளனர். இக்கிராமங்கள் எமது பாடசாலையில் இருந்து சுமார் 7Km க்கு அப்பாலேயே உள்ளது அங்கிருந்து பாடசாலைக்கு வருவதற்கென சீரான நேரான பாதைகளும் இல்லாத நிலையில் காடும் மேடும் கடந்து கால்நடையாக பல மாணவர்கள் வருகின்றனர் எமது பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களின் முயற்சியினால் பல மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற போதும் அவற்றை ஓரிரு வருடங்கள் மட்டுமே பயன்படுத்தக்கூடிய பாதைகளின் நிலைமைகள் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் கொடுக்க முடியாத நிலைமை என்பன காணப்படுகின்றன. இந்நிலையில் காடும் மேடும் நடந்து கால் வலி, உடல் வலி மனவலியுடன் கல்வி கற்பதற்கு எப்படி இவர்களால் தொடர்ச்சியாக வரமுடியும்?

**2. கல்வியின் முக்கியத்துவம் உணராத பெற்றோர் சமூகம்**

படிப்பறிவு அற்ற படுவான்கரைப் பெற்றோர் எனும் நிலைமை தற்போது மாற்றமடைந்து வருகின்ற போதும் இன்னும் கல்வியின் முக்கியத்துவம், மகத்துவம், தார்ப்பரியம் விளங்காத பெற்றோர்களும் எம்மத்தியில் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள் "எனக்கு இருக்கும் ஆயிரம் தொல்லைக்குள் பிள்ளையின் படிப்பை எப்படிக்கவனிப்பது ஏதோ பாடசாலைக்கு போகிறான் வருகிறான் இப்படியே க.பொ.த சா/ தரம் வரைப் படித்தால் போதும் எனும் மன நிலையில் உள்ள பெற்றோரும் மாணவர்களின் கற்றல் இடர்பாட்டிற்கு காரணமாகின்றார்கள். தாம் செல்வங்களாகப் பெற்றெடுத்த பிள்ளைகளைச் சரியான பாதையில் வழிநடத்தப் பெற்றோர் தவறுமிடத்து விளையாடும் வயதில் உள்ள பிள்ளைக்கு விளங்கவா போகிறது கல்வியின் முக்கியத்துவம்? இதனால் விளையாட்டில் சில நாட்கள் பாடசாலையில் ஓரிரு நாட்கள் என நகர்த்துகின்றனர் நாட்களை

**3.குடும்பப்பிரிவுகள் / பிரச்சனைகள்**

பன்னெடு பாரம்பரியங்கள் என்றால் நாம் எடுத்துக்காட்டுவது கிராமங்களைத்தான் ஆனால் இன்று பல காரங்களால் இவை சிதைவடைந்து போய்க்கொண்டிருக்கின்றன நாகரிகவளர்ச்சி, ஆடம்பரவாழ்க்கை, வெளியிடத்தொடர்புகள் அதிகரிப்பு, நவீன சாதனங்களின் பாவனை அதிகரிப்பு போன்ற காரணங்களால் ஏற்படும் பெற்றோர் பிரிவு, வெளிநாடு செல்லல், மறுமணம் போன்ற பாதகமான விளைவுகள் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை மட்டுமல்ல அவர்களது எதிர்காலத்தையே பாழாக்கி விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பல அசௌகரியங்களையும் மனக் குழப்பங்களையும் கொண்ட பிள்ளை தரம் 1 - 5 வரையான வகுப்புக்களில் ஏதோ ஒருவரின் கட்டாயத்தின் பேரில் பாடசாலைக்கு போய்த்தான் ஆகவேண்டும் எனும் நிலையில் வாரத்தில் ஓரிரு நாட்கள் வருடத்தில் இருபது, முப்பது நாட்கள் எனக்காலத்தைக் கடத்தும் போது அவர்களால் பூரணமாக எதையும் கற்கமுடியாத நிலை காணப்படுகின்றது. எவ்வளவு முயற்சி செய்தும் ஆசிரியர்களால் அவர்களுக்கு கற்பிக்கவும் முடியாது



இப்படியே பூரணமாக எதையும் எழுதவோ வாசிக்கவோ முடியாமல் தமது ஆரம்பக்கல்வியை முடிக்கும் மாணவர்கள் இடைநிலைக்கல்விக்குள் நுழையும் போது பெரும் சவாலை எதிர்நோக்குகின்றனர். ஆரம்பக்கல்வியில் ஒரு ஆசிரியரின் பார்வையின் கீழ் கற்றுக்கொண்டிருந்தவர்கள் இப்போது ஒரே நாளில் பல முகங்கள், பல பாடங்கள், பல வேறுபாடுகள் இவற்றைச் சமாளிக்க முடியாமல் திணறுகிறார்கள். இப்படியாக சில நாட்களைக் கடத்திவிட்டு எதுவுமே செய்ய முடியாத நிலையில் தரம் 6, 7, 8 வகுப்புக்களில் இடைவிலகலில் நின்று விடுகின்றனர். மாணவர் தினவரவு இடாப்புக்களை நோக்கும் போது இதன் உண்மைத்தன்மை புரியும்.

இந்நிலைமைகளையும் கடந்து யாரோ ஒருவரின் கட்டாயம், கரிசனையினால் ஓரளவு தப்பியொட்டி தரம் - 10 வரை வரும் சில மாணவர்கள் தாம் அடுத்ததாக எதிர்கொள்ளப்போகும் க.பொ.த சா/தரப் பொதுப்பரீட்சையில் எவ்வித பெறுபேறுகளையும் பெறமாட்டோம் என்பதை தாமாகவே உணர்ந்து கொள்கின்றார்கள் இந்நிலையில் தரம்- 10, 11 இல் இடைவிலகல் ஏற்படுகிறது.

இவ்வாறே பலரின் முயற்சியின் பயனால் க.பொ.த சா /தரம் வரை சித்தியடையும் மாணவர்கள் அடுத்தகட்ட நகர்வின் போது பல பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர் தமது கல்விப்பாதையில் முதற்படியைத் தாண்டி விட்ட மாணவர்களும் மேற்கொண்டு தமது கல்வியைத் தொடர்வதற்கு முடியாமல் பல காரணங்கள் தடை போடுகின்றன.

தமது கிராமத்திலோ அல்லது அண்மைப் பாடசாலைகளிலோ உறவினர் வீடுகளிலோ தங்கிக் கற்கும் வாய்ப்பும் வசதியும் அனைத்து மாணவர்களுக்கும் கிடைக்க முடியாமையும் அவ்வாறு கிடைத்தாலும் அதில் நிலைத்திருப்பதில் பல பிரச்சனைகள் காணப்படுகின்றன. இதன் காரணமாக உயர்தரத்திலும் இடைவிலகல் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் முடியுமானவரை மேற்காட்டப்பட்ட விடயங்களைக் கொண்டு பார்க்கும் போது சமூக இடையூறுகள் வரவு ஒழுங்கீனம் கற்றல் இடர்பாடுகள் இடைவிலகல் ஆகிய நான்கு விடயங்கள் ஒன்றிணைந்தே மாணவர் கல்வியைச் சீர்குலைக்கின்றன. இவற்றை பெற்றோர் சமூகம் ஆசிரியர் சமூகம் அதிபர்கள் அதிகாரிகள் ஆகிய
நான்கு தூண்களும் இணைந்தே மாணவர்களின் சிறந்த எதிர்காலம் எனும் பலமான வாழ்வைக் கட்டியெழுப்பவேண்டும்.



இத்தனைக்கும் மத்தியில் இடைவிலகல் தொடர்பான இவ்விடயத்தை இன்று எழுதும் நான் எனது பாடசாலைக்கால வாழ்க்கையில் எனது வீட்டுச் சூழல் காரணமாக பல தடவைகளில் இடைவிலகலில் நின்று அப்போது என் குருவாகவும் என்னை வழிப்படுத்தி தெய்வமாகவும் இருந்து இறைபதம் அடைந்து விட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த அமரர். திரு. ஆ. பொன்னுத்துரை ஐயா (எமது பாடசாலை முன்னால் அதிபர்) அவர்கள் மீண்டும் என்னை பாடசாலையில் இணைத்ததன் பொருட்டு கல்வியைத் தொடர்ந்த ஒரு மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது அவரைப்போல் நாமும் எமது மாணவர்களை வழிப்படுத்த வேண்டும். என்னைப்போல் நாளை அவர்களும் எம்மை நினைத்துப் பார்க்கவேண்டும் என்பதையும் இவ்விடத்தில் கூற நிற்கின்றேன்.

என்றும் அன்புடன்

**திருமதி. அ. பிரபாகரன்**

ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**டெங்குவை ஒழிப்போம்**

பெயர் . ப.ருஷா
தரம் - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் கல்விச் சாலையின் ஒளி தீபங்கள்

மீன் பாடும் தேனாட்டில்
விநாயகரின் ஆசிச் செய்தியில்
அறிவு புகட்டி அறப்பணி புரியும்
பாவற் கொடி சேனை விநாயகர் வித்தியாலயத்தில்!

பரம் பொருளின் ஒளி தீபம் போல்
எம் அதிபர் மிளிர................... தட்டிக் கொடுத்து
பல வெற்றி மகுடங்களை
வென்றெடுக்க வித்திடும் – அன்பு
ஆசான்கள் இணையில்லா
சேவைபுரிய................... சிறப்புடன் சகோதரர்கள்
கல்வி பயிலும் விநாயகர் வித்தியாலயத்தில்
நாங்கள் மாணவ மணிதராய் பிறக்க
மாதவம் செய்ய வேண்டுமாம்.............



உங்களுக்கு மாணவராய்
இருக்க– நாம் என்ன புண்ணியம் செய்தோம்.
கற்றுக் கொடுப்பதையே சேவையென்று
உயர் எண்ணம் கொண்ட
ஆசான்களும் அதிபருமே
எம் வாழ்வின் ஒளி தீபங்கள்
கோடான கோடி வணக்கங்களும்
நன்றிகளும் உரித்தாகட்டும்.

பழைய மாணவி
இ.உதயசசிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவர் தலைவர்கள்



சிறந்த சாரணியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிப் பால் உயர்வதறிவு

மனமுவர்ந்த ஆசியுடன்
விநாயகர் வித்தியாலயத்தின்
பாகல் துளிர் மலரின் முதலாம் பதிப்பிற்காக
ஆக்கம் ஒன்று புனைவதற்கு
அதிகாலை எழுந்திருந்தேன்

கவிதை ஒன்றெழுதலாமென கருத்தினில் கொண்டேன்.
கருப் பொருளைத் தேடினேன்
கருப் பொருள் தோன்றாமல் விநாயகனை வேண்டினேன்
கணப்பொழுதில் கவிதை ஒன்று வந்ததுவே

என் தந்தை அறிந்தாரோ எத்தனையோ பொக்கிஷங்கள்
எனக்கு அளித்தாரோ நன்றி என்ற பொக்கிஷங்கள்
அன்றிலிருந்தே ஆழ்மனதில் பதித்து வைத்து
நன்றி உணர்வுடன் வாழ்க்கை பயணத்தை தொடங்கினேன்

புண்ணிய பூமியாம் பாவற்கொடிச் சேனையில் அமைந்த
பாடசாலையில் விநாயகரின் அருளுடன்
பூரண ஆசான்களுக்கு நன்றி

திருமதி ராசையா அஞ்சலினா அவர்களால் உருவாக்கப்பட்ட
ஆண் பெண் பேதமின்றி அரவணைக்கும் வித்தியாலயத்திற்கு
அடியெடுத்து சென்ற என்னை
அன்புக்கரம் நீட்டி இனிய வார்த்தைகள் கூறி
அனைத்தையும் புகட்டிய அதிபர் ஆசிரியர்களும்

திரு. சி. கிஸ்ணகுமார்
பழைய மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடக் கல்லின் மகிமை

கலை கலைக்காக அல்ல அது மக்களுக்காக படைக்கப்பட வேண்டும். என்ற பொன் மொழியை கண்கொண்டு கட்டிக்காத்து கருவூட்டி வளர்த்துக் கொண்டிருக்கும் இன்றைய கலைப்பெரு விழாவின் தலைவர் அவர்களே கலைஞர்களே மற்றும் நீதி நெறி நின்று நடுத்தீர்வு வழங்க வந்திருக்கும் நீதியாளர்களே என் சக போட்டியாளர்களே உங்கள் அனைவருக்கும் இன் நேரத்தில் தலைகுனிந்து தாழ்வான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இந்த பெருவிழாவிலே உங்கள் முன்னிலையில் நான் பேச முன்வந்த விடயம் என்னவென்றால் விடக்கல்வியின் மகிமை விடமுண்ட கண்ணாக அன்று விளங்குகின்ற சிவபெருமானுக்கு நிகராக நிலைத்திருந்து மாடாய் உழைத்து மண்ணிலே புரளும் மண்முனை மேற்கு மக்களுக்கு மகிமை அளிப்பதே விடக்கல்லி வெள்ளையன் அன்று விட்டுச் சென்ற மிச்ச சொச்சங்களிலே விடக்கல்லும் ஒன்றாம் கல்லாக அன்று விடுபட்ட பொருள் பொல்லாத புகழ் பெற்று இன்று வல்லோரின் வாயில் வந்து பேச அல்லாவின் அருள் அப்பனாய் சதக்க வாவா அதை நட்டான்.

அப்பனின் அருளால் அதை எடுத்து ஆறு நேரம் அரை உணவும் இன்றி ஆ கொண்ட பாலை அருந்தி அதற்கு உயிர் கொடுத்தான். அவன் இட்ட உயிர் இன்று அனா உயிரும் வரும் பிணங்களுக்கு உயிர் பொடுத்து வருவது அதன் மகிமையாம்.

உழைப்பாய் உயர்ந்து உதிரத்தை வியர்வையாகவும், வியர்வையை நீராகவும் பாச்சி உழவு தொழில் செய்து உயர்வான வாழ்வு பெற ஓயாது உழைக்கும் உத்தம புருஷர்களின் விசக்கடியை மரணப்படியில் இருந்து மீட்பதே விடக்கல்வின் மகிமையாம்.

உயிர்கள் உயிர்களுக்காக கொல்லப்படக்கூடாது. என்ற அறக்கருத்துக்கு இணங்க விசக்கடியால் உண்டு பண்ணுகின்ற உயிர்களும் இறைவனால் படைக்கப்பட்டவைகள். அதனால் இன்று மண்ணிலிருக்கின்ற மனிதர்களும் இறைவனால் படைக்கப்பட்டவர்கள். ஆனால் அநத மரணத்தில் இருந்து மறு வாழ்வு பெற வைப்பதே விடக் கல்லியின் மகிமையாகும்.

மண்ணில் புதைந்திருக்கும் விடக்கல் இன்று மக்களின் மனித்துயரை தீர்த்து மனிதன் கொண்ட விடத்தை தான் உண்டும் மாயாமல் இன்றும் மண்ணில் உயிர் வாழ்வதுவே மகிமையாகும்.

விடத்தை உண்டவன் மருந்துண்ணில் அடுத்த கணம் மாய்வது திண்ணம் ஆனால் நீயோ எத்தனை எத்தனையோ ஜீவராசிகளின் உடல் கொண்ட விடத்தை உண்டும் உனக்கு மருந்தே பன்னீரும், பால் பழமும், சாம்பிறாணியும், பார்க்கின்றபோதே பக்தியும், பரவசமும் ஏற்படுவதே உன் மகிமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும், நாகரிமும், கலையும்,கலாச்சாரமும், தொழிலும், தொழிநுட்பமும் விருத்தியடைகின்ற போது தெய்வ நம்பிக்கைகள் சிதைந்த தர்மம் அழிந்து அதர்மம் தலைவிரித்து தாண்டவமாடுகின்ற போது உன் பெருமையோ, புகழோ, செயலோ திறனோ அன்றிலிருந்து இன்றுவரையும் அல்ல என்றுவரையும் குறையாமல் இருப்பதே உன் மகிமை.

விடத்தல்லிக் மகிமையை விளம்பிடவே நான் இப்போ விசித்துரைத்த நேரம் போதாது எனக்கிப்போ

ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ மானிலத்தே என்று ஔவைப்பாட்டி அன்று வாய் மொழிந்த பொன் மொழிக்கிணங்க இறந்தவர்களை நாங்கள் மீண்டும் ஒருபோதும் எங்கெனும் காணமுடியாது. எனவே விசக்கடியால் அடியார் எவரும் உயிர் துறக்காமல் உன் விடுதலை பெற்று வாழ நாங்கள் ஒருபோதும் உன் மகிமை பெற தவறோம் என்று கூறி எனது இந்த சிறிய பேச்சினை நிறைவு செய்து கொள்கின்றேன்.

நன்றி, வணக்கம்

லெ. அனுஜன்
பல்கலைக்கழக மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்களிப்பு



எமது பாடசாலையானது கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்கில் பாவற்கொடிச்சேனை எனும் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

தற்போது இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்குகின்றார்கள். இதற்கு முக்கிய காரணம் அந்த மாணவர்களின் பெற்றோரும் அசிரியர்களும் ஆகும்.

நாம் ஒரு வகுப்பு மாணவர்களை எடுத்து நோக்குவோமானால் சில பிள்ளைகள் மிக நன்றாகவும் சில பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் இல்லாமலும் அதாவது கல்வி அறிவு போதாமையாகவும் காணப்படுகின்றார்கள் இதற்கு காரணம் பெற்றோர்.

ஏனென்றால் ஒரு வகுப்பு மாணவர்களை ஒரு ஆசிரியர் ஒரே நேரத்தில் கல்வி கற்பிற்கும் போது சில மாணவர்கள் மட்டுமே கல்வி கற்று உரிய விடயத்தை உள்வாங்கி அதிக புள்ளிகள் பெறுகின்றார்கள். சில மாணவர்கள் குறைந்த புள்ளிகள் பெறுகின்றார்கள். இதற்கு யார் காரணம்?

குறைந்த புள்ளிகள் பெறும் மாணவர்களின் பாடசாலைக்கு வரும் நாட்களை நோக்குவோமானால் அவர்கள் குறைவான நாட்கள் மட்டுமே சமூகம் கொடுத்திருக்கின்றார்கள். மாணவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவு குறைவு
இடை விலகல்

ஆகிய இரு காரணங்களினால் மட்டுமே இவர்கள் குறைந்த பெறுபேற்றைப் பெறுகின்றார்கள் இதற்கு காரணம் அவர்களின் பெற்றோர்.

பாடசாலைக்கு சமூகம் கொடுக்காத மாணவர்களை எடுத்து நோக்குவோமானால் பாடசாலைக்கு சமூகம் கொடுக்காததிற்கான காரணம்

- பெற்றோர் அவர்களை வைத்து வேலை வேண்டுதல்.
- தூரம் ( பாடசாலைக்கு வீட்டிற்கும் இடையே நீண்ட தூரம் இருப்பதால் )
- வீட்டின் கஷ்ர நிலை (மாணவர் கூலி வேலைக்கு செல்லல் )
- உரிய பாதுகாவலர் இன்மை ( தாய், தந்தை வெளிநாடு செல்லல் )
- தாய் தந்தை மறு திருமணம் செய்து கொள்ளல்

இது போன்ற காரணங்களால் மாணவர்கள் ஒழுங்காக பாடசாலைக்கு செல்வதில்லை இதனால் இடைவிலகல் போன்ற காரணங்கள் தோன்றுகின்றன. இதைக் கட்டுப்படுத்த அதாவது சீர் செய்ய பெற்றோர்களால் மட்டுமே முடியும் ஒவ்வொரு பெற்றோர்களும் தங்களது பிள்ளைகளை வேலை வாங்குதல், வீட்டில் கஷ்ர நிலை, தூரம் என்பவற்றை

தவிர்த்து எப்படியாவது ஒழுங்காக ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு அனுப்பினால் தங்களது பிள்ளைகள் ஒழுங்காக கல்வி கற்று சிறந்த பெறுபேற்றைப் பெற்று எமது பாடசாலைக்கு மட்டுமல்லாமல் எமது பிரதேசத்திற்கும் பெருமை சேர்ப்பார்கள்.
தங்களது பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லாமல் நின்றால் ஏன் போகவில்லை என்று கேட்டு அதற்கான காரணத்தை அதாவது அவர்களின் பிரச்சனையை தீர்த்து வைத்து முடியாவிட்டால் பாடசாலை அதிபர், ஆசிரியர்களிடம் சென்று பிள்ளை பாடசாலைக்கு வர விரும்பாமைக்கான காரணத்தை கூறி அவர்களின் பிரச்சனையை தீர்த்து அவர்களை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்புவது ஒவ்வொரு பெற்றோரது கடமையாகும். இதன் மூலம் இடை விலகலை தவிர்த்து தங்களது தங்களது பிள்ளை சிறந்த முறையில் கல்வி கற்று நல்ல பெறுபேற்றை பெறும்.
தற்போது அநேகமான பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் சிறந்த பங்களிப்பு செய்கின்றார்கள்.

பிள்ளைகளை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்பி வைக்கின்றார்கள்
பிள்ளைகளின் பிரச்சனையை தீர்த்து வைக்கின்றார்கள்

வீட்டுக் கஷ்டத்தை எதிர் நோக்கி பிள்ளைகளின் போக்கு வரத்துப் பிரச்சனையை தீர்த்து வைக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு ஒழுங்கான போசாக்கு உணவு வழங்குகின்றார்கள்.

பாடசாலையுடன் அதாவது அதிபர், ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு பிள்ளைகளின் கல்வி நிலையை அறிந்து கொள்கின்றார்கள்.

பாடசாலையில் நடைபெறும் ஒன்று கூடல் மற்றும் கருத்தரங்குகளில் கலந்து கொள்கின்றார்கள்.

இது போன்ற செயற்பாடுகளை பெற்றோர் செய்வதால் பிள்ளைகளின் கல்வியை அதிகர்க்க செய்கின்றார்கள். தற்போது இப்பிதேசத்தில் வசிக்கும் பெற்றோர் முன்பள்ளியில் ஆரம்பித்து பல்கலைக்கழகம் வரை பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் உதவி புரிகின்றார்கள் என்பது சந்தோசப்படக் கூடிய ஓர் விடயமாகும்.

இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு பெற்றோரின் பங்களிப்பு முக்கிய காரணம் வகிக்கின்றது. என்பதை எல்லோரும் அறியக்கூடிய ஓர் விடயமாகும்.

இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு பெற்றோரின் பங்களிப்பு முக்கிய காரணம் வகிக்கின்றது. என்பதனை எல்லோரும் அறியக்கூடிய ஓர் விடயமாகும் ஒவ்வொரு பெற்றோரும் முடிந்தவரை தங்களது பிள்ளைகளை மாத்திரமாவது ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்புவதன் மூலம் அனைத்து மாணவர்களும் பாடசாலைக்கு செல்வார்கள். இதன் மூலம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியை அதிகரித்து இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியை அதிகரிக்க செய்யலாம் என்பதே யாவரும் அறிந்த உண்மையாகும்.

யு . சுபாக்ஷினி

பழைய மாணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகளும் எமது பிரதேச மாணவர்களும்....!!

அரிது அரிது மானிடராதல் அரிது எனும் மூதுரை மனிதப்பிறவியின் மேன்மையினை எடுத்தியம்புகின்றது. மனிதன் பலவாழ்க்கை வட்டங்களைக் கடந்தே முழுமனிதன் எனும் பரிநாம வளர்ச்சியின் உச்சத்தை அடைகிறான். குழந்தையாக, பிள்ளையாக சிறுவனாக, வயோதிபனாக எனும் படி நிலைகள் மனித வாழ்க்கையின் முக்கிய கட்டங்களாக உள்ளன. இதில் சிறுவன் எனும் பருவம் மிகவும் பிரதானமான தொரு படி நிலையாக விளங்குகின்றது. இந்நிலையில் தேவைகள் சிறார்களின் உரிமைகளாக பதிவு செய்யப்பட்டு உள்ளமை யாவரும் அறிந்த விடயமே.

இதனடிப்படையில் நோக்கும்போது சிறுவர்களுக்கான உரிமை எவை, எவை ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் பற்றியசம வாயத்தின் கருத்திற்கமைய சிறுவர்கள் என்பது 18 வயதிற்கு உட்பட்ட அனைத்து மனிதப்பிறவிகளும் சிறுவர்கள் என்னும் வரையறைக்குள் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இச்சிறுவர் உரிமைகள் பற்றிய மேற்படி சமயவாயம் 1989ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனை எமது நாடு 1991ம் ஆண்டு ஏற்றுக் கொண்டது. இதனடிப்படையில் சிறுவர்கள் பெறவேண்டிய உரிமைகள் 54 உறுப்புரைக்கான பட்டியலிட்டுள்ள அதே வேளை 42 உறுப்புரைகளை அடிக்கோடிட்டு முக்கியப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக சிறுவர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், ஓய்வு பொழுது போக்கு பாலியல் இம்சை ....... போன்ற துஷ்பிரயோகம் என்பவற்றினை கல்விகற்கும் உரிமையை முதன்மைப்படுத்தி பட்டியலிட்டுள்ளனர்.

இவ்வாறான உரிமைகள் அனைத்தும் சிறார்களுக்கு கட்டாயம் கிடைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்ட போதும் எமது பிரதேச மாணவர்களுக்கு இவை அத்தனையும் மறுக்கப்படாமல் கிடைக்கின்றனவா? என்பதுதான் கேள்விக் குறியாக உள்ளது.

கல்வி அனைத்துச் சிறுவர்களினதும் அடிப்படை உரிமைகளுள் ஒன்றாக முன்வைக்கப்பட்டுள்ளமையினை நோக்கும்போது அது இன்று எப்படிச் சாத்தியமாகின்றது. எமது சிறார்கள் பலர் இன்று கல்வி கற்க வேண்டிய பருவத்தில் பெற்றோர்களாலும் பெரியோர்களாலும் அது மறுக்கப்பட்டு அவர்களின் எதிர்கால கனவுகள் அத்தனையும் கானல் நீராய் போகும் பல சிறார்களை நாம் இன்று காண்கின்றோம். 5 - 14 வயது வரை என்றிருந்த கட்டாயக்கல்வி வயது பின்னர் 5 - 18 வரை என கட்டாயக்கல்வியின் வயது வரையறுக்கப்பட்டபோதும் எத்தனையோ சிறார்கள் எமது பிரதேசத்தில் தொழில் நிலையங்களிலும் இளவயது திருமணங்களிலும் ஈடுபட்டு தமது சிறுவர் உரிமையினை அடைய முடியாதபடி அல்லலுறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றையசிறார்களே நாளைய தலைவர்கள் எனும் கூற்று இன்று எத்தனையோ சிறார்களுக்கு எட்டாக் கனியாக உள்ளமை கண்கூடு கட்டாயக் கல்வி வயதில் உயர் கல்வி கற்கும் தகைமை இருந்தும் இன்று பல சிறார்கள் இளவயதுத் திருமணத்தில் ஈடுபடுவதை நாம் பார்க்கின்றோம். இதற்கு இவர்களின் பெற்றோர்களும் உறவினர்களும் அங்கிகாரம் வழங்குவது அவர்களின் ( சிறுவர்) உரிமைகளை மறுப்பது போன்று உள்ளது. எவ்வளவுதான் கூட்டம் தண்டனைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் எமது பிரதேசங்களில் இதனை ஒழிக்க முடியாமல் உள்ளமை சட்டத்தின் வலுவிளந்த தன்மையினை வெளிச்சமம் போட்டுக் காட்டுகின்றது. வேலியே பயிரை மேய்வது போன்று சட்டத்தை நிலை நாட்ட வேண்டியவர்கள் லஞ்சம் ஊழல் என்பவற்றின் மூலம் அதனைக் கண்டும் காணமல் விடும் போது உரிமைகளை யார் கட்டிக்காப்பது?

இன்றைய சூழலில் எமது பிரதேச மாணவர்கள் பாலியல் இம்சைக்கும், துஷ்ப்பிரயோகத்திற்கும் அதிகமாக உட்பட்டு வருவது அவர்களின் பாலியல் இம்சை இல்லாமை எனும் உரிமை அங்கு குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றது. மேலும் மாணவர்களை போதைப் பொருள் சார்ந்த விடயங்களில் ஈடுபடுத்துகின்றமை" "போதைப் பொருள் துஷ்பிரயோகம்" எனும் உரிமை இல்லாது போகின்றது. இதே போன்று எத்தனையோ மாணவர்கள் இன்று போசாக்கான உணவின்றி ஒரு வயிற்றுச் சோற்றுக்காகஅல்லலுறுவது "சுகாதாரமும் போசூஷாக்கும்" எனும் உரிமை மறுக்கப்படுகின்றது.

இன்று எத்தனையோ சிறார்கள் பெற்றோரைப் பிரிந்து அயலவர்களின் அரவணைப்பில் வளர வேண்டியுள்ளது. அப்போது அவர்களால் சிறார்களுக்கு ஏற்படுத்தப்படும் பல துஷ்பிரயோக விடயங்கள் அவர்களின் பெற்றோர் பொறுப்பு மற்றும் பெற்றோரைப் பிரிதல் ஆகிய உரிமைகளை இவ்வாறான சிறார்கள் இழந்து நிற்கின்றனர்.

இவற்றோடு நின்று விடாது கடத்தப்பட்டு கொலை செய்யப்படும் நிலைமை மாணவர்களின் மனங்களை வெகுவாகப் பாதித்து விடும் ஒரு நிகழ்வாகும். " சமூகப்பாதுகாப்பு" எனும் சிறுவர் உரிமை காணமல்போகின்றது. நிகழ்வு வேறு பிரதேசங்களில் அரங்கேறினாலும் எமது பிரதேசத்து மாணவர்களின் மனங்களில் ஒருவித பயத்தை, அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது இதனால் இவர்களின் மகிழ்ச்சிகரமான உலகம் நீர்க்குமிழிபோல் உடைந்து போகின்றது. இவ்வாறு இன்னோரன்ன பிரச்சனைகளாலும், பாதிப்புக்களாலும் சிறாரல்களின் உரிமைகள் பூரணமாக கிடைப்பதில் எமது பிரதேசமாணவர்கள் இழந்து நிற்கின்றனர்.

இவ்வாறான நிகழ்வுகள், துஷ்பிரயோகங்கள் நடைபெறுவதை தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பல அரச அரச சார்பற்ற அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்ற போதும் அவற்றினை மீறி இன்நிகழ்வுகள் நடந்தேறுகின்ற போது எமது பிரதேச சிறார் அல்லது மாணவர்கள் எங்ஙனம் நாட்டின் தலைவனாக வரமுடியும்..? மாணவர்களில் ஏற்படும் விரக்தியாலும் மன அழுத்தங்களாலும் பாதிப்புற்று சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் பார்வையில் இருந்து விலக்கி வைக்கப்படும் நிலைக்கு உள்ளாகின்றனர். இதன் விளைவாக தற்கொலை முயற்சிகளிலும், தீய செயற்பாடுகளிலும் ஈடுபட்டு தங்களின் வாழ்க்கையினையே அழித்துக் கொள்ளும் எத்தனையோ சிறார்களை இன்று நாம் கண்கூடாகப் காண்கின்றோம்.

"கற்க மறுப்பவன் வாழ மறுக்கின்றான்" எனும் கருத்திற்கு இணங்க மனிதனின் அடிப்படைக் கல்வி இல்லாது போகும் போது அவன் வாழ்க்கையை தொலைத்தவனாக பூரணமற்ற மனிதனாக பொறுமானமற்ற மனிதப் பிறவியாக பார்க்கப்படுவதை இன்று நாம் காண்கின்றோம்.

எனவே சிறுவர்களின் உரிமைகளை இழந்து நிற்கும் அனைத்து சிறார்களுக்கும் அவற்றினை பெற்றுக் கொடுக்க அயராது உழைப்பகது தலையாய கடமையாகும்.

திரு.க.சௌந்தரராஜா

(பிரதி அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Brief History of the School**

Pavatkodichenai is a village that has illustrious long existence and renown. It lies on the western shore of the Batticaloa lagoon, 25 km away from Batticaloa town. The name assigned to the village seems causative as, according to the version of the elders of the village, there had been wide- spread bitter gourd cultivation around that area in the ancient time. The school conveniently found its site by the side of the Vinayagar Temple and earned the prestigious name Vinayagar Vidyalayam.The school originated on 18.01.1954 on the basis of Guru-disciple learning pattern by Late Kathirkama Podi Rasiah who was a philanthropist and great thinker who had foresight and great concern over social welfare and its uplift. The school was founded on the courtyard of his cottage with 20 pupils.

In 1959, the government took over the management of the school, named it "Government Tamil Mixed School, Right–Bank and entrusted the charge to Mr.S.Samithamby .The number on roll was 30.He spearheaded the administrations and teaching alone with great care and much toiling. After 05 years, Mrs .R.Anjalina was given charge of the school. During her tenure of 16 long years the school progressed remarkably. She was succeeded by Mr.A.Ponnuthurai .It was on his great effort the school was blessed with a new block of dimension 100' X 20', it possessed the new name Bt/Pavatkodichenai Vinayagar Vidyalayam and had the privilege of having classes up to Grade Five.

In the course of its after growth, the school has enjoyed the careship and fostering of a good number of conscientious principals and teachers. It is by their collective effort, with the combination of assistance given by parents, past-pupils and well wishers, the school has been going on a forward march towards prosperity. In 2005, the school proudly started the G.C.E O/L class. However, the war-time situation had encumbered the efficiency of production and only in 2010 the school succeeded in getting the children qualified to follow the A/L classes.

At present, the school caters to the needs of 356 students who belong to 13 villages, in the careship and concern of the Principal and a staff of 16 members .They render maximum service of hard toil under minimum facilities and limited amenities. We do hope that the basic needs of the school will soon be met and the catchment area will greatly benefit from its enhanced quality of service.

**MR.K.KUMARESAN**

**(Teacher)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Impediments to the Systematic Progress in Learning.**

A long survey has brought to light the following facts as factors that cause adverse effect in achieving high level in education in the locality.

- The unaffordability of the parents to find time to be with their children to cater to their educational needs. Majority of them are engaged in manual labour such as transporting and selling firewood and vegetable produces, working in the paddy-field and farms and doing vendor's jobs.

- Many parents are of little education and therefore are incompetent to help their children in their studies at home.

- Home conditions and environmental conditions are in many cases found to be not conducive to concentrate in studies.

- Many houses are situated in areas vulnerable to attacks or encroachment of wild animals mainly of elephants and therefore all the family members have to vigilant, restless and in tension in the desperate hours forgoing studies.

- Lack of transport facilities and the long walking distance to school discourages regular attendance and results in retardation in the progress in learning.

- Problems, disputes, quarrels, separation and divorse that occur in the families are another factor that damages the intimacy of the members and the bitterness causes a psychological impact on children to neglect studies.

- Adverse weather, monsoonal rains and floods cause drop in attendance and this results in slowing down in progress.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Non-availability in proximity, of resources such as libraries, hospitals, departments, local government institutes, post-offices, banks and markets that provide data, first hand i nformations, illustrations and explanations related to the subject matters in the textbooks is a drawback in gathering knowledge.

- The children are very often compelled to stay at home and help their parents in attending to the routine chores. They are sometimes sent to find some odd jobs to earn money to support the family .In some cases the children are entrusted with baby –sitting, absenting themselves from school.

- Lack of hospital facilities plays another major role in affecting the education of children .This short coming tends to prolong the illness of children and they are made to keep away from school for a long period. This, causes an adverse effect in their progress in learning.

- We do hope that the villages around the school will rapidly develop and become
  conducive to produce high yield in the harvest of education

**MR.K.KUMARESAN**
**( Teacher)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் மனதை விட்டு மாறாத பள்ளிப்பருவ நாட்கள்

வேகமாய் ஓடிய என் வாழ்க்கை என்னும்-வாகனத்தில்
நின்று திரும்பிப் பார்த்தேன் - பாடசாலை
நினைவு என்னில் எட்டிப்பார்த்தது..
என் கல்விச்சாலையாம் பாவை விநாயகரில்
உள் நுளையும் வேளையிலே எனக்குள்
பல மாறுதல்கள் பிரகாசித்தன.
ஆரியாத வயதினிலே புரியாத புதிராய்
கொண்டு சேர்ந்தனர் எனது பெற்றோர்
பாவை விநாயகர் வித்தியாலயம்தனில்
அன்று ஆண்டோ இரண்டாயிரத்து மூன்று
வயதோ ஆறு
கடந்தது சென்ற காலத்தின் போக்கில் - அன்று
மாணவனாய் சென்ற நான் இன்று
பழைய மாணவனாய் உட்செல்கின்றேன்.
இவவே எனக்குள் எழுந்த முதல்மாறுதல்.

காலங்கள் மாறினாலும் நேரங்கள்
கடந்தாலும் - என் இனிய
பாடசாலை நாட்கள் என்றுமே என் மனதை விட்டு
அகலாரி வகையில் வேருன்றியுள்ளன
என் இதயத்துடிப்பிற்கு அர்த்தம் தேடித்தந்த என்
பாவை விநாயகர் வித்தியாலயமே நீ
எனக்குள் ஏற்படுத்திய மாற்றங்கள் என்றும் மாறாது

தோழர்களுடன் கூட்டமாக பள்ளிச்சூழலை
சுற்றியது.
கணிதப் பாட ஆசிரியரைக் கண்டதும் ஒடி
ஒழித்தது
ஆங்கிலப் பாடம் என்றாலே ஆசிரியர் வகுப்பிற்கு
வரக்கூடாது என்று இறைவனை வேண்டியது...
மாணவர் தலைவர்களாக பதவியேற்றது.. அதிலும்
கடமையை சரியாக செய்ததாக பாராட்டுப் பெற்றது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் அருமை ஆசான் சவீந்திரராஜாவை இழந்து
கண்ணீர் சிந்தியது - இவ்வாறு
மறையாது திரியும் என்னங்கள் என்றுமே
மாறாது. ..

என் வாழ்வின் உயர்ச்சிக்காய் நல் வழிகாட்டி
நல்லாசிகளை வழங்கியதோடு மட்டுமன்றி
காலத்தின் மாற்றத்தின்கேற்ப வாழவும் வழிகாட்டிய
என்னருமை ஆசான்களையும் வழங்கிய
என் பள்ளிக்கூடமே உனக்கு எனது
கோடானகோடி நன்றிகள்...

அன்றுமுதல் இன்றுவரை வாழ்வில்
இன்பம் என்பது பள்ளியில் மட்டுமே
என்பதை எனக்குணர்த்திய எந்தன்
பாவை விநாயகர் வித்தியாலயமே
உன் வளர்ச்சிக்காய் என்றும் என் பயனம்
தொடரும்

க. தனேஸ்பரன்
பழைய மாணவர்
(2013 O/L Batch)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>கவிதை</u>

## ஆசிரியர்

கனவின முற்ற பூவுலகில் நாளும்
கல்வி எனும் செல்வமடா கவரும் செல்வம்
எவ்வகையில் ஈடேறி வாழ்ந்திட்டாலும் – இச்
செல்வம் இல்லையெனில் இருள் வாழ்வப்பா.

பாலூட்டும் அன்னையவள் தெய்வமென்பர்
பாரினில் அறிவூட்டும் மேதையை தந்தை என்பர்
எவரையும் என் நெஞ்சம் ஏற்காதப்பா
என் கண்ணைத் திறந்து வைத்த குருவே தெய்வம்

நாடாளும் மாமன்னர் ஆனால் என்ன
நலன்மிக்க நீதிபதி ஆனால் என்ன
கோடான கோடி மேதை எல்லோருக்கும்
குரு தானே கண் திறந்து வைத்த தெய்வம்

அன்னை ஈன்றெடுத்தாள் பேர்வைத்து உணவுதந்தாள் – ஆனால்
நாவில் எழுதி நற்பண்பையும் நிலைநாட்டி
பிஞ்சு விரல் பிடித்து அன்பால் எழுதவைத்த
ஈகை பொற்காலமடா என்றென்றும் ஆசிரியர்

சா. ஜஜேந்தினி
தரம் - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அவசியம்

கனவு மெய்ப்பட வேண்டும் - அதற்கு
கல்வி உன் வாசப்பட வேண்டும்
பட்டம் கிடைத்திட வேண்டும் - அதற்கு
நீ கல்வி கற்றிட வேண்டும்

பதவி கிடைத்திட வேண்டும் - அதற்கு
நீ கல்வியை உணர்ந்திட வேண்டும்
ஆட்சி அதிகாரம் வேண்டும் - அதை
நீ வென்றாடி கல்வியே வேண்டும்

மருத்துவரும் செய்திட வேண்டும் - அதற்கு
நீ கல்வியை கற்றறிய வேண்டும்
வாழ்க்கையை வென்றிட வேண்டும் - அதற்கு
நீ வாழ்க்கை கல்வியை தெரிந்திட வேண்டும்

பரிசை பெற்றிட வேண்டும் - அதற்கு
நீ கல்வியின் வென்றிட வேண்டும்
இலட்சியத்தை போக்கிட வேண்டும் - அதற்கு
நீ கல்வியில் முன்னேற வேண்டும்

கல்வியே நம் நிகழ்காலம் - அதுவே
நம் எதிர்காலம்

சி.கிருஷாந்தினி
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்திபெற்ற மாணவர் விபரம் 2014-2016

| இல | மாணவர் பெயர் | வருடம் |
|---|---|---|
| 01 | ச.பிரசாத் | 2014 |
| 02 | ந.குணசிவருபன் | 2014 |
| 03 | ப.துர்சிகாந் | 2014 |
| 04 | ச.டனுதினி | 2014 |
| 05 | ச.பேரின்பவாணி | 2014 |
| 06 | ந.குபனிதா | 2014 |
| 07 | த.துசயந்தினி | 2014 |
| 08 | ப.கிருஷாயினி | 2014 |
| 09 | க.பானுமதி | 2014 |
| 10 | ச.நிதுர்சிக்கா | 2014 |
| | | |
| | | |

| இல | மாணவர் பெயர் | வருடம் |
|---|---|---|
| 01 | ஜெ.திபாகரன் | 2016 |
| 02 | சி.டனுராஜ் | 2016 |
| 03 | க.யோகேஸ் | 2016 |
| 04 | கி.ஜெயபிரகாஸ் | 2016 |
| 05 | ப.பிரதாஸ் | 2016 |
| 06 | ஜெ.மதுசன் | 2016 |
| 07 | ப.நிரோஜிதன் | 2016 |
| | | |

| இல | மாணவர் பெயர் | வருடம் |
|---|---|---|
| 01 | த.சுரேஸ்குமார் | 2015 |
| 02 | லெ.வினோஜன் | 2015 |
| 03 | வி.தயாபரன் | 2015 |
| 04 | சி.கோகுலராஜ் | 2015 |
| 05 | சு.ஜெயசீலன் | 2015 |
| 06 | சா.சுஜந்தன் | 2015 |
| 07 | த.முருகமூர்த்தி | 2015 |
| 08 | சி.டினேஸ்வரன் | 2015 |
| 09 | பா.ஜெயக்குமார் | 2015 |
| 10 | சி.தினேஸ்கரன் | 2015 |
| 11 | ஜெ.திபேஸ்கரன் | 2015 |
| 12 | ச.கணகசூரியம் | 2015 |
| 13 | க.சிறிதரன் | 2015 |
| 14 | த.பவித்தா | 2015 |
| 15 | த.பதிவித்ரா | 2015 |
| 16 | ப.ஜெயராணி | 2015 |
| 17 | த.சோகினி | 2015 |
| 18 | ஜீ.டிலக்ஷா | 2015 |

- பல்கலை கழகத்திற்கு தெரிவான பழைய மாணவர்கள்

| இல | மாணவர் பெயர் | வருடம் |
|---|---|---|
| 01 | ந.தமயந்தி | 2006 GCE (O/L) |
| 02 | தி.பிரதீபா | 2006 GCE (O/L) |
| 03 | வி.தனிஸ்கா | 2010 GCE (O/L) |
| 04 | கோ.வினோதா | 2010 GCE (O/L) |
| 05 | க.ரதீஸ் | 2011 GCE (O/L) |
| 06 | சி.விஜிராஜ் | 2011 GCE (O/L) |
| 07 | லெ.அனுஜன் | 2013 GCE (O/L) |
| 08 | ந.குணசிவரூபன் | 2014 GCE (O/L) |
| 09 | ச.டனுதினி | 2014 GCE (O/L) |
| 10 | க.பானுமதி | 2014 GCE (O/L) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு (மாகாணமட்டம்)

| இல | மாணவர் பெயர் | நிகழ்ச்சி | இடம் | வருடம் |
|---|---|---|---|---|
| 01 | க.கஜாநிதி | 1500m | 2ம் இடம் | 2015 |

➢ தரம் 05 புலமை பரிசில் பரீட்சையில் 100புள்ளிக்கு மேல்பெற்ற மாணவர்கள்

| இல | மாணவர் பெயர் | வருடம் |
|---|---|---|
| 01 | கி.தர்சிக்கா | 2014 |
| 02 | கா.கார்த்திகா | 2014 |
| 03 | க.சகானா | 2014 |
| 04 | மு.சதுர்சன் | 2014 |
| 05 | ஜெ.புவேஸ் | 2014 |
| 06 | அ.ரஜித் | 2014 |
| | | |
| 07 | அ.வஜிதரன் | 2015 |
| 08 | ச.லோகராஜ் | 2015 |
| 09 | பே.துவாரகா | 2015 |
| 10 | ப.கனிஸ்டா | 2015 |
| 11 | த.யுதன் | 2015 |
| | | |
| 12 | க.ஜதுசா | 2016 |
| 13 | சி.மேதினி | 2016 |
| 14 | ப.ருசா | 2016 |
| | | |
| | | |

➢ சிரேஷ்டமாணவ தலைவர்கள் விபரம்

- ப. துர்சிக்காந் 2014
- சி.பேரின்பவாணி 2014
- சி.டினேஸ்வரன் 2015
- யோ.ரதிகுலதேவி 2015
- கு.யோகேஸ் 2016
- ச.சஜனிக்கா 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➤ வருடத்தில் அதிக நாட்கள் பாடசாலைக்கு சமூகமளித்த மாணவர் விபரம் 2014- 2016

| தொ.இல | மாணவர் பெயர் | தரம் | ஆண்டு |
|---|---|---|---|
| 01 | ப.மிதுசன் | 01,02,03 | 2014,2015,2016 |
| 02 | க.அக்ஷயன் | 02,03 | 2014,2015 |
| 03 | ப.கவிப்பிரகாஷ் | 03 | 2014 |
| 04 | ப.ருஷா | 03,04,05 | 2014,2015,2016 |
| 05 | ச.லோகராஜ் | 04 | 2014 |
| 06 | ப.ருக்கா | 05,06 | 2014,2015 |
| 07 | கா.கார்த்திகா | 05 | 2014 |
| 08 | சி.சிதுர்ஷன் | 06,07,08 | 2104,2015,2016 |
| 09 | மோ. சதா | 07 | 2014 |
| 10 | தி.வினோத் | 08 | 2014 |
| 11 | க.யோகேஸ் | 09,10 | 2014.2015 |
| 12 | கு.லதா | 10 | 2014 |
| 13 | ச.பிரசாந் | 11 | 2014 |
| 14 | ச.உ.ஜாகினி | 01 | 2015 |
| 15 | சி .பவிராஜ் | 02 | 2015 |
| 16 | மு.றஞ்ஜா | 05 | 2015 |
| 17 | ஆ.கரிஸ் | 06 | 205 |
| 18 | நா.நிதுஜா | 07 | 2015 |
| 19 | சி.இலங்கேஸ்வரி | 08 | 2015 |
| 20 | வீ.லக்ஷன் | 09 | 2015 |
| 21 | சி.டினேஸ்வரன் | 11 | 2015 |
| 22 | சி.தினேஸ்கரன் | 11 | 2015 |
| 23 | சு.அகிலா | 11 | 2015 |
| 24 | சி.டினுக்ஷி | 01 | 2016 |
| 25 | வி.ரோகிதன் | 02 | 2016 |
| 26 | பே.புஸ்பகாந் | 04 | 2016 |
| 27 | சி.மனோராஜ் | 06 | 2016 |
| 28 | சி.லுக்ஷிக்கா | 07 | 2016 |
| 29 | வ.கிதுர்ஷனா | 08 | 2016 |
| 30 | P.கீர்த்தனா | 09 | 2016 |
| 31 | சி.வாணி | 10 | 2016 |
| 32 | சு.கஜாயினி | 10 | 2016 |
| 33 | கி.ஜெயப்பிரகாஸ் | 11 | 2016 |

3ஆம் தவணைப் பரீட்சையில் முதலாம் இடம் பெற்ற மாணவர் விபரம் -2014 - 2016

| தொ.இல | மாணவர் பெயர் | தரம் | ஆண்டு |
|---|---|---|---|
| 01 | ப.ருசா | 03,04,05 | 2014,2015,2016 |
| 02 | த.யூதன் | 04,05,06 | 2014,2015,2016 |
| 03 | க.சகானா | 05,06A,7A | 2014,2015,2016 |
| 04 | சி.கிருஷாந்தினி | 06 | 2014 |
| 05 | ந.நிசவர்த்தனா | 7A,8A,9A | 2014,2015,2016 |
| 06 | சி.இலங்கேஸ்வரி | 7B,8B,9B | 2014,2015,2016 |
| 07 | கு.சஜிவன் | 08,09 | 2014,2015 |
| 08 | கி.ஜெகப்பிரகாஷ் | 09,10,11 | 204,2015,2016 |
| 09 | சி.டினேஸ்வரன் | 10A,11 | 2014,2015 |
| 10 | ப.ஜெயராணி | 10B | 2014 |
| 11 | ப.பிரசாந் | 11 | 2014 |
| 12 | தி.வினோஜா | 03 | 2015 |
| 13 | கா.கார்த்திகா | 6B,7B | 2015,2016 |
| 14 | வ.தினேஸ்காந் | 07 | 2015 |
| 15 | யோ.வஜி | 03 | 2016 |
| 16 | மு.டிலக்சினி | 04 | 2016 |
| 17 | நா.நிதுஜா | 08 | 2016 |
| 18 | சி.வாணி | 10 | 2016 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ தேசிய சாரணர் பாசறை

| தொ.இல | மாணவர் பெயர் | தரம் | ஆண்டு |
|---|---|---|---|
| 01 | சி.டினேஸ்வரன் | 11 | 2016 |
| 02 | சி.தினேஸ்கரன் | 11 | 2016 |
| 03 | ச.பிரசாத் | $11^{R}$ | 2015 |
| 04 | ச.கார்த்திகேயன் | $11^{R}$ | 2015 |

➢ குறைந்த விடுமுறைக்காக கௌரவிக்கப்படும் அதிபர், ஆசிரியர்கள்

| தொ.இல | மாணவர் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 01 | வ.புஸஷ்பாகரன் | 2014 |
| 02 | க.சௌந்தரராஜன் | 2015 |
| 03 | சு.ரவிசங்கர் | 2016 |

➢ விஞ்ஞான வினாடி வினா போட்டி (கோட்டமட்டம்)

| தொ.இல | மாணவர் பெயர் | தரம் | இடம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 01 | த.யூதன் | 06 | 03ம் | 2016 |

➢ சமுக விஞ்ஞானப்போட்டி (வலயமட்டம்)

| தொ.இல | மாணவர் பெயர் | தரம் | இடம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 01 | க.யோகேஸ் | 09 | 02 | 2014 |
| 02 | சி.டினேஸ்வரன் | 10 | 01 | 2014 |
| 03 | சி.இலங்கேஸ்வரி | 08 | 01 | 2015 |
| 04 | கு.சஜீவன் | 09 | 01 | 2015 |
| 05 | சி.டினேஸ்வரன் | 11 | 03 | 2015 |
| 06 | சி.இலங்கேஸ்வரி | 09 | 01 | 2016 |
| 07 | சு.கஜாயினி | 10 | 01 | 2016 |
| 08 | க.யோகேஸ் | 11 | 02 | 2016 |

➢ அனர்த்தப்பாதுகாப்பு போட்டி (வலயமட்டம்)

| தொ.இல | மாணவர் பெயர் | தரம் | இடம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 01 | க.யோகேஸ் | 09 | 01 | 2014 |
| 02 | ஜீ.திபாகரன் | 09 | 02 | 2014 |
| 03 | சி.கிரிசாந்தினி | 07 | 02 | 2015 |
| 04 | மா.பிரியா | 07 | 03 | 2015 |
| 05 | நா.வினுஸ்காந் | 02 | 09 | 2015 |
| 06 | சி.டினேஸ்வரன் | 03 | 11 | 2015 |

- English Competition
    1. S.Shathuja - 3Rd place bee Competition - 2014
    2. P. Praveena - 1St place cursive writing Divisional level - 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தினம், ஏனைய போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர் விபரம்

1. கு. சஜீவன்- செய்தி வாசித்தல் போட்டி - தேசியமட்டம்
2. யோ. யோசிதா - பேச்சுப்போட்டி - மாகாணமட்டம்
3. ஜீ. டிலக்ஜா - பேச்சுப்போட்டி - வலயமட்டம்
4. போ. ரதிகுலதேவி - பேச்சுப்போட்டி - வலயமட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**ACHIEVEMENT IN SPORTS FROM 2006 - 2017**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | A. Yasotha | 17G | 800m | First |
| | | | 1500m | First |

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2008 ZONEL LEVEL ATHELETIC MEET**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| | K. VIththiya | 17G | 1500m | First |
| | | | 3000m | First |
| | S. Tharsini | 17G | Javelin | Second |
| | A. Yasotha | 19G | 800m | First |
| | | | 1500m | First |
| | | | 3000m | First |

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2009 DISTRICT LEVEL ATHLETIC MEET**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | K. Nishnthi | | 75m | Third |
| 02 | K.Danusha | | 100m | Third |
| 03 | N. Devasulaxsna | | javelin | First |
| 04 | M. Jayamathi | 17G | 1500m | First |
| 05 | S. Tharsini | 19G | Shut Put | First |
| 06 | A.Yasotha | 12G | 800m | First |
| | | | 1500m | First |
| | | | 5000m | First |
| 07 | S.Jeevarani | 17G | Discus | Third |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2009 PRIVINCLAL LEVEL ATHELE ATHELETIC MEET**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | A. Yasotha | 17G | 800m | First |
| | | | 1500m | First |
| | | | 5000m | First |
| 02 | M. Jayamathi | 17G | 1500m | Third |

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2010 ZONAL LEVEL ATHELETLC MEAT**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | M. Jayamathi | 17G | 1500m | First |
| | | | javelin | First |
| 02 | S. Jeevarani | 17G | Discus | First |
| 03 | A. Yasotha | 21G | 800m | First |
| | | | 1500m | First |
| | | | 500m | First |

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2010 DISTRICT LEVEL ATHELETIC MEET**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | A. Yasotha | 21G | 800m | First |
| | | | 1500m | First |
| | | | 5000m | First |

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2010 PROVINCIAL LEVEL AHELETIC MEET**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | A. Yasotha | 21G | 800m | First |
| | | | 1500m | First |
| | | | 5000m | First |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2010 ALLISLAND LEVEL ATHLETIC MEET**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | A. Yasotha | 21G | 800m | Second |
| | | | 1500m | Second |
| | | | 5000m | Second |

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2010 ALLISLAND LEVEL ATHLETIC MEET**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | M. Jayamathi | 19G | 500m | Second |
| | | | javelin | Second |

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2011 FROVINCIAL LEVEL ATHELETLC MEET**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | M. Jayamathi | 19G | Javelin | Second |

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2012 ZONEL LEVEL ATHELETIC MEET**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | M. Jayamathi | 19G | Shot put | First |

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2013 ZONEL LEVEL ATHELETIC MEET**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | M. Thanesparan | 19G | Discus | Third |
| 02 | P. Santhirakumar | 17G | High jump | First |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2014 ZONEL LEVEL THELETIC MEET**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | K. Vinojan | 13G | High jump | First |
| 02 | K. Yosesh | 15G | Shot put | First |
| 03 | K. Danusha | 17G | High jump | First |

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2015 ZONEL LEVEL**

| No | Name | Event | Place |
|---|---|---|---|
| 01 | K. Vinojan | 100m | 2$^{nd}$ place |
| | | High jump | 1$^{st}$ place |
| | | L. jump | 1$^{st}$ place |
| 02 | K. Kayanithi | javelin | 1$^{st}$ place |
| | | 800m | 1$^{st}$ place |
| | | 1500m | 1$^{st}$ place |

**2015 Provinciol Level**

| | | | |
|---|---|---|---|
| 01 | K. Kayanithi | 1500m | 2$^{nd}$ place |

**2016 Zovel Level**

| | | | |
|---|---|---|---|
| 01 | K. Kayanithi | 800m,1500m | 1$^{st}$ place |
| 02 | K. Danusha | High | 1$^{st}$ place |
| | | 100m | 2$^{nd}$ place |

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2009 PRIVINCLAL LEVEL ATHELE ATHELETIC MEET**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | K. Danusha | 17G | 100m | Secont |
| | | | High jump | First |
| | | | Long jump | First |
| 02 | K. Kayanitha | 17G | Javeling | First |
| | | | 800m | First |
| | | | 1500m | First |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2015 PROVINCIAL LEVEL**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | K.Kayanithi | 17G | 1500m | Second |

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2016 ZONEL LEVEL**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | K. Kayanithi | 19G | 800m | First |
| | | | High jump | First |
| 02 | K. Danusha | 19G | High jump | First |
| | | | Long jump | First |
| | | | 100m | Second |

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2017 ZONEL LEVEL**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | P. Rusha | 11G | Long jump | Second |

**BT/BW/PAVATKIDICHENAI VINAYAKAR VIDYALAYAM**
**2017 ZONEL LEVEL**

| No | Name | Age | Event | Place |
|---|---|---|---|---|
| 01 | K. Yokesh | 19G | Put shot | First |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அன்பளிப்பு




# காந்திநகர் ஸ்ரீ முருகன் ஆலய நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அன்பளிப்பு




































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org